# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs

Topic : Current Affairs – July 2021(Tamil)

**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# பொருளடக்கம்




வரலாறு 01




27 அரசியல் அறிவியல்



புவியியல் 30




41 பொருளாதாரம்



அறிவியல் 38

தினசரி தேசிய நிகழ்வு 44





சர்வதேச நிகழ்வு 62

தமிழ்நாடு 66



# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஜூன் 30 | சர்வதேச சிறுகோள்கள் தினம் | |
| ஜூலை 1 | மருத்துவர் தினம் | ▪ இந்தியாவின் புகழ்பெற்ற மருத்துவரும் மேற்கு வங்கத்தின் முதல்வருமான பிதான் சந்த்ர ராய் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 1–ஆம் நாள் "இந்திய மருத்துவர்கள் நாள்" கடைப்பிடிக்கப்படுகிறது. |
| ஜூலை 1 | தேசிய தபால் பணியாளர்கள் தினம் | ▪ தேசிய தபால் பணியாளர்கள் தினம் ஜூலை 1ல் 1997ல் அமெரிக்காவில் துவங்கப்பட்டது. |
| ஜூலை 1 | பட்டய கணக்காளர்களுக்கு பிரதமர் வாழ்த்து | ▪ பட்டய கணக்காளர்கள் தினம் (ஜூலை 1) அனுசரிக்கப்பட்டதையொட்டி பிரதமர் மோடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். |
| ஜூலை 1 | ஸ்டேட் வங்கியின் 66வது உருவாக்க தினம் | ▪ மெட்ராஸ் வங்கி மற்றும் இரண்டு மாகாண வங்கிகள் (கல்கத்தா & பாம்பே) ஒருங்கிணைக்கப்பட்டு 1955ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா தோற்றுவிக்கப்பட்டது. |
| ஜூலை 10 | தேசிய மீன்வளர்ப்பு விவசாயிகள் தினம் | ▪ மத்திய மீன்வளம், கால்நடை, பால்வள அமைச்சகம் சார்பில் Dr.K.H.அலக்குன்ஹி மற்றும் Dr.H.L.சவுத்திரி ஆகிய இரண்டு விஞ்ஞானிகளின் நினைவாக இந்த நாள் ஜூலை 10ல் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| ஜூலை 11 | உலக மக்கள்தொகை தினம் | ▪ 2021 ஆம் ஆண்டின் மையக்கருத்து – "Rights and Choices are the Answer: Whether baby boom or bust, the solution to shifting fertility rates lies in prioritising all people's reproductive health and rights." |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஜுலை 12 | உலக மலாலா தினம் | ▪ பாகிஸ்தானைச் சேர்ந்த இளம் மனித உரிமை ஆர்வலர் யூசுப்சாய் மலாலாவின் பிறந்த நாள் ஐக்கிய நாடுகள் சபையால் ஆண்டுதோறும் ஜுலை 12ல் உலக மலாலா தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. தன் 16வது பிறந்த நாளில் 2013ல் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் அவரது சிறப்பு உரையை ஆற்றினார். |
| ஜுலை 15 | உலக இளைஞர் திறன் தினம் | ▪ 2014ம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டது.<br>▪ மையக்கருத்து – "Reimagining Youth Skills Post–Pandemic." |
| ஜுலை 18 | சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் | ▪ தென் ஆப்பிரிக்காவின் முன்னாள் அதிபரின் பிறந்த நாளான ஜுலை 18 ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. |
| ஜுலை 20 | சர்வதேச செய்திதினம் | |
| ஜுலை 23 | தேசிய ஒளிபரப்பு தினம் | ▪ 1927ல் இந்தியாவில் முதல் வானொலி ஒலிபரப்பட்ட ஜுலை 23 ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஒலிபரப்பு தினமாக கொண்டாடப்படுகிறது. |
| ஜுலை 24 | வருமான வரி தினம் | ▪ மத்திய நேரடி வரிகள் வாரியம் 1860ல் சர் ஜேம்ஸ் வில்சன் இந்தியாவின் முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்த ஜுலை 24 ஆண்டுதோறும் வருமான வரி தினமாக கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.<br>**நேரடி வரிகள் வாரியம்**<br>▪ தலைவர் ஜகந்நாத் வித்யாதார் மோகபத்ரா<br>▪ துவக்கம் – 1924<br>▪ தலைமையிடம் – புது தில்லி |
| ஜுலை 26 | கார்கில் விஜய் திவாஸ் | ▪ 1999 கார்கில் போர் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்த ஆபரேஷன் விஜயின் நினைவாக ஆண்டுதோறும் ஜுலை 26 கார்கில் விஜய் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ கார்கில் போரில் உலகின் மிக உயரமான பணிபோர்களத்தில் 500க்கும் மேற்பட்ட வீரர்களை இந்தியா இழந்தது. |
| ஜுலை 28 | உலக ஈரல் அழற்சி தினம் | ▪ மையக்கருத்து – Hepatitis Can't wait. |
| ஜுலை 29 | சர்வதேச புலிகள் தினம் | ▪ மையக்கருத்து – Their Survival is in our hand. |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## பாலம் அமைக்கும் வாகனம்

- இந்திய ராணுவத்தில், இணைக்கப்பட்ட சிறு பாலம் அமைக்கும் வாகனம், அவசர காலத்தில் உடனடியாக பயன்பாட்டுக்கான இந்த வாகனத்தை ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கியது.

## பிரிட்டன் முப்படைத் தளபதியை சந்தித்தார் ராணுவ தலைமைத் தளபதி நரவணே

- பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ராணுவ தலைமை தளபதி எம்.எம்.நரவணே, அந்நாட்டு முப்படைத் தளபதி நிகோலஸ் கார்ட்டரை சந்தித்துப் பேசினார்.

## இத்தாலிய கடற்படை கப்பலுடன் ஐஎன்எஸ் தபார் பயிற்சி

- இத்தாலிய கடற்படை கப்பலுடன் இணைந்து ஐஎன்எஸ் தபார் கப்பல் பயிற்சி மேற்கொண்டது.
- மத்திய தரைக்கடலில் நடைபெற்றுவரும் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக ஐஎன்எஸ் தபார் கப்பல், இத்தாலியின் நேபிள்ஸ் துறைமுகத்துக்கு சென்றது. இந்திய கப்பலுக்கு இத்தாலிய கடற்படை உற்சாக வரவேற்பளித்தது. துறைமுகத்தில் தங்கியிருந்தபோது, கமாண்டிங் அதிகாரி கேப்டன் மகேஷ் மங்கிபுடி, நேப்பிள்ஸ் ஆணையகத்தில் மண்டல இத்தாலிய கடற்படை தலைமையகம் மற்றும் நேபிள்ஸில் உள்ள கடலோர காவல்படை தலைமையகத்தின் மூத்த அதிகாரிகளை சந்தித்துப் பேசினார்.
- இத்தாலிய கடற்படை முன்னணி கப்பலான ஐடிஎஸ் அன்டோனியோ மார்செக்லியாவுடன் கடல்சார் கூட்டணி பயிற்சியை ஜுலை 4 மற்றும் 5–ஆம் தேதிகளில் டிர்ஹெனியன் கடலில் ஐஎன்எஸ் தபார் கப்பல் மேற்கொண்டது.

## SPARSH [System for Pension Administration (Raksha)]

- பாதுகாப்பு அமைச்சகம் ஓய்வு பெறும் இராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகள் நேரடியாக ஓய்வூதியம் பெறுவதை எளிதாக்கும் வகையில் SPARSH என்ற திட்டத்ததை செல்படுத்துகிறது.
- பாதுகாப்பு கணக்காளர் மற்றும் SBI மற்றும் பஞ்சாப் நேஷனல் வங்கியின் ஒப்பந்தங்கள் மூலம் செயல்படுத்துகிறது.

## கேப்டன் குர்ஜிந்தர் சிங் சூரி

- எல்லைக்கோட்டு பகுதியில் 1999ம் ஆண்டு ஆபரேஷன் பிர்ஸா முண்டாவில் காலமான கேப்டன் குர்ஜிந்தர் சிங் சூரிக்கு போர் நினைவிடம் இந்திய இராணுவத்தால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- அவருக்கு அரசு ஏற்கெனவே மகாவீர் சக்ரா விருந்து அளித்து கௌரவப்படுத்தியுள்ளது.
- 1999 பாகிஸ்தான் போரில் நவம்பர் மாத்தில் பிர்ஸா முண்டா ஆபரேஷன் நடத்தப்பட்டது.
- ஆபரேஷன் விஜயின் நெருங்கிய காலத்திலேயே நடத்தப்பட்டது.

## தினமும் 16 சரக்கு கப்பல்களுக்கு கடற்படை பாதுகாப்பு

- தங்களது "சங்கல்ப்" நடவடிக்கையின் மூலம், தினமும் வளைகுடா வழியாகச் செல்லும் 16 கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதாக கடற்படை தெரிவித்தள்ளது.
- இதுகுறித்து கடற்படை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வளைகுடா கடல் பகுதியில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் நிலவி வரும் சூழலில், ஓமன் வளைகுடா பகுதியில் இரண்டு எண்ணெய்க் கப்பல்களில் கடந்த 2019–ஆம் ஆண்டு வெடிவிபத்து நேரிட்டது.
- அதனைத் தொடர்ந்து அந்த ஆண்டு ஜுன் மாதத்தில் "சங்கல்ப்" நடவடிக்கை தொடங்கப்பட்டது. அந்த நடவடிக்கையின் கீழ், வடமேற்கு அரேபியக் கடல் பகுதியில் ஹெலிகாப்டருடன் கூடிய இந்திய கடற்படை கப்பலொன்று எப்போதும் நிறுத்தப்பட்டு வருகிறது.
- அந்தவழியாகச்செல்லும்இந்தியகொடியேற்றப்பட்ட சரக்கு கப்பல்களில் இருப்பவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அங்கு கடற்படைக் கப்பல் நிறுத்தப்படுகிறது.
- இந்த நடவடிக்கையில், இதுவரை 23 போர்க் கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சராசரியாக தினமும் இந்திய கொடியேற்றப்பட்ட 16 சரகை'குக் கப்பல்கள் வளைகுடா பகுதியை பாதுகாப்பாகக் கடப்பதற்கு அந்தக் கப்பல்கள் உதவி வருகின்றன.

## கடல்சார் பாதுகாப்பு முத்தரப்புக் கூட்டம்: இந்தியா, இலங்கை, மாலத்தீவு

- கடல்சார் பாதுகாப்பு குறித்த முத்தரப்பு ஆலோசனைக் கூட்டத்தில் இந்தியா, இலங்கை, மாலத்தீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.
- இரு நாள்கள் காணொலி வழியாக நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தை மும்பையில் உள்ள கடல்சார் நல மையம் ஒருங்கிணைந்ததாக கொழும்பில் உள்ள இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:
- போதைப் பொருள் தடுப்பு, கடல்சார் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்ற அம்சங்களை மையமாக வைத்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கடல்சார் குற்றங்களைத் தடுக்க சிறந்த பயிற்சி நடைமுறைகளை பரஸ்பரம் புரிந்து கொள்வது, பரிமாற்றம் செய்வது குறித்து அதிகாரிகள் கலந்துரையாடினர்.
- அண்மையில் சிங்கப்பூரை சேர்ந்த சரக்கு கப்பல் 1,486 கன்டெய்னர்களில் ரசாயனங்கள் மற்றும் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வந்தபோது கொழும்பு துறைமுகம் அருகே தீப்பிடித்தது.

## இந்தியா–பிரிட்டன் கடற்படைகள் கூட்டுப் பயிற்சி

- இந்தியா–பிரிட்டன் கடற்படைகள் பங்கேற்கும் கூட்டுப்பயிற்சி இந்திய பெருங்கடல் பகுதியில் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டுப்பயிற்சியில் பிரிட்டனின் மிகப் பெரிய போர்க்கப்பலான ஹெச்எம்எஸ் குயின் எலிசபெத் பங்கேற்கிறது.
- இந்தோ–பசிபிக் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.
- அதைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கத்திய நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. கடற்படை வலிமையை வெளிக்காட்டும் நோக்கில் இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள சுமார் 40 நாடுகளுடன் தனித்தனியாகக் கூட்டுப்பயிற்சியை பிரிட்டன் மேற்கொண்டு வருகிறது.
- அதன் ஒரு பகுதியாக இந்தியா–பிரிட்டன் கடற்படைகள் இடையேயான கூட்டுப்பயிற்சி இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடைபெறவுள்ளது.

## எம்ஹெச்–60ஆர் அதிநவீன ஹெலிகாப்டர்கள்

- அமெரிக்காவிடம் இருந்து கொள் முதல் செய்யப்பட்ட இரு எம்ஹெச்–60 ஆர் அதிநவீன ஹெலிகாப்டர்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டன.
- அமெரிக்காவிடம் இருந்த 24 எம்ஹெச்–60 ஆர் ஹெலிகாப்டர்களை சுமார் ரூ.17,750 கோடி மதிப்பில் வாங்குவதற்கு இந்திய அரசு கடந்த ஆண்டு பிப்ரவரியில் ஒப்பந்தம் மேற்கொண்டது. அந்த ஹெலிகாப்டர்களை அமெரிக்காவின் லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனம் தயாரித்தது. அந்த ஹெலிகாப்டரில் பல்வேறு அதிநவீன தொழில்நுட்பங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்நிலையில், 2 எம்ஹெச்–60 ஆர் ஹெலிகாப்டர் களை இந்திய கடற்படையிடம் அமெரிக்கக் கடற்படை ஒப்படைத்தது. இதற்கான நிகழ்ச்சி அமெரிக்காவில் உள்ள சான்டி யோகோ கடற்படைத் தளத்தில் நடைபெற்றது.

## ஷீல்டு பயிற்சி

- இந்தியா–இலங்கை–மாலத்தீவு இடையேயான கூட்டு கடற்படை பயிற்சி ஷீல்டு சமீபத்தில் நடத்தப்பட்டு உள்ளது.
- போதைப் பொருள் கடத்தல் தடுத்தல் மற்றும் மீட்புப் படை குறித்து இங்கு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மித்ரா சக்தி–இந்தியா–இலங்கை இடையேயான பயிற்சிகள்.
- ஸிலினெக்ஸ்–இந்தியா–இலங்கை
- ஈகுவரின் பயிற்சி–மாலத்தீவுடன் நடத்தப்படுகிறது.

## ரூ.40,000 கோடியில் 6 பிரம்மாண்ட நீர்மூழ்கிக் கப்பல்கள்

- பிரம்மாண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை ரூ.40,000 கோடிக்கும் அதிகமான செலவில் உள்நாட்டிலேயே கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளியை பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இந்தியக் கடற்படையின் வலிமையை மேம்படுத்தும் நோக்கில் "பி–75 இந்தியா" என்ற திட்டத்தின் கீழ் 6 நீர்மூழ்கிக் கப்பல்களை சுமார் ரூ.40,000 கோடி செலவில் உள்நாட்டிலேயே கட்டுவதற்கு மத்திய அமைச்சரவை கடந்த மாதம் ஒப்புதல் அளித்தது.
- அதற்கான அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளியை பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டது.

மஸகான் டாக் கப்பல் கட்டும் நிறுவனம், லார்சன் & டூப்ரோ நிறுவனம் ஆகியவற்றுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- இத்திட்டத்தின் வாயிலாக, உள்நாட்டில் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டும் இரு நிறுவனங்களும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியைப் பெறவுள்ளன. வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் உள்நாட்டிலேயே நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்படுவது இதுவே முதல் முறையாகும்.

## ரஷிய சர்வதேச விமான கண்காட்சியில் இந்திய குழு பங்கேற்பு

- ரஷியாவின் சுகோவ்ஸ்கியில் நடைபெறும் மேக்ஸ் சர்வதேச விமானக் கண்காட்சியில் முதல் முறையாக இந்திய விமானப் படையின் சாரங் ஹெலிகாப்டர் சாகசக் குழு பங்கேற்றது.
- ரஷியாவில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேக்ஸ் சர்வதேச விமானக் கண்காட்சி நடைபெறுகிறது. இந்தக் கண்காட்சி இவ்வாண்டு ஜூலை 20 முதல் 25–ஆம் தேதி வரை சுகோவ்ஸ்கி நகர விமான நிலையத்தில் நடைபெறுகிறது.
- மேக்ஸ் சர்வதேச விமான கண்காட்சியில் முதல்முறையாக இந்திய விமானப்படையின் சாரங் ஹெலிகாப்டர் சாகசக் குழு பங்கேற்றது. முதல் நாளாக செவ்வாய்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் சாரங் குழு சாகசங்கள் நிகழ்த்தியது. மொத்தம் நான்கு சாகச நிகழ்ச்சியில் அந்தக் குழு பங்கேற்கிறது.
- இந்தக் கண்காட்சியில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன இலகுரக"துருவ்" ஹெலிகாப்டர்கள் அடங்கிய சாரங்க ஹெலிகாப்டர் குழு பல்வேறு சாகச நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

## கடற்படை ஹெலிகாப்டர் விற்பனையால் இந்தியாவுடன் ஒத்துழைப்பு மேம்படும்

- இந்தியாவுக்கு இரு கடற்படை ஹெலிகாப்டர் களையும் பி–8 பொசைடன் கண்காணிப்பு விமானத்தையும் விற்பனை செய்வதால் இருதரப்பு ஒத்துழைப்பு மேம்படும் என்று அமெரிக்க முப்படைகளின் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.
- இது குறித்து பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி செய்தியாளர்களிடம் கூறியதாவது:
- அமெரிக்க கடற்படையிடமிருந்து 24 எம்ஹெச்–60 ஆர்சீஹாக் ரக ஹெலிகாப்டர்களை இந்தியக் கடற்படை கடந்த வாரம் பெற்றது.

## பீரங்கி ஏவுகணை சோதனையும் வெற்றி

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பீரங்கிகளைத் தாக்கி அழிக்கும் இலகுரக ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர். டி.ஓ) வெற்றிகரமாக பரிசோதித்தது.
- மத்திய அரசின் தற்சார்பு இந்தியா திட்டத்துக்கு மிகப் பெரிய ஊக்கம் தரும் வகையிலும், இந்திய ராணுவத்தை வலுப்படுத்தும் நோக்கிலும் இந்த ஏவுகணை தயாரிக்கப்பட்டது.
- இது குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:
- கையில் எடுத்துச் செல்லக் கூடிய லாஞ்சரில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டது. பீரங்கி போன்று உருவாக்கப்பட்டிருந்த இலக்கை, இந்த ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழித்தது.
- இதன் மூலம் குறைந்த தூரத்தில் உள்ள இலக்கை தாக்கும் சோதனை வெற்றிகரமாக முடிந்தது. அதிகபட்ச தூரம் செல்லும் சோதனையை, இந்த ஏவுகணை ஏற்கெனவே வெற்றிகரமாக முடித்தது. இந்த ஏவுகணையில் அதிநவீன மிகச்சிறிய அகச்சிவப்பு இமேஜிங் கருவி மற்றும் மேம்பட்ட ஏவியானிக்ஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- இந்த சோதனை மூலம், கையில் எடுத்துச் செல்லக்கூடிய 3–ஆம் தலைமுறை ஏவுகணையை உருவாக்கும் திட்டம் நிறைவேறியுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஏவுகணை சோதனை வெற்றிகரமாக முடிந்ததற்கு டி.ஆர்.டி.ஓ. மற்றும் தொழில்துறையினருக்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார். இந்த வெற்றிகர சோதனைக்காக, அந்த குழுவினருக்கு டி.ஆர். டி.ஓ. தலைவர் ஜி.சதீஷ் ரெட்டியும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

## புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணை சோதனை வெற்றி

- நிலத்தில் இருந்து விண்ணில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ.) வெற்றிகரமாக சோதித்தது.
- இதுகுறித்து பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:
- ஒடிஸா கடற்கரைப் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை மையத்தில் இருந்து ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

- ஆகாஷ் ஏவுகணை (ஆகாஷ்–என்.ஜி.) நிலத்தில் இருந்து 60 கி.மீ. தொலைவு வரை விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் சக்தி கொண்டது. இந்த ஏவுகணையை 2.5 மாக் வேகம் வரை செலுத்த முடியும்.

### கடல்சார் பயிற்சி: கட்லாஸ் எக்ஸ்பிரஸ் 2021

- கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரை பகுதியில் கென்யாவின் மம்பாசாவில் நடைபெற்ற கட்லாஸ் எக்ஸ்பிரஸ் 2021 பன்னாட்டு கடல்சார் பயிற்சியில் இந்தியா சார்பாக INS தல்வார் பங்கேற்றது.

### இந்தியா–ரஷ்யா கூட்டு ராணுவ பயிற்சி

- 12வது இந்தியா–ரஷ்யா இராணுவ கூட்டுப் பயிற்சி INDRA–2021 ரஷ்யாவின் வோல்சாகிராடில் நடைபெற்றது.

### 36–வது CORPAT பயிற்சி

- இந்தியா இந்தோனேசியா இடையிலான கடற்படை பயிற்சி CORPAT இந்திய பெருங்கடல் பகுதியில் 30, 31 ஜுலையில் நடைபெறுகிறது.
- INS சர்யு, KRI பங்தோமோ போன்றவை இந்த பயிற்சியில் பங்கு பெறுகின்றது.

## 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு

- உஸ்பெகிஸ்தான் நாட்டின் தாஷ்கண்ட்ல் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பால் உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது.
- ஆப்கானிஸ்தானின் வருங்காலம் குறித்து அங்கு விவாதிக்கப்பட்டது.

SCO – Shanghai Cooperation Organization

- துவக்கம் – 2001
- தலைமையிடம் – பீஜிங் சீனா
- உறுப்பு நாடுகள் – சீனா, ரஷ்யா, தஜகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான்

### ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பினராகும் தகுதியை நிரூபிப்போம்

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா சிறப்பாக செயலாற்றி, அந்த அமைப்பின் நிரந்தர உறுப்பினராகும் தகுதியை நிரூபிக்கும் என்று வெளியுறவுத் துறைச் செயலர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்துள்ளார்.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் இரு முக்கிய கூட்டங்களில் பங்கேற்பதற்காக அவர் நியூயார்க் வந்துள்ளார். அவரை வரவேற்பதற்காக அந்த நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இதுகுறித்து ஷ்ரிங்லா பேசியதாவது:
- அடுத்த மாதம் ஐ.நா.வில் இந்தியாவுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பு கிடைத்துள்ளது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஆகஸ்ட் மாதம் முழுவதும் வகிக்கும்.
- பாதுகாப்பு கவுன்சிலின் உறுப்பினராக இரண்டு ஆண்டுகள் செயலாற்ற எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை மிக முழுமையாகப் பயன்படுத்திச் செயல்படுவோம். எங்களது சிறப்பான பங்களிப்பின் மூலம், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராகும் தகுதியை நிரூபிப்போம்.

### உலக உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அறிக்கை – 2021

- ஐ.நா. உலக உணவு வேளாண்மை அமைப்பால் (UN–FAO) இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது.
- உலக உணவு அமைப்பு, சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியம் (IFAD) ஆகியவை இணைந்து வெளியிடுகின்றன.
- உலக அளவில் 811 மில்லியன் மக்கள் பசியால் வாடுவதாகவும் அதில் பாதி அளவான 418 மில்லியன் ஆசியாவிலும் உள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது.
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 22% பேர் குறை வளர்ச்சியால் பாதிக்கப்படுகின்றனர்.

### அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஒப்புதல்

- பிராந்திய நாடுகளிடையே போக்குவரத்துத் தொடர்பை மேம்படுத்தும் நோக்கில் ஒரு புதிய நாற்கர கூட்டமைப்பை உருவாக்க அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
- அமெரிக்கா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நான்கு நாடுகளும், பிராந்திய போக்குவரத்துத் தொடர்பை மேம்படுத்துவதற்கான புதியதொரு நாற்கரக் கூட்டமைப்பை உருவாக்க கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளன.

### தஜிகிஸ்தானில் எஸ்சிஓ மாநாடு: ராஜ்நாத் சிங் பங்கேற்பு

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தஜிகிஸ்தான் புறப்பட்டுச் சென்றார்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் 8 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. அந்த நாடுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாடு, தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேவில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக, மூன்று நாள் பயணமாக ராஜ்நாத் சிங் தஜிகிஸ்தானுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## 1.4 சிறந்த நபர்கள்

### C.T.குரியன்

- பொருளாதார பேராசிரியர் C.T.குரியனின் பங்களிப்புகளை கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் பாராட்டியுள்ளார்.
- C.T.குரியன் மெட்ராஸ் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் இயக்குனராக பணிபுரிந்தவர் சமூக பொருளாதார நீதியை பெரிதும் போதித்தவர்.

### தலாய்லாமாவின் பிறந்த தினம்: பிரதமர் வாழ்த்து

- தலாய்லாமாவின் 86–ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டதையொட்டி அவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

### சியாமா பிரசாத் முகர்ஜி பிறந்த நாள்

- பாரதிய ஜன சங்கத்தின் நிறுவனரான சியாமா பிரசாத் முகர்ஜியின் பிறந்த நாளான (ஜுலை 6) குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அவரை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தினார்.
- 1901 ஜுலை 6–ஆம் தேதி கொல்கத்தாவில் பிறந்த சியாமாபிரசாத் முகர்ஜி, நாட்டின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு தலைமையிலான அமைச்சரவையில் வர்த்தகம், தொழில்துறை அமைச்சராகப் பணியாற்றியுள்ளார். அதற்கு முன்பு பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அப்போதைய வங்க மாகாணத்தின் நிதியமைச்சராகவும் இருந்துள்ளார்.

### பழம்பெரும் ஹிந்தி நடிகர் திலீப் குமார் மறைவு

- பழம்பெரும் ஹிந்தி நடிகர் திலீப் குமார் உடல்நலக் குறைவு காரணமாக, மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் காலமானார்.
- பாகிஸ்தானின் பெஷாவர் நகரில், 1922–ஆம் ஆண்டு டிசம்பர் 11–ஆம் தேதி திலீப் குமார் பிறந்தார். அவரது இயற்பெயர் யூசுஃப் கான். 1944–ஆம் ஆண்டில் ஜ்வார் பாடா என்ற திரைப்படத்தில் அறிமுகமானார். அப்போதிலிருந்து, 1998–இல் வெளிவந்த கிலா திரைப்படம் வரை, 54 ஆண்டுகள் திரையுலகில் பயணித்தார். இந்தக் காலகட்டத்தில் அவரது நடிப்பில் வெளியான முகல்–ஏ–ஆஸம், தேவதாஸ், தியா தௌர், ராம் ஔர் ஷ்யாம் ஆகியவை நல்ல வரவேற்பைப் பெற்றன.

### இரட்டைமலை சீனிவாசன் பிறந்தநாள்

- இரட்டைமலை சீனிவாசன் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை காந்தி மண்டப வளாகத்தில் உள்ள இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபத்தில் அமைந்துள்ள சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

### ஹாக்கி ஜாம்பவான் கேசவ் காலமானார்

- ஒலிம்பிக் ஹாக்கியில் இருமுறை தங்கம் வென்ற இந்திய அணியில் இடம்பிடித்திருந்த வீரர் கேசவ் தத் (95) வயது மூப்பு காரணமாக காலமானார்.

- மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் உள்ள சந்தோஷ்பூரில் அவரது இல்லத்தில் கேசவ் தத்தின் உயிர் பிரிந்ததாக நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

## ஹைட்டி அதிபர் மாய்ஸ்

- கரீபியன் பெருங்கடல் நாடான ஹைட்டியின் அதிபர் ஜோவனேல் மாய்ஸும் அவரது மனைவியும் அவர்களது இல்லத்தில் மர்ம நபர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

## இந்தியா வந்த 315ஆவது ஆண்டுதினம் சீகன் பால்கு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

- சீகன் பால்கு இந்தியா வந்ததன் 315–ஆவது ஆண்டு தினத்தையொட்டி, தரங்கம்பாடியில் உள்ள அவரது சிலைக்கு தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபையினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.
- ஜெர்மனி நாட்டை சேர்ந்த கிறிஸ்தவ மதபோதகர் சீகன் பால்கு, கடந்த 1706–ஆம் ஆண்டு ஜுலை 9–ஆம் தேதி கடல்மார்க்கமாக தரங்கம்பாடி வந்தார். தமிழைக் கற்றறிந்த அவர், ஜெர்மனியிலிருந்து அச்சு இயந்திரத்தை வரவழைத்து சிறிய அளவிலான தமிழ் எழுத்து அச்சுக்களை உருவாக்கினார்.
- நாட்டிலேயே முதல் முறையாக இயந்திரம் மூலம் காகிதத்தில் அச்சடிக்க கூடிய அச்சகத்தை நிறுவி, விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை தமிழில் அச்சடித்து வெளியிட்டார். மேலும் ஆசியாவிலேயே முதல் சீர்திருத்த சபையான புதிய எருசலேம் ஆலயத்தை 1718–இல் கட்டினார்.
- 13 ஆண்டுகள் தரங்கம்பாடியில் வாழ்ந்த அவர், தனது 36–ஆவது வயதில் காலமானார். அவரது வருகையை ஆண்டுதோறும் தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபையினர் கொண்டாடி வருகின்றனர்.
- அதன்படி நடைபெற்ற 315–ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு, தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபையை சேர்ந்தவர்கள், புதிய எருசலேம் ஆலய ஆயர் சாம்சன் மோசஸ் தலைமையில், பேரணியாக சென்று கப்பலிருந்து சீகன் பால்கு வந்திறங்கிய இடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## விண்வெளி செல்லும் 3–ஆவது இந்திய வம்சாவளிப் பெண்

- அமெரிக்காவின் வர்ஜின் கலாக்டிக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட விண்வெளி ஓடத்தில் செல்லும் குழுவுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீஷா பண்ட்லா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது குறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:
- அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் நிறுவனமான வர்ஜின் கலாக்டிக், மனிதர்களை ஏற்றிச் செல்லக்கூடிய "ஸ்பேஸ்ஷிப்–2 யூனிட்டி" என்ற தனது விண்வெளி ஓடத்தை சோதனை முறையில் விண்வளியில் செலுத்துகிறது.
- அந்த ஓடத்தில் வர்ஜின் கலாக்டிக் நிறுவன உரிமையாளரான சர் ரிட்டர்ட் பிரான்ஸனுடன் 6 பேர் செல்கின்றனர். அவர்களில் ஒருவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீஷா பண்ட்லா (34) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஆந்திரத்தில் பிறந்த அவர், அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணம், ஹுஸ்டானில் வளர்ந்தவர்.

## பிரபல ஆயுர்வேத மருத்துவர் பி.கே. வாரியர் மறைவு

- கேரளத்தைச் சேர்ந்த பிரபல ஆயுர்வேத மருத்துவரும், கோட்டக்கல் ஆரிய வைத்திய சாலையின் நிர்வாக அறங்காவலருமான பி.கே. வாரியர் காலமானார். அவருக்கு வயது 100.
- ஆயுர்வேத சிகிச்சைக்கு மிகவும் பிரபலமான கோட்டக்கல் ஆரிய வைத்திய சாலையில் உள்நாட்டினர் மட்டுமின்றி வெளிநாட்டினரும் ஆயுர்வேத சிகிச்சையை பெற்று வருகின்றனர். இதில், முன்னாள் குடியரசுத் தலைவர்கள், பிரதமர்கள் மற்றும் வெளிநாட்டினர் உள்பட பல ஆயிரம் பேருக்கு பி.கே.வாரியர் சிகிச்சை அளித்துள்ளார்.

## பேராசிரியர் சோ.சத்தியசீலன் காலமானார்

- மூத்த தமிழறிஞரும், இலக்கியவாதிகளில் ஒருவருமான "சொல்லின் செல்வர்" பேராசிரியர் சொ.சத்தியசீலன் (89) வயது முதிர்வால் (ஜுலை 9) காலமானார்.
- வள்ளலார் குறித்து இவர் பேசிய தொகுப்பு 6 ஒலி நாடாக்களாக வெளிவந்துள்ளன. இது மட்டுமின்றி, ஆங்கிலத்தில் மூன்று நூல்கள், தமிழ் மொழியில் 40 நூல்களை எழுதியுள்ளார். அவர்கள் இப்படி?, நீங்கள் எப்படி?, இலக்கியம் பேசும் இலக்கியம் (தன் வரலாறு), திருக்குறள் சிந்தனை முழக்கம், கண்டறியாதன கண்டேன், அழைக்கிறது அமெரிக்கா ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. தமிழக அரசின் கலைமாமணி, சொல்லின் செல்வர் விருதுகளை பெற்றவர். இலக்கிய அமைப்புகளிடம் இருந்து கம்பன் காவலர் விருது, கம்பன் விருது,

சடையப்ப வள்ளல் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றவர்.

## மாவீரன் அழகுமுத்துக்கோன்

- சுதந்திர போராட்ட வீரர் அழகுமுத்துக்கோனின் 311–ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை எழும்பூர் ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

## மலங்கரா ஆர்தடாக்ஸ் தேவாலயத்தின் முதன்மைத் தலைவர் காலமானார் பிரதமர் மோடி இரங்கல்

- இந்திய மலங்கரா ஆர்தடாக்ஸ்சிரியன் தேவாலயத்தின் முதன்மை தலைவரான 2–ஆம் பசேலியோஸ் மார்தோமா பவுலோஸ் காலமானார். பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## கிரிக்கெட் வீரர் யஷ்பால் சர்மா காலமானார்

- இந்திய கிரிக்கெட் வீரரும், 1983–இல் ஒருநாள் கிரிக்கெட்டில் உலக்கோப்பை வென்ற அணியின் மிடில் ஆர்டர்பேட்ஸ்மேனுமான யஷ்பால் சர்மா மாரடைப்பால் காலமானார்.

## அரசி கெட்டிவனின் நினைவு சின்னங்கள்

- 400 ஆண்டுகளுக்கு முன்பு ஈரானில் கொல்லப்பட்ட அரசி கெட்டிவானின் நினைவு சின்னங்கள் 2005–ம் ஆண்டு கோவாவில் கண்டெடுக்கப்பட்டது.
- அவற்றின் ஒரு பகுதியை வெளியுறவு அமைச்சர் S.ஜெய்சங்கர் ஜார்ஜிவா நாட்டிற்கு அன்பளிப்பாக சமீபத்தில் பரிசாக அளித்தார்.
- கோவாவில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் DNA பரிசோதனைக்கு பின்னர் உறுதி செய்யப்பட்டது.
- கோவாவிற்கும் ஜார்ஜியாவிற்கு இடையேயான தொடர்புடைய இந்த நினைவு சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

## ஜார்ஜியாவில் மகாத்மா காந்தி சிலை

- ஜார்ஜியாவில் திபிலிசி பூங்காவில் மகாத்மா காந்தியின் சிலையை வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் திறந்து வைத்தார்.
- 17–ம் நூற்றாண்டைச் சேர்ந்த அரசி கெட்டிவாவின் நினைவுச் சின்னங்கள் 2005 கோவாவில் கண்டெடுக்கப்பட்டது. அவற்றில் சிலவற்றையும் அந்நாட்டு அரசுக்கு பரிசாக அளித்தனர்.

## உலக குத்துச்சண்டை கூட்டமைவின் வீரர் "Mr.வொண்டர்புல் பால் ஒர்ன்டார்ப்"

- முன்னாள் உலக குத்துச்சண்டை கூட்டமைவின் வீரர் வொண்டர்புல் பால் ஒர்ண்டார்ப் சமீபத்தில் காலமானார்.

**உலக குத்துச்சண்டை கூட்டமைவு (WWE)**

- துவக்கம் –1980
- தலைமையிடம் – ஸ்டாஃபோர்டு அமெரிக்கா

## மறைமலையடிகள் பிறந்தநாள் விழா

- முதுபெரும் தமிழறிஞரும், தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையுமான மறைமலையடிகளின் 145–ஆவது பிறந்தநாள் விழா பல்லாவரத்தில் தமிழக அரசின் சார்பில் நடைபெற்றது.

## ஆப்கான் படைகள் – தலிபான்கள் மோதல்: இந்திய புகைப்பட பத்திரிகையாளர் பலி

- ஆப்கானிஸ்தானில் ராணுவத்தினருக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இந்திய புகைப்பட பத்திரிகையாளர் தானிஷ் சித்திக்கி (40) உயிரிழந்தார்.
- மகாராஷ்டிர மாநிலம் மும்பையைச் சேர்ந்த தானிஷ் சித்திக்கி தில்லியில் உள்ள ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் பொருளாதார படிப்பில் பட்டம் பெற்றவர். கடந்த 2007–ஆம் ஆண்டு ஜாமியாவில் உள்ள ஏஜேகே ஊடக கல்வி நிறுவனத்தில் மாஸ் கம்யூனிகேஷன் படிப்பில் பட்டம் பெற்றார்.
- செய்தித் தொலைக்காட்சியில் நிருபராக தனது பணியைத் தொடங்கிய அவர், பின்னர் புகைப்பட பத்திரிகையாளராகி கடந்த 2010–ஆம் ஆண்டு ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தில் பயிலுநராக சேர்ந்தார். மியான்மரில் ரோஹிங்கயா அகதிகள் எதிர்கொண்ட வன்முறை தொடர்பாக எடுத்த புகைப்படங்களுக்காக கடந்த 2018–ஆம் ஆண்டு அவருக்கு புலிட்ஸர் விருது வழங்கப்பட்டது.

## நாட்டின் முதல் பெண் மருத்துவருக்கு புகழாஞ்சலி

- நாட்டின் முதல் பெண் மருத்துவர்களில் ஒருவரான காதம்பினி கங்குலியின் 160–ஆவது பிறந்த தினத்தையொட்டி அவருக்குப் பல்வேறு தரப்பினரும் புகழாஞ்சலி செலுத்தினர்.

- ஆனந்தி ஜோஷியுடன் இணைந்து காதம்பினி கங்குலியும் பிரிட்டிஷ் இந்தியாவில் முதன்முதலாக மருத்துவம் படித்த பெண்களாக அறியப்பட்டனர்.
- இருவரும் 1886–இல் மருத்துவப் பட்டம் பெற்றனர். ஆனந்தி ஜோஷி, அமெரிக்காவின் பென்சில்வேனியா பெண்கள் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்றார். காதம்பினி கங்குலி, கொல்கத்தா மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்றார்.

## இந்தியாவின் மிக வயதான மாணவி பாகீரதி அம்மா

- 105–வது வயது வரை கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் மாணவியாக கல்வியை தொடர்ந்த பாகீரதி அம்மா சமீபத்தில் காலமானார்.
- மத்திய அரசின் நாரி சக்தி புரஸ்கார் விருது பெற்றவர்.

## திலகர், ஆசாத் பிறந்த தினம்: பிரதமர் மோடி புகழாரம்

- சுதந்திரப் போராட்ட தியாகிகள் பாலகங்காதர திலகர், சந்திரசேகர் ஆசாத் ஆகியோரின் பிறந்த நாளையொட்டி அவர்களுக்கு பிரதமர் மோடி புகழாரம் சூட்டினார்.
- இது தொடர்பாக அவர் கட்டுரையில் வெளியிட்ட பதிவுகளில் தெரிவிக்கப்பட்டிருந்தாவது:
- "மாபெரும் தலைவரான பாலகங்காதர திலகரின் பிறந்த நாளில் அவரை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். பொருளாதார ரீதியாக வளமான, சமூக ரீதியில் முற்போக்கான தற்சார்பு இந்தியாவை உருவாக்க 130 கோடி, இந்தியர்கள் முடிவு செய்துள்ள இவ்வேளையில், அவரின் கொள்கைகளும் எண்ணங்களும் முனனெப்போதையும் விட பொருத்தமாக உள்ளது என்று தெரிவித்தார்.
- சந்திரசேகர் ஆசாதுக்கு புகழாரம்: பாரதத்தாயின் தீரமிக்க மகனான சந்திரசேகர் ஆசாத்தை அவரின் பிறந்த நாளில் நினைவுகூர்கிறேன். தனது துடிப்பான இளமைக்காலத்தில் இந்தியாவை ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதில் அவர் முனைப்புடன் செயல்பட்டார். வலிமையான இந்தியா குறித்து கனவு கண்டார்" என்று தெரிவித்தார்.

## மூத்த தமிழறிஞர் இரா.இளங்குமரனார்

- மூத்த தமிழறிஞர் புலவர் இரா.இளங்குமரனார் உடல் 21 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் மதுரை அருகேயுள்ள திருநகர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
- திரு.வி.க., தேவநேயப் பாவாணர், மறைமலை அடிகளார் ஆகியோரது மரபு வழியில் தமிழ் வளர்த்த சான்றோர் இளங்குமரனார். அவர் திருவள்ளுவர் வழியில் திருக்குறளை ஏற்று, தமிழகத்தில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வைத்துள்ளார். இது சமுதாய மறுமலர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டாகும். தமிழுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த பெருந்தகை. அவரது இழப்பு வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது.

## அப்துல் கலாம் நினைவு தினம்

- "மக்களின் குடியரசுத் தலைவர்" என்று போற்றப்படும் அப்துல் கலாம், 2015–ஆம் ஆண்டு, ஜுலை 27–ஆம் தேதி தனது 83–ஆவது வயதில் காலமானார்.

## நந்து நடேகர் காலமானார்

- இந்திய பாட்மிண்டன் நட்சத்திரம் நந்து நடேகர் (88) புதன்கிழமை காலமானார்.
- மகாராஷ்டிர மாநிலம் சங்லியில் 1933–இல் பிறந்த நடேகர், தொடக்கத்தில் டென்னிஸ் வீரராகவே இருந்தார். 1952–க்குப் பிறகு, அவரது பாதை பாட்மிண்டன் பக்கம் திரும்பியது.
- தேசிய, சர்வதேச அளவில் தனிநபர், இரட்டையர், கலப்பு இரட்டையர் பிரிவுகளில் நூற்றுக்கும் அதிகமான பட்டங்களை வென்றுள்ள நடேகர், களத்தில் விளையாடுவது பாலே நடனத்துக்கு இணையானதாக இருக்குமென வர்ணிக்கப்படுகிறது. 6 முறை தேசிய சாம்பியனான நடேகர், 20–ஆவது வயதில் சர்வதேச களத்தில் இந்தியாவுக்காக களம் காணத் தொடங்கினார்.

## புதுவை கம்பன் கழக இணைச் செயலர் கி.கல்யாணசுந்தரம் காலமானார்

- புதுவை கம்பன் கழக இணைச் செயலரும், தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவருமான கி.கல்யாணசுந்தரம் (87) வயது முதிர்வின் காரணமாக புதன்கிழமை (ஜுலை 28) காலமானார்.
- புதுச்சேரி முத்தியால்பேட்டை அரசு ஆரம்பப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், புதுவை கம்பன் கழக இணைச்

செயலராக இருந்து, கம்பன் கழக விழாக்களில் மறைந்த கம்பன் கழகச் செயலர் முருகேசனுடன் இணைந்து பணியாற்றியவர். இவரது கல்விச் சேவையைப் பாராட்டி, கடந்த 1998–ஆம் ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். புதுவை கம்பன் கழகத்தில் 56 ஆண்டுகள் சேவை புரிந்த இவர், நிறைவாக இணைச் செயலராகப் பணியாற்றினார்.

## முதல் பெண் எம்.எல்.ஏ முத்துலட்சுமி பிறந்த தினம்

- இந்தியாவின் முதல் பெண் எம்.எல்.ஏ. முத்துலட்சுமியின் பிறந்த தினத்தை ஒட்டி, தனது சுட்டுரையில் பெண் விடுதலை தொடர்பான கருத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.
- பிற்போக்குத்தனங்களும், பெண்ணடிமைத் தனமும் முடைநாற்றம் வீசிக் கொண்டிருந்த காலத்தில் புரட்சிக்கனலாய் வாழ்ந்த இந்தியாவின் முதல் பெண் எம்.எல்.ஏ. முத்துலட்சுமி அம்மையார்.
- அவரது 136–வது பிறந்த தினம் ஜூலை 30. பெண்கள் அனைத்து உரிமைகளோடும் வாழ பாலினச் சமத்துவமிக்க சமுதாயம் படைப்போம் என்று தனது பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## கோயம்புத்தூர் பெண்ணிற்கு ஐ.நா. உதவித்தொகை

- இயற்பியலில் வாழ்க்கைக் கல்வியை கற்பிக்கும் பள்ளியில் உள்ள கோயம்புத்தூரைச் சேர்ந்த ஸ்நேகா முரளி ஐ.நா. உதவி தொகைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மின்னணு மற்றும் எந்திரவியலில் இறுதியிலிருந்து முன்னோக்கி கண்டறியும் கல்வி முறையே போதிக்கும்.
- ஸ்நேகா மொத்தமாக பங்கேற்ற 15000 போட்டியாளர்களில் ஒரே இந்தியர் ஆவார்.
- ஜெர்மனியில் 9 மாதங்கள் கல்வித் திட்டத்தில் பயில இந்த உதவித்தொகை அவருக்கு வழங்கப்பட உள்ளது.

# 1.5 விளையாட்டு

## மிதாலி, அஸ்வினுக்கு கேல் ரத்னா விருது பிசிசிஐ பரிந்துரை

- இந்திய மகளிர் கிரிக்கெட் அணி கேப்டன் மிதாலி ராஜ், ஆடவரணி வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோருக்கு, விளையாட்டுத் துறையின் உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்க பிசிசிஐ பரிந்துரைத்துள்ளது. அதேபோல், ஷிகர்தவன், கே.எல்.ராகுல், ஜஸ்பிரீத் பும்ரா ஆகியோருக்கு அர்ஜுனா விருது வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## இளம் வயது செஸ் கிராண்ட் மாஸ்டர்

- அபிமன்யு மிஸ்ரா தனது 12 வயதில் மிக இளம் வயது செஸ் கிராண்ட் மாஸ்டராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## பாராலிம்பிக் ஜஜாரியா, சரோஹா தகுதி

- இந்தியாவின் ஈட்டி எறிதல் வீரர்கள் தேவேந்திர ஜஜாரியா, சந்தீப் சௌதரி, வட்டு எறிதல் வீரர் அமித்கமார் சரோஹா ஆகியோர் டோக்கியோ பாராலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றனர்.
- உலக பாரா தடகள சம்மேளனமானது டோக்கியோ பாராலிம்பிக்கிற்காக இந்தியாவுக்கு 24 இடங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் 4 பெண்களுக்கானதாகும். அந்த இடங்களுக்கான தேசிய தேர்வு டிரையல் தில்லியில் நடைபெற்றது.
- இதில் தேவேந்திர ஜஜாரியா புதிய உலக சாதனை படைத்தார். அவர் "எஃப்–46" பிரிவில் 65.71 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்தார். இதன் மூலம் டோக்கியோ பாராலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற ஜஜாரியா, 2016 ரியோ பாராலிம்பிக்கில் அவர் படைத்த உலக சாதனையை அவரே முறியடித்தார். அந்த பாராலிம்பிக்கில் ஜஜாரியா 63.97 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து உலக சாதனையுடன் தங்கம் வென்றிருந்தார்.
- டோக்கியோ பாராலிம்பிக், ஜஜாரியாவின் 3–ஆவது பாராலிம்பிக் போட்டியாகும்.

## தேசியக் கொடி ஏந்த வாய்ப்பு

- டோக்கியோவில் தொடங்கவுள்ள பாராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ள இந்திய அணியின் அணிவகுப்பில் தேசியக் கொடியை ஏந்திச் செல்லும் கௌரவம் ரியோ பாராலிம்பிக் தங்கப் பதக்க வீரரான தமிழகத்தின் தங்கவேலு மாரியப்பனுக்கு கிடைத்துள்ளது. இதற்கான அறிவிப்பை இந்திய பாராலிம்பிக் கமிட்டி சேர்மன் ஆர்.சத்திய நாராயணா வெளியிட்டார். சேலத்தைச் சேர்ந்த மாரியப்பன் உயரம் தாண்டுதலில் டோக்கியோ பாராலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

## 400 மீ. தடை ஓட்டத்தில் புதிய உலக சாதனை

- நார்வேயின் ஆஸ்லோ லீக் தடகளப் போட்டி ஆடவர் 400 மீ தடை ஓட்டத்தில் 46.70 விநாடிகளில் கடந்து 29 ஆண்டுக்கால உலக சாதனையை தகர்த்தார் நடப்பு சாம்பியன் கார்ஸ்டன் வார்ஹோம். கடந்த 1992 பார்சிலோனா ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் கெவின் யங் 46.78 விநாடிகளில் பந்தய தூரத்தை கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

## டூட்டி சந்த்

- தடகள போட்டிகளில் முதல் பெண் இரண்டாம் முறையாக ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும் பெருமையை டூட்டி சந்த் பெற்றுள்ளார்.

## மானா படேல்

- டோக்கியோ ஒலிம்பிக் நீச்சல் போட்டிக்கு இந்தியாவிலிருந்து தகுதி பெற்றுள்ள முதல் பெண் மானா படேல் ஆவார்.
- ஆண்களில் sசஜன் பிரகாஷ், ஸ்ரீஹரி நடராஜ் போன்றோர் ஏற்கனவே தகுதி பெற்றுள்ளார்.

## டோக்கியோ ஒலிம்பிக்: மேரி கோம், மன்பிரீத் சிங் கொடியேந்துகின்றனர்

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டி தொடக்க நிகழ்ச்சி அணிவகுப்பின் போது இந்தியாவின் சார்பில் குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், ஹாக்கி வீரர் மன்பிரீத் சிங் ஆகியோர் தேசியக் கொடியேந்திச் செல்ல இருக்கின்றனர்.
- அதே போல், நிறைவு நிகழ்ச்சி அணிவகுப்பின்போது மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா தேசியக் கொடியேந்திச் செல்ல இருப்பதாக இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்தது. இந்த முடிவு டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஒருங்கிணைப்புக் குழுவிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தடகள வீரர் தனலட்சமி ஒலிம்பிக்கிற்கு தகுதி

- தமிழ் நாட்டைச் சேர்ந்த தடகள வீரர் தனலட்சுமி 4×400 பிரிவில் டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு

தகுதி பெற்றுள்ளார். சமீபத்தில் வெளியிடப்பட்ட 26பேர் கொண்ட இந்திய வீரர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

## டோக்கியோ ஒலிம்பிக்: தமிழகத்திலிருந்து 5 தடகள போட்டியாளர்கள்

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தடகள பிரிவில் பங்கேற்க தமிழகத்திலிருந்து தடகள போட்டியாளர்கள் 5 பேர் தேர்வாகியுள்ளனர். இவர்கள் மதுரை, ராமநாதபுரம், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.
- ஆடவர் 4×400 மீட்டர் ஒட்டத்துக்காக ஆரோக்கிய ராஜீவ், நாகநாதன் பாண்டியும், கலப்பு 4×400 மீட்டர் ஒட்டத்துக்காக தனலட்சுமி சேகர், சுபா வெங்கடேசன், ரேவதி வீரமணி ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 5 விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.5 லட்சம் ஊக்கத் தொகை

- ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ள 5 விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.5 லட்சத்தை விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் அளித்தார்.
- சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் இதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது.
- ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள தடகள விளையாட்டு வீர்கள் ஆரோக்கிய ராஜீவ், நகாநாதன் பாண்டி, சுபா வெங்கடேசன், தனலட்சுமி சேகர், ரேவதி வீரமணி ஆகிய 5 வீரர்களுக்கு தலா ரூ.5 லட்சத்துக்கான காசோலைகளை அவர்களது உறவினர்கள் பெற்றுக் கொண்டனர்.
- ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த ஏழு வீரர்களுக்கு தலா ரூ.5 லட்சத்தை முதல்வர் ஏற்கெனவே வழங்கியுள்ளார்.

## 2022 பெண்கள் ஆசிய கோப்பை கால்பந்து போட்டி

- 2022–ம் ஆண்டில் புவனேஷ்வர் மற்றும் அகமதாபாத்தில் நடைபெறுவதாக இருந்த பெண்கள் ஆசிய கோப்பை கால்பந்து போட்டிகள் மும்பை மற்றும் புணேவில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மும்பையின் அந்தேரி காம்ப்ளக்ஸ், சிவ் சத்ரபதி விளையாட்டு அரங்கங்களில் இந்த போட்டிகள் நடைபெற உள்ளது.

## டோக்கியோ ஒலிம்பிக்கில் பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை

- ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற விருக்கும் ஒலிம்பிக் போட்டியில் பார்வையாளர் களுக்கு அனுமதி இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஒலிம்பிக் போட்டி நெருங்கி வரும் நிலையில், டோக்கியோவில் கரோனா பரவல் அதிகரித்ததை அடுத்து அந்த நகரில் வரும் திங்கள்கிழமை முதல் ஆகஸ்ட் 22–ஆம் தேதி வரை அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், ஒலிம்பிக் போட்டியை நேரில் காண ரசிகர்களுக்கான அனுமதி ரத்து செய்யப்படுவதாக ஜப்பான் ஒலிம்பிக் அமைச்சர் டமாயோ மருகவா கூறினார்.

## செர்பிய ஓபன் செஸ்

- பெல்கிரேட் நகரில் நடைபெற்ற செர்பிய ஓபன் செஸ் போட்டியில் இந்தியாவின் இளம் கிராண்ட் மாஸ்டர் நிஹால் சரீன் சாம்பியன் பட்டம் வென்றார்.
- கடந்த 2018–இல் கிராண்ட் மாஸ்டர் அந்தஸ்தைப் பெற்ற நிஹால் 6 கேம்களில் வெற்றி, 3 டிராக்களுடன் தோல்வியே பெறவில்லை. கேரள மாநிலம் திருச்சூரைச் சேர்ந்த அவர், ரஷிய கிராண்ட் மாஸ்டர் விளாடிமீர் பெடொசீவுடன் டிரா கண்டு 7.5 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றார். 9 சுற்றுக்கள் கொண்ட இதில் சரீன் சாம்பியன் பட்டம் வென்றார்.

## ஒலிம்பிக் குத்துச்சண்டை: தரவரிசையில் அமித் பங்கால் முதலிடம்

- டோக்கியோ ஒலிம்பிக் குத்துச்சண்டை பிரிவில் 52 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் அமித் பங்கால் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தால் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- மகளிர் பிரிவில் இந்தியாவின் சிம்ரஞ்சித் கௌர் 60 கிலோ எடைப்பிரிவில் நான்காம் இடத்தில் உள்ளார். குத்துச்சண்டை தரவரிசைப் பட்டியலில் அமித் பங்கால், சிம்ரஞ்சித் கௌர் ஆகிய 2 பேர் மட்டுமே இடம் பெற்றுள்ளனர்.

## ஹேக்கத்தான் – சம்விதான் – 2021

- நாட்டில் நிலவும் சமூக இணையதள பிரச்சனைகளுக்கு தீர்வுகளை காணக்கூடிய புதிய தொழில்நுட்பவியலாளர்களுக்கு இடையேயான போட்டியான ஹேக்கத்தான்–சம்விதான்–2021 போட்டியை நடத்த 117–மெட்ராஸ் மற்றும் சோனி நிறுவனம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- பங்குபெறும் போட்டியாளர்களில் 75 புதிய தொழில்நுட்பங்கள் காலிறுதிக்கு தகுதி பெறும் 25 புதிய தொழில்நுட்பங்கள் அரையிறுதிக்கும் 7 புதிய தொழில்நுட்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 3 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்படுவதோடு அவர்களுக்கு ஒரு ஆண்டு 1117 சென்னையில் தொழிற் பயிற்சியும் அளிக்கப்படும்.

## 20 கிராண்ட்ஸ்லாம் ஜோகோவிச்சும் இணைந்தார்

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாம்பியன் ஆனார்.
- இது விம்பிள்டனில் அவரது 6–ஆவது பட்டமாகும். ஒட்டுமொத்தமாக இது அவரது 20–ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம், இதன் மூலம் ஓபன் எராவில் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற 3–ஆவது வீரர் என்ற பெருமையை ஜோகோவிச் பெற்றுள்ளார்.முன்னதாக அத்தகைய சாதனையை முதல் வீரராக ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் 2018–இல் எட்ட அதை ஸ்பெயினின் ரஃபேல் நடால் 2020–இல் எட்டி சமன் செய்தார். தற்போது அந்த 20 கிராண்ட்ஸ்லாம் வரிசையில் ஜோகோவிச்சும் இணைந்துள்ளார்.
- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலிய வீராங்கனை ஆஷ்லி பர்டி சாம்பியன் ஆனார்.
- விம்பிள்டனில் இது அவரது முதல் பட்டமாகும். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இது அவரது 2–ஆவது சாம்பியன் பட்டம். இதற்கு முன் 2019 பிரெஞ்சு ஓபனில் அவர் வாகை சூடியிருந்தார்.
- லண்டனில் நடைபெற்ற இறுதிச்சுற்றில், உலகின் 13–ஆம் நிலையில் உள்ள செக் குடியரசின் கரோலினா பினிஸ்கோவாவை எதிர்கொண்டார். உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லி பர்டி மைய ஆடுகளத்தில் 1 மணி நேரம் 56 நிமிஷங்களில் முடிவுக்கு வந்த இந்த ஆட்டத்தில் 6–3, 6–7 (4/7), 6–3 என்ற செட்களில் பர்டி வெற்றி பெற்றார்.

## கோப்பை வென்றது அர்ஜென்டீனா

- கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் அர்ஜென்டீனா 1–0 என்ற கோல் கணக்கில், நடப்புச் சாம்பியனாக இருந்த பிரேஸிலை வீழ்த்தி புதிய சாம்பியன் ஆனது.
- இப்போட்டியில் அர்ஜென்டீனா 15–ஆவது முறையாக சாம்பியன் ஆகியுள்ளது. எனினும், கடந்த 1993–ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த அணி கால்பந்து போட்டியில் வெல்லும் முதல் பட்டம் இதுவாகும். அந்த ஆண்டில் கோபா அமெரிக்கா மற்றும் இன்டர்கான் டினென்டல் கோப்பை ஆகிய போட்டிகளில் அர்ஜென்டீனா சாம்பியன் ஆகியிருந்தது.

## இத்தாலி 2 ஆம் முறை சாம்பியன்

- யூரோ கோப்பை கால்பந்து போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி சாம்பியன் ஆனது இத்தாலி.
- இறுதி ஆட்டம் 1–1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிய, வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட பெனால்டி ஷூட் அவுட் முறையில் இத்தாலி 3–2 என்ற கணக்கில் இங்கிலாந்தை வென்றது.
- காத்திருக்கும் இங்கிலாந்து: மறுபுறம், 55 ஆண்டுகளில் முதல் முறையாக பிரதான போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறி வந்த இங்கிலாந்து, சாம்பியன் பட்டத்துக்காக இன்னும் காத்திருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அத்துடன் சொந்த மண்ணிலேயே இறுதி ஆட்டத்தில் தோல்வி கண்டுள்ளது.

## ஐசிசி சிறந்த வீரர், வீராங்கனையாக கான்வே, எக்லஸ்டோன் தேர்வு

- ஐசிசியின் "ஜுன் மாத சிறந்த வீரர், வீராங்கனை" விருதுகளை முறையே நியூஸிலாந்து வீரர் டீவன் கான்வே, இங்கிலாந்து வீராங்கனை சோஃபி எக்லஸ் டோன் ஆகியோர் வென்றனர்.

## வில்வித்தை வீராங்கனை ஜோதி ஒலிம்பிக்கில் பங்கேற்பு

- சர்வதேச பாராலிம்பிக் கமிட்டி (IPC) வில்வித்தை வீராங்கனை ஜோதிக்கு பாராலிம்பிக் (2021)ல் பங்கேற்க அனுமதி அளித்துள்ளது.

## ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக்ஸ் நடுவராக தகுதிபெற்ற முதல் இந்தியர் தீபக் காப்ரா

- டோக்கியோ ஒலிம்பிக்கில் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டுக்கான நடுவராக இந்தியாவைச் சேர்ந்த தீபக் காப்ரா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இத்தகைய பெருமையைப் பெறும் முதல் இந்தியர் அவராவார்.
- டோக்கியோ ஒலிம்பிக்கில் வரும் 23–ஆம் தேதி முதல் நடைபெறும் ஆடவருக்கான ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் நடுவராக அவர் செயல்பட இருக்கிறார்.

## டோக்கியோ ஒலிம்பிக் 228 பேருடன் இந்திய அணி

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் 228 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்க இருப்பதாக இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் நரிந்தர் பத்ரா தெரிவித்தார்.
- ஒலிம்பிக் போட்டிக்காக இத்தனை பேர் கொண்ட அணியை இந்தியா அனுப்புவது இது முதல் முறையாகும்.
- டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இந்திய வீரர், வீராங்கனைகளுடனான பிரதமர் மோடியின் உரையாடலின்போது இணைந்திருந்த நரீந்தர் பத்ரா இதைத் தெரிவித்தார். மொத்த எண்ணிக்கையில் 119 பேர் போட்டியாளர்கள் என்றும், அதில் 67 ஆடவர், 52 மகளிர் அடங்குவர் என்றும் அவர் கூறினார். இந்திய அணியின் முதல் பிரதான குழு வரும் 17–ஆம் தேதி டோக்கியோ செல்வதாகவும், அதில் 90 போட்டியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம் பெற்றிருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## உலக பாட்மிண்டன்: 2026–ல் இந்தியா நடத்துகிறது

- 2026–ம் ஆண்டு உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்தும் என உலக பாட்மிண்டன் சம்மேளனம் அறிவித்தது.
- முன்னதாக, 2023–ல் சுதிர்மான் கோப்பை போட்டியை இந்தியா ஒருங்கிணைக்க இருந்த நிலையில், அந்தப் போட்டியை ஒருங்கிணைக்கும் பொறுப்பை சீனாவிடம் ஒப்படைத்தது உலக பாட்மிண்டன் சம்மேளனம். நடப்பாண்டில் சீனாவில் நடைபெற இருந்த சுதிர்மான் கோப்பை போட்டி, கரோனா சூழல் காரணமாக தற்போது ஃபின்லாந்தில் நடைபெறவுள்ளது.

## 2022 கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள்

- 2021–ம் ஆண்டில் ஹரியானாவில் நடைபெறவிருந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் (18 வயதிற்குட்பட்டோர்) 2022–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## இந்திய துப்பாக்கி சூடு நடுவர் ஒலிம்பிக் நடுவராக தேர்வு

- இந்திய துப்பாக்கி சூடு கூட்டமைவின் துணைச் செயலாளர் பவன் சிங் 2021 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்கான நடுவர் குழுவில் இணைக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் நபர் இவராவர்.

## இந்திய அணிக்கு அதிகாரப்பூர்வ பாடல் அறிமுகம்

- டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இந்திய அணியினருக்கான அதிகாரப்பூர்வ பாடலை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் அறிமுகம் செய்தார். "சீயா ஃபார் இந்தியா" என்ற அந்தப் பாடலுக்கு எ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருக்க, இளம் பாடகி அனன்யா பிர்லா பாடியுள்ளார். ஹிந்துஸ்தானி ரகத்திலான அந்தப் பாடலை அனைவரும் கேட்டு அதிகம் பகிர வேண்டும் என்று அனுராக் தாக்குர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிராம்னிக்கை வென்றார் விஸ்வநாதன் ஆனந்த்

- டார்ட் மண்ட்டில் நடைபெற்ற செஸ் ஆட்டத்தில் விளாமிர் கிராம்னிக்கை வீழ்த்தினார் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்.
- முன்னாள் உலக சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்துடன் நோ கேஸ்ட்லிங் ஆட்டம் ஒன்றில் மோதினார் கிராம்னிக். நான்கு ஆட்டங்கள் கொண்ட இதில் 2–1 என முன்னிலையில் ஆனந்த் இருந்த போது, கடுமையாக போராடிய கிராம்னிக் 61–ஆவது நகர்த்தலில் டிரா கண்டார்.

## பிரிஸ்பேனில் 2032–ல் ஒலிம்பிக் போட்டிகள்

- வரும் 2032–ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள், ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில்

நடைபெறும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

- ஆஸ்திரேலியாவில் கடைசியாக, கடந்த 2000–ம் ஆண்டு சிட்னி நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நிலையில், தற்போது 32 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அந்த நாட்டில் ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படவுள்ளது. ஆஸ்திரேலியாவில் முதல் முறையாக 1956–ல் மெல்போர்ன் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்டது.

## இன்று தொடங்குகிறது டோக்கியோ ஒலிம்பிக்ஸ்

- 32–வது ஒலிம்பிக் போட்டிகள், ஜப்பானின் டோக்கியோ நகரில் (ஜூலை 23) தொடங்குகிறது.
- 17 நாள்கள் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள், பிரம்மாண்டமான தொடக்க நிகழ்ச்சி மூலம் அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைக்கப்படவுள்ளது. கரோனா சூழல் காரணமாக பயண தூரம் குறைக்கப்பட்ட ஒலிம்பிக் ஜோதி ஒட்டம் டோக்கியோவில் உள்ள தேசிய மைதானத்தில் நிறைவடைந்து, அந்த ஜோதியைக் கொண்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படும்.

## தொடங்கியது ஒலிம்பிக்

- ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள தேசிய மைதானத்தில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் தொடக்க நிகழ்ச்சியின் போது நிகழ்த்தப்பட்ட வாணவேடிக்கை. இந்த 32–ஆவது ஒலிம்பிக் போட்டிகள் வரும் ஆகஸ்ட் 8–ம் தேதி வரை 17 நாள்கள் நடைபெறவுள்ளன.

## ருபினா பிரான்சின்

- இந்தியாவின் மத்திய பிரதேசம் ஜபல்பூரைச் சேர்ந்த மாற்றுத்தினாளி துப்பாக்கி சூடு வீரர் ருபினா பிரான்சிஸ் பெருவில் நடைபெற்ற பாரா உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் 10மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் தங்கம் பெற்று இந்தியா சார்பில் டோக்கியோ பாரா ஒலிம்பிக்கில் பங்கு பெறும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

## ஒலிம்பிக்: இந்தியாவுக்கு முதல் பதக்கம்

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பளு தூக்குதல் பிரிவில் இந்திய வீராங்கனை சாய்கோம் மீராபாய் சானு வெள்ளிப் பதக்கம் வென்று புதிய சாதனை படைத்தார்.
- டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு இது முதல் பதக்கமாகும். ஒலிம்பிக் போட்டியில் இந்தியா தனது முதல் நாளிலேயே பதக்கம் பெறுவதும் இதுவே முதல் முறை.

## உலக கேடட் மல்யுத்தம்: தங்கம் வென்றார் பிரியா மாலிக்

- உலக கேடட் மல்யுத்தப் போட்டியில் மகளிர் பிரிவில் தங்கம் வென்றார் இந்தியாவின் பிரியா மாலிக்.
- ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் உலக கேடட் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி நடைபெறுகிறது. இதில் மகளிர் 73 கிலோ எடைப்பிரிவில் 5–0 என்ற புள்ளிக் கணக்கில் பெலாரஸின் கேஸ்னியா படோபோவிச்சை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.
- இளம் வீராங்கனையான பிரியா மாலிக், புது தில்லியில் நடைபெற்ற தேசிய பள்ளிகள் விளையாட்டு போட்டியிலும், கேலோ இந்தியா போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றிருந்தார். அவருக்கு நடிகர்கள் அபிஷேக் பச்சன், கரீனா கபூர், சன்னி தியோல், அனில் கபூர் உள்பட பல்வேறு தரப்பினர் சுட்டுரையில் (டுவிட்டர்) வாழ்த்து தெரிவித்தனர்.

## 2020–21 ஆண்டின் சிறந்த கால்பந்து வீராங்கனை

- இந்திய மகளிர் கால்பந்து அணியின் வீராங்கனை கான்காய் பாலாதேவி இந்திய கால்பந்து கூட்டமைவால் 2020–21ம் ஆண்டிற்கான சிறந்த கால்பந்து வீராங்கனையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## உலக கேடட் மல்யுத்தம்: இந்தியாவுக்கு 13 பதக்கம்

- ஹங்கேரியில் நடைபெற்ற உலக கேடட் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 5 தங்கம் உள்பட 13 பதக்கங்கள் வென்றுள்ளது.
- இதில் முதல் நபராக பிரியா மாலிக் (73 கிலோ) தங்கம் வென்றிருந்தார். பின்னர் நடைபெற்ற இறுதிச்சுற்றுகளில் 43 கிலோ பிரிவில் தனு, 46 கிலோ பிரிவில் கோமல் பஞ்சல், 48 கிலோ பிரிவில் சாகர் ஜக்லான் ஆகியோர் தங்கம் வென்றனர். அத்துடன் இந்திய ஃப்ரீஸ்டைல் அணியும் தங்கம் வென்றது.

- 60 கிலோ பிரிவில் ஜஸ்கரன் சிங் வெள்ளியை கைப்பற்ற, இந்திய மகளிர் அணியும் வெள்ளி வென்றது.
- 51 கிலோ பிரிவில் சிரக், 71 கிலோ பிரிவில் ஜெய்தீப், 65 கிலோ பிரிவில் வர்ஷா, 110 கிலோ பிரிவில் சாஹித் ஆகியோர் வெண்கலம் வென்றனர்.

## 2019–ம் ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்

- மாற்றுத்திறனாளி இறகு பந்தாட்ட வீரர் பிரமோத் பகத் 2019–ம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராக தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.
- துபாய் பாரா பாட்மிண்டன் தொடரில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- டோக்கியோ பாராலிம்பிக்கிலும் பங்கு பெற உள்ளார்.

## மிக இளம் ஒலிம்பிக் பதக்கம் பெற்ற வீராங்கனை

- ஜப்பானை சேர்ந்த நிஷியா ஸ்கோட் போர் போட்டியில் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்றுள்ள 1936–ல் அமெரிக்காவைச் சேர்ந்த மார்கோரி பெர்சபின் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்றிருந்தார்.

## ICC தரவரிசை ஒரு நாள் போட்டியில் மிதாலி ராஜ் முதலிடம்

- ICC மாதந்தோறும் வெளியிடும் சிறந்த வீரர் வீராங்கனை பட்டியலில் தொடர்ந்து 9வது முறையாக மித்தாலி ராஜ் ஒரு நாள் போட்டிகள் வரிசையில் முதலிடத்தில் உள்ளார்.

## தேசிய செஸ் பட்டம்

- வணிதா அகர்வால் தேசிய ஆன்லைன் செஸ் பட்டத்தை பெற்றுள்ளார்.
- மேற்கு வங்கத்தின் அர்பிதா முகர்ஜி 2–ம் இடமும் தமிழ்நாட்டின் ஸ்ரீஜா சேஷாத்திரி 3–ம் இடமும் பெற்றுள்ளனர்.

# 1.6 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

## நாதுராம் கோட்சேவின் சுயசரிதை

- மும்பையைச் சேர்ந்த தாவால் குல்கர்னி எழுதியுள்ள நாதுராம் கோட்சேவின் சுயசரிதை மகாத்மா காந்தி படுகொலை போன்ற நிகழ்வுகளின் தொகுப்பு 2022–ம் ஆண்டில் வெளியிடப்பட உள்ளது.
- மான் மேக்மிலன் இந்தியா பதிப்பு இப்புத்தகத்தை வெளியிட உள்ளது.

## ஆபரேஷன் குக்ரி

- வெளிநாடுகளில் உள்ள அமைதி படையில் பணியாற்றும் இந்திய வீரர்களின் சொல்லப்படாத கதைகள் என்ற ஆபரேஷன் குக்ரி புத்தகம் மேஜர் ஜெனரல் ராஜ்பால் புனியா மற்றும் பாமினி புனியாவால் வெளியிடப்பட உள்ளது.

## "The Light of Asia: The Poem That Defined The Buddha"

- முன்னாள் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் இந்த புத்தகத்தை வெளியிடப்பட உள்ளது.
- புத்தர் ஞானம் பெற்றதன் பிறகான செயல்பாடுகள் அவரது குணத்தை விளக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.
- 1879 The light of Asia என்ற கவிதையை எழுதிய எட்வின் அர்னால்டின் வாழ்க்கை குறிப்பாகும்.

## 'The India Story'

- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பிமால் ஜலான் இந்திய பொருளாதார நிலைகளின் வரலாற்றைக் கூறும் "The India Story" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

## 'The Stranger in The Mirror'

- திரைப்பட இயக்குனர் ஓம்பிரகாஷ் மேஹ்ரா 'The Stranger in The Mirror' என்ற சுயசரிதையை எழுதி வெளியிட்டுள்ளார்.

## 'Palleku Pattabhishekam'

- துணை குடியரசு தலைவர் வெங்கையா நாயுடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யல்லமன்சில்லி சிவாஜி எழுதிய பல்லேக்கு பட்டாபிஷேகம் என்ற நூலை வெளியிட்டார்.
- இந்திய கிராமப்புற மற்றும் வேளாண்மை சார் செயல்பாடுகளை இந்த புத்தகம் விவரிக்கிறது.

## 'Bank With A Soul: Equitas'

- முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுனர் துவ்வுரி அப்பாராவ் Dr.C.K.கர்யாளி அவர்கள் எழுதியள்ள 'Bank With A Soul: Equitas' என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- ஓய்வு பெற்ற IAS அதிகாரியான Dr.C.K.கர்யாளி ஈக்வடாஸ் மேம்பாட்டு அறக்கட்டளையின் நிறுவனர் ஆவார்.

## 'India Versus China: Why They Are Not Friends'

- காந்தி பாஜ்பாய் எழுதியுள்ள 'India Versus China: Why They Are Not Friends' என்ற புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

## தமிழக அரசுப் பள்ளி ஆசிரியர்கள் 6 பேருக்கு தொழில்நுட்பத்துக்கான தேசிய விருது

- தமிழகத்தைச் சேர்ந்த அரசுப் பள்ளி ஆசிரியர்கள் 6 பேருக்கு தொழில்நுட்பத்துக்கான தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பை மத்தியக் கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- மத்தியக் கல்வி அமைச்சகம் சார்பில் 2010-ம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்பத்தில் படைப்பாற்றலைக் கொண்டு சிறப்பாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஐசிடி விருது வழங்கப்படுகிறது.
- ஆண்டுதோறும் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (என்சிஇஆர்டி) சார்பில் இந்த விருது விழா நடத்தப்பட்டு வருகிறது.
- இதில் கல்வித்துறை சார்ந்து சிறந்த முறையில் தகவல் மற்றும் தொழில்நுட்பக் கலை மூலம் கற்பிப்பவர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.
- அந்த வகையில் 2018 மற்றும் 2019-ம் ஆண்டுக்கான விருது பெற்ற ஆசிரியர்களின் பட்டியலை என்சிஇஆர்டி வெளியிட்டுள்ளது. இதில் 2018-ம் ஆண்டுக்கான விருதுப் பட்டியலில் நாடு முழுவதிலும் இருந்து 25 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- தமிழகத்தில் இருந்து அதிகபட்சமாக 3 ஆசிரியர்கள் தேர்வு பெற்றுள்ளனர்.
- 2018-ம் ஆண்டுக்கான விருதுக்கு தேர்வு பெற்றவர்கள்: கணேஷ், (கணினி சார் வளங்களான வீடியோக்கள், விளையாட்டுகள், செயலி மூலமாக கணிதம் கற்பிப்பவர்), கிளரியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, திருவாரூர் மாவட்டம்.
- மனோகர் சுப்பிரமணியம் (க்யூஆர் குறியீட்டுடன் கூடிய அடையாள அட்டை தயாரித்து மாணவர்களை கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளில் ஆர்வமுடன் பங்கேற்கச் செய்தவர்) வெள்ளியணை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, கரூர் மாவட்டம்.
- தயானந்த் (கற்றல்-கற்பித்தலுக்காக 170-க்கும் மேற்பட்ட காணொலிகள் மற்றும் அனிமேஷன் களை உருவாக்கியவர்), உடுமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பூர் மாவட்டம்.
- 2019-ம் ஆண்டுக்கான விருதுகள்: நாடு முழுவதிலும் இருந்து 24 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் தமிழகத்தில் இருந்து அதிகபட்சமாக 3 ஆசிரியர்கள் விருது பெற்றுள்ளனர்.
- ஜெ.செந்தில் செல்வன், (குறைந்த செலவில் ஸ்மார்ட் போர்டை உருவாக்கியவர்), மாங்குடி அரசு மேல்நிலைப் பள்ளி, சிவகங்கை மாவட்டம்.
- தங்கராஜா மகாதேவன், (அனிமேஷன் பாடங்களை உருவாக்கி, சூழலியல் சார்ந்த வீடியோக்களைத் தயாரித்துக் கற்பிப்பவர்), பாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சேலம் மாவட்டம்.
- இளவரசன் (தொழில்நுட்ப உதவியுடன் 22 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் தனது மாணவர்களை உரையாட வைத்தவர், அரசு அறிமுகப்படுத்தும் முன்னரே க்யூஆர் கோடு திட்டத்தைச் செயல்படுத்தியவர்), வேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சேலம் மாவட்டம்.

## அமெரிக்கன் நிறுவனத்தால் கௌரவிக்கப்பட்ட 34 வெளிநாட்டினர்

- IMF தலைமை பொருளாதார ஆலோசகர் கீதா கோவிந்த் நாசா விஞ்ஞானி கமலேஷ் லுலா உட்பட 34 வெளிநாட்டினர் அமெரிக்காவிற்கு செய்த பங்களிப்பிற்காக அமெரிகன் பவுன்டேஷன் அமைப்பு விருதளித்து கௌரவித்துள்ளது.

## சிறந்த முதலீட்டு கண்டுபிடிப்பு முகைமையாக இன்வஸ்ட் இந்தியா நிறுவனம் தேர்வு

- உலகின் சிறந்த முதலீட்டு கண்டுபிடிப்பு மேம்பாட்டு முகமையாக இன்வஸ்ட் இந்தியா நிறுவனம் OCO குளோபல் அமைப்பால் விருது அளிக்கப்பட்டுள்ளது.
- கரோனா காலகட்டத்தில் நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட்டன என்ற அடிப்படையில் இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

## 2021 ஆண்டின் சிறந்த விமான நிறுவனம்

- ஏர் ட்ரான்ஸ்போர்ட் வேர்ல்டு என்ற விமான போக்குவரத்து இதழ் 2021-ம் ஆண்டின் சிறந்த விமான போக்குவரத்து நிறுவனமமாக கொரியன் ஏர் நிறுவனத்தை தேர்ந்தெடுத்துள்ளது.

## BKS இலக்கிய விருது

- பத்திரிக்கையாளர் மற்றும் எழுத்தாளர் ஒம்செரி N.N.பிள்ளை பஹ்ரைன் கேரளாயி சமாஜம் (BKS) இலக்கிய விருது (2021) வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- M.முகுந் தலைமையிலான கேரள தலைமைச் செயலாளரை உள்ளடக்கிய குழு இந்த விருதுக்கு தேர்வு செய்துள்ளது.

## 2020 மில்லினியம் தொழில்நுட்ப பரிசு

- 2020–ம் ஆண்டிற்கான மில்லினியம் தொழில் நுட்ப பரிசு சங்கர் பாலசுப்ரமணியன் மற்றும் டேவிட் கிளனர்மேன் ஆகிய இருவரின் DNA வரிசைப்படுத்தல் தொழில்நுட்ப பங்களிப்பிற்கு அளிக்கப்பட் உள்ளது.
- சங்கர் பால சுப்பிரமணியன் சென்னையில் பிறந்து இங்கிலாந்தில் வசித்து வருபவர்.

## சேதிய சில்வர் ஸ்கோச் விருது

- இந்திய–வங்கதேச எல்லைப் பகுதியில் அஸ்ஸாம் மாநிலத்தில் அமைந்துள்ள கச்சார் மாவட்டத்திற்கு தேசிய சில்வர் கோச் விருது அளிக்கப்பட்டுள்ளது.
- வீடுகளில் ஊட்டசத்து தோட்டங்களை புஷ்டி நிரோபர் என்ற பெயரில் நிறுவியதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

## முதுபெரும் தலைவர் என். சங்கரய்யாவுக்கு "தகைசால் தமிழர்" விருது

- சென்னை, ஜூலை 28 முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யாவுக்கு 'தகைசால் தமிழர்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு: தகைசால் விருதுக்கான விருதாளரைத் தேர்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவின் ஆலோசனை சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மாணவத்தலைவராகவும், சுதந்திரப் போராளியாகவும், சட்டப்பேரவை உறுப்பினராகவும் அரும்பணியாற்றியவர், முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா. தமிழ்நாட்டுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி, 100 வயதை அடைந்த தமிழர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரய்யாவை பெருமைப்படுத்தும் வகையில், நிகழாண்டுக்கான தகைசால் தமிழர் விருது வழங்க முடிவெடுக்கப்பட்டது.
- அவருக்கு ரூ. 10 லட்சம் காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வரும் ஆகஸ்ட் 15–ம் தேதி நடைபெறும் சுதந்திர தின விழாவின்போது முதல்வர் மு.க.ஸ்டாலினால் வழங்கப்படும்.
- தமிழ்மொழி மீது தீராப் பற்று: என்.சங்கரய்யா தமிழ்மொழி மீது தீராப் பற்று கொண்டிருந்தார். 1967–ல் மொழிப் பிரச்னை தொடர்பாக பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது என்.சங்கரய்யாவின் உரை முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென வற்புறுத்தினார்.

## மின் இந்தியா USA 2021

- மிச்சிகனை சேர்ந்த வைதேகி டாங்ரி மிஸ் இந்தியா USAவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அர்ஹி லாலனி இரண்டாமிடமும், மிரா கசாரி 3–ம் இடமும் பெற்றுள்ளனர்.

# 1.8 கலாச்சாரம்

## கொந்தகை அகழாய்வு: மேலும் ஒரு சமநிலை எலும்புக்கூடு கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம் கீழடி அருகே கொந்தகையில் நடைபெற்றுவரும் அகழாய்வில் சமநிலையில் மேலும் ஒரு எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது.
- கீழடி, அகரம், மணலூர், கொந்தகை ஆகிய பகுதிகளில் கடந்த பிப்ரவரி 13-ம் தேதி முதல் 7-ம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இதுவரை நடைபெற்ற அகழாய்வுகளின் அடிப்படையில் கொந்தகை பண்டைய காலத்தில் ஈமக் காடாக இருந்தது தெரிய வந்துள்ளது.
- இங்கு தோண்டப்பட்ட குழிகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள், எலும்புக்கூடுகள் அடுத்தடுத்து கிடைத்து வருகின்றன.

## 2300 ஆண்டுகள் பழமையான கிணற்றுப்படிகள்

- ஈரோடு மாவட்டம் சென்னிமலை கொடுமணல் பகுதியில் முதல்முறையாக 2300 ஆண்டுகள் பழமையான கிணற்று படிகள் தொல்லியல் துறையால் கண்டறியப்பட்டுள்ளது.
- வட்ட வடிவிலான கிணறு 2.36 மீட்டர் ஆழத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- நொய்யல் நதிக்கரையில் 1981ம் ஆண்டு தொழிற்சாலை அமைப்பின் போது இந்த பகுதிகள் தென்பட துவங்கின.
- பழைய கால வாணிப நகரமாக திகழ்ந்திருக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அரியலூர் மாளிகைமேடு அகழாய்வில் கூடுதல் சுவர் கண்டுபிடிப்பு

- அரியலூர் மாவட்டம், கங்கை கொண்ட சோழபுரம் அடுத்த மாளிகைமேட்டில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சிப் பணியில், மாளிகையின் கூடுதல் சுவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் கீழடி, ஆதிச்சநல்லூர், கங்கைகொண்ட சோழபுரம் உள்பட 7 இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் அருகே உள்ள மாளிகைமேடு பகுதியில் கடந்த மார்ச் மாதம் முதற்கட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்று, அகழாய்வுப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.
- இந்த ஆய்வில், பானை ஓடுகள், கூரை ஓடுகள், ஆணி வகைகள், செப்புக்காசு, மாளிகையின் சுவர், காப்பர் உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டன.
- இதனிடையே, கரோனா இரண்டாம் அலை காரணமாக கடந்த மாதம் 10-ம் தேதி முதல் அகழாய்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன. ஜுன் 15-ம் தேதிக்குப் பிறகு பொதுமுடக்கத்தில் தளர்வுகளை அரசு அறிவித்ததையடுத்து அகழாய்வுப் பணிகள் மீண்டும் தொடங்கின.

## கீழடி அகழாய்வில் தொட்டி போன்ற அமைப்பு கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள கீழடியில் நடைபெற்று வரும் ஏழாம் கட்ட அகழாய்வில், தொட்டி போன்ற அமைப்பு கண்டெடுக்கப்பட்டது.
- தமிழக தொல்லியல் துறை சார்பில், கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் உள்ளிட்ட 4 இடங்களில் ஏழாம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் 13-ம் தேதி முதல் நடைபெற்று வருகின்றன.
- இந்நிலையில், கீழடியில் கணேசன் என்பவரது நிலத்தில் இதுவரை 7 குழிகள் தோண்டப்பட்டு, அவற்றில் சுடுமண் பகடை, கிண்ணம் மூடியுடன் கூடிய பானை, பானை ஓடுகள், உழவு கருவி உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு தோண்டப்பட்ட 6-வது குழியில் சிறிய வேலைப்பாடுடன் கூடிய பானை ஓடு கண்டறியப்பட்டது.

## பெருங்கற்கள் காலத்திய முழுநீள வாள் கண்டெடுப்பு

- கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும் பாறையில் பழைய பெருங்கற்கள் காலத்திய 60 செ.மீ நீளமுள்ள முழுநீள வாள் கண்டெடுக்கப்பட்டு உள்ளது.
- தொல்லியல் துறையில் கண்டெடுக்கப்பட்ட வற்றிலேயே முழுமையான பெருங்கற்கால வாள் இதுவாகும்.

## சோழர்கால கோவில் புதுப்பிப்பு

- சென்னை வேளச்சேரியை அடுத்த ராம்நகரில் உள்ள 1000 ஆண்டுகள் பழமையான சோழர்கள் கால வாசுதேவ பெருமாள் கோவில் புதுப்பிக்கப்பட்டு பக்தர்களுக்கு வழிபட வகை செய்யப்படும் என அறநிலையத்துறை அமைச்சர் P.K.சேகர்பாபு தெரிவித்தார்.

## கீழடி அகழாய்வில் மற்றொரு உறை கிணறு அகரத்தில் சுடுமண் பெண் பொம்மையும் கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெற்று வரும் 7–ம் கட்ட அகழாய்வில் மற்றொரு உறை கிணறும், அகரத்தில் சுடுமண்ணால் செய்யப்பட்ட கலைநயமிக்க பெண் பொம்மையும் கண்டறியப்பட்டன.
- கீழடியில் கடந்த பிப்ரவரி 13–ம் தேதி முதல், அகழாய்வு இயக்குநர் இரா.சிவானந்தம் மேற்பார்வையில் 7–ம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இதன் விரிவாக்கமாக, அருகே உள்ள மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய இடங்களிலும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- அகரத்தில் முதல்முறையாக சுடுமண் உறைகிணறு கண்டறியப்பட்டது. அதேபோல், கிழடியில் ஏற்கெனவே உறை கிணறு கண்டறியப்பட்ட நிலையில், தற்போது மற்றொரு அகழாய்வுக் குழியில் 411 செ.மீ ஆழத்தில் மேலும் ஒரு உறைகிணறு கண்டறியப்பட்டுள்ளது. இந்த உறை கிணற்றின் விளிம்புப் பகுதி அலங்கரிக்கப்பட்டுள்ளது. உறையின் விட்டம் கிழக்கு மேற்காக 58 செ.மீ கொண்டுள்ளது. இதன் தெற்கு பகுதி மண்ணில் புதைந்துள்ளது. இதன் தடிமன் 3 செ.மீட்டராக உள்ளது.
- அகழாய்வுக் குழி ஒய்.பி. சதுரப் பகுதியில் 1.26 மீட்டர் ஆழத்தில் ஏற்கெனவே சுடுமண் உறை கிணற்றின் மேல் பகுதி தென்பட்டது. அதன் விட்டம் 77 செ.மீட்டரும், பக்கவாட்டு பகுதி 44 செ.மீ. உயரமும் தடிமன் 3 செ.மீட்டருடன் வெளிப்புறத்தில் கயிறு வடிவ படைப்பு வேலைப்பாடுகள் இரண்டு வரிகளாக அமைக்கப்பட்டுள்ளது.

## கொடை வழங்கும் பானை

- கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும் பாறையில் வகை பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## உலக பாரம்பரிய சின்ன பட்டியலில் தெலங்கானா ராமப்பா கோயில்

- தெலங்கானா மாநிலம், வரங்கல்லில் உள்ள ராமப்பா கோயிலை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளதாக மத்திய கலாசார துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜி.கிஷன்ரெட்டி வெளியிட்டுள்ள சுட்டுரைப் பதிவில், "தெலங்கானா, வரங்கல் பாலம்போட்டில் உள்ள ராமப்பா கோயிலை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதல், ஆதரவுக்காக அவருக்கு நாட்டின் சார்பில், குறிப்பாக தெலங்கானா மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.
- பிரதமர் நரேந்திர மோடி தனது சுட்டுரையில், அனைவருக்கும் குறிப்பாக தெலங்கானா மக்களுக்கு வாழ்த்துகள். உயர்ந்த காகதிய வம்சத்தின் சிறப்பான கைவினைத் திறனை ராமப்பா கோயில் காண்பிக்கிறது.
- இந்த கம்பீரமான கோயில் வளாகத்தைப் பார்வையிடவும் மகத்தான முதல் அனுபவத்தைப் பெறவும் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" எனப் பதிவிட்டுள்ளார்.
- கணபதி தேவா என்ற காகதிய வம்ச மன்னரின் ஆட்சிக் காலத்தில் 13–ம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட பிரசித்தி பெற்ற இக்கோயிலின் மூலவர் ராமலிங்கேசுவரர். எனினும், இந்த அற்புதமான கோயிலை வடிவமைத்த கட்டடக் கலைஞரான ராமப்பாவின் பெயரால் அறியப்படுவது குறிப்பிடத்தக்கது. 2019–ம் ஆண்டுக்கான யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னம் பட்டியலில் இடம் பெறுவதற்காக மத்திய அரசால் இக்கோயில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

## தெலுங்கானாவின் போனாலு திருவிழா

- ஆடி மாதத்தில் தெலுங்கானா மாநிலத்தின் ஹைதராபாத்செகந்திராபாத்தில்கொண்டாடப்படும் போனாலு திருவிழா கொண்டாடப்படுகிறது.
- 2014–க்கு பிறகு மாநில திருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

## கொந்தகையில் கண்டறியப்பட்ட முதுமக்கள் தாழிகள் ஆய்வு

- சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் நடந்து வரும் ஏழாம் கட்ட அகழாய்வுப் பணியில் கொந்தகையில் கண்டறியப்பட்ட முதுமக்கள் தாழிகளை ஆய்வு செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.
- கொந்தகையில் நான்கு குழிகள் தோண்டப்பட்டு 15 முதுமக்கள் தாழிகளும் பத்து சமதள மனித எலும்புக் கூடுகளும் கண்டறியப்பட்டன.
- மூன்று முதுமக்கள் தாழிகளில் உள்ள பொருள்கள் வெளியே எடுக்கப்பட்ட நிலையில் நான்காவதாக உள்ள தாழியை ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

# 1.9 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

## ரூ.9,695 கோடியில் நீர் மின் உற்பத்தி திட்டம்: இந்தியாவுடன் நேபாளம் ஒப்பந்தம்

- நேபாளத்தில் 679 மெகா வாட் உற்பத்தித் திறனுடன் கூடிய நீர் மின் திட்டத்தை அமைத்துத் தருவதற்கான ரூ.9,695 கோடி ஒப்பந்தத்தை அந்நாடு இந்தியாவுடன் மேற்கொண்டுள்ளது.
- இது அந்த நாட்டுடன் இந்தியா மேற்கொள்ளும் இரண்டாவது மிகப்பெரிய திட்டமாகும். முன்னதாக, அந்த நாட்டில் 900 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் கூடிய அருண்–3 நீர்மின் திட்டத்தை அமைத்துத் தருவதற்கான ரூ.7,756 கோடி ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டது.
- இப்போது, கிழக்கு நேபாளத்தில் சங்குவசபா மற்றும் போஜ்பூர் மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ள கீழ் அருண் நதியில் 679 மெகா வாட் நீர் மின் நிலையத்தை அமைத்துத் தருவதற்காக இந்தியாவின் சட்லஜ் ஜல் வித்யத்நிகாம் (எஸ்ஜேவிஎன்) நிறுவனத்துடன் நேபாளம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன் திட்ட மதிப்பு ரூ.9,695 கோடியாகும். கடந்த 2017–ம் ஆண்டு விலை நிலவரத்தின் அடிப்படையில் இந்தத் திட்ட மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## இந்தியா–சீனா இடையிலான வர்த்தகம் ரூ.4.28 லட்சம் கோடி

- இந்த ஆண்டின் முதல் பாதியில் இந்தியா–சீனா இடையிலான இருதரப்பு வர்த்தகம் 57.48 பில்லியன் டாலர்களாக (சுமார் ரூ.4.28 லட்சம் கோடி) உயர்ந்துள்ளது. கிழக்கு லடாக் எல்லை பிரச்னையால் இருதரப்பு உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ள போதிலும் இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் அதிகரித்துள்ளது.
- இது தொடர்பாக அந்நாட்டின் சுங்கவரி நிர்வாக அமைப்பு (ஜிஏசி) வெளியிட்ட தரவுகளின்படி, இந்தியா–சீனா இடையிலான வர்த்தகம் 57.48 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 62.7 சதவீதம் அதிகமாகும். எனினும் சினாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 55.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 14.724 பில்லியன் டாலர்களை (சுமார் ரூ.1.09 லட்சம் கோடி) எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 69.9 சதவீதம் அதிகமாகும். அதேவேளையில் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் சீனாவில் இருந்து இந்தியாவின் இறக்குமதி 42.755 பில்லியன் டாலர்களாக (சுமார் ரூ.3.19 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் முதல் 6 மாதங்களைவிட 604 சதவீதம் அதிகரித்துள்ளது.

## இந்தியாவுடனான உறவின் விரிவாக்கத்துக்கு வானமே எல்லை: ரஷிய தூதர் பெருமிதம்

- ரஷிய–இந்தியா இடையிலான உறவின் விரிவாக்கத்துக்கு வானமே எல்லை என்று இந்தியாவுக்கான ரஷிய தூதர் நிகோலே குடாசேவ் தெரிவித்தார்.
- இந்திய–ரஷிய நாடுகளுக்கிடையே நடைபெற உள்ள உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து இருதரப்பு அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் தில்லியில் நடைபெற்றது. இந்த மாநாடு குறித்து ரஷிய தூதர் நிகோலே குடாசேவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
- இந்தியாவில் நடைபெற உள்ள மாநாட்டில் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் பங்கேற்க உள்ளதையடுத்து இந்த மாநாடு குறித்து இரு நாட்டு அமைச்சகத்தினரிடையே விவாதிக்கப்பட்டது. கரோனா தீநுண்மி பரவலைத் தடுப்பது தொடர்பான விவாதமே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்கும். கரோனா தொற்றுக்கு எதிராக ரஷியாவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "ஸ்புட்னிக் லைட்" தடுப்பூசி இந்தியாவில் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.
- இந்த ஆண்டு ஜுலை 7–ஆம் தேதி முதல் 9–ஆம் தேதி வரையிலும் மாஸ்கோவுக்கு சென்ற இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் வருகை மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. அணுசக்தி, ஹைட்ரோ கார்பன், பாதுகாப்பு, விண்வெளி, வர்த்தகம், நிதி, எளிய தொடர்பு, புதுமைகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவாக்கம் செய்வது குறித்து அவருடன் விரிவாகப் பேச்சு நடத்தப்பட்டது. மேலும், ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள இந்த இரு நாடுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குறித்தும், ஆப்கானிஸ்தான் நிலைமை குறித்தும் பேசப்பட்டது.

# 1.10 சமீபத்தில் வரலாற்று நிகழ்வு

## 1971–ம் ஆண்டு பாகிஸ்தான் போர் வெற்றிக் கொண்டாட்டம்

- கடந்த 1971–ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தானுடனான போரில் இந்தியா வெற்றி பெற்றதைக் கொண்டாடும் நிகழ்வாக சென்னை வந்தடைந்த வெற்றி ஜோதியை தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பெற்றுக் கொண்டார்.
- 1971–ஆம் ஆண்டு பாகிதானுடன் நடைபெற்ற போரில் இந்தியா வெற்றி பெற்று கிழக்கு பாகிஸ்தான் என்று அழைக்கப்பட்ட வங்கதேசம் தனி நாடாக விடுதலை பெற்றது. இப்போர் நடைபெற்று 50 ஆண்டுகள் ஆனதை ஒட்டி பொன் விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் கடந்த அண்டு டிசம்பர் மாதம் தொடங்கியது. புதுதில்லியில் உள்ள போர் நினைவு சதுக்கத்தில் நான்கு வெற்றி ஜோதிகள் ஏற்றப்பட்டு நாட்டின் நான்கு திசைகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டது. இதன் ஒரு வெற்றி ஜோதி தில்லியில் தொடங்கி கன்னியாகுமரி வரை சென்று தற்போது சென்னை வந்தடைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக சென்னையில் தக்ஷின் பாரத் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மைதானத்தில் வெற்றி விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

# 1.11 நியமனங்கள்

## பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தராக ஆர்.ஜெகந்நாதன் நியமனம்

- சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஆர்.ஜெகந்நாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை அவரிடம் பல்கலைக்கழக வேந்தரும் ஆளுநருமான பன்வாரிலால் புரோஹித் அளித்தார்.

## விமானப்படை துணைத்தலைவர்

- ஏர் மார்ஷல் விவேக் ராம் சவுத்ரி விமானப் படையின் துணை தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- 1982 முதல் விமானப்படை அதிகாரியாக பணிபுரியும் விவேக்ராம் சவுத்ரி 3800 மணி நேர விமான இயக்குதல் அனுபவம் பெற்றவர்.

## மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் நியமனம்

- தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்துக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பு:
- தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையமானது, கடந்த 1989–ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால் உருவாக்கப்பட்டது. சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காக இந்த ஆணையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையத்தின் தலைவராக எஸ்.பீட்டர் அல்போன்ஸ் நியமிக்கப்பட்டார்.
- உறுப்பினர்கள் நியமனம்: சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவராக டாக்டர் மஸ்தான் செயல்படுவார். உறுப்பினர்களாக ஏ.பி.தமீம் அன்சாரி, ஹர்பன்ஜன் சிங் சூரி, மன்ஞ்ஜித் சிங் நய்யர், பைரேலால் ஜெயின், எல்.டான்பாஸ்கோ, டாக்டர் எம்.இருதயம், பிக்கு மௌரியர் புத்தா ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக தனது அறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## வனத் துறை தலைவராக அசோக் உப்ரேதி நியமனம்

- தமிழக வனத்துறை தலைவராக அசோக் உப்ரேதி நியமிக்கப்பட்டுள்ளார். அவரையும் சேர்த்து மொத்தம் 17 வனத்துறை உயரதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## மத்திய அமைச்சரவை விரிவாக்கம்: 43 பேர் பதவியேற்பு

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டது. 43 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். இவர்களில் 36 பேர் புதியவர்கள்.

- அஸ்ஸாம் முன்னாள் முதல்வர் சர்வானந்த சோனோவால், காங்கிரஸில் இருந்து விலகி பாஜகவில் இணைந்த ஜோதிராதித்ய சிந்தியா, ராம்விலாஸ் பாஸ்வானின் சாகோதரர் பசுபதி குமார் பாரஸ் உள்பட 43 பேர் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- சுகாதாரத் துறைக்கு புதிய அமைச்சர்: சுகாதாரத் துறை அமைச்சராக மன்சுக் மாண்டவியா நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜோதிராதித்ய சிந்தியாவுக்கு விமானப் போக்குவரத்துத் துறை வழங்கப்பட்டுள்ளது.
- முதல் முறையாக: முதல் முறை எம்.பி.க்களான பாரதி பவார் (மகாராஷ்டிரம்), விஸ்வேஷ்வர் துடு (ஒடிஸா), முன்ஜபாரா மகேந்திரபாய் (குஜராத்), மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சாந்தனு தாக்குர், ஜான் பார்லா, நிசித் பிராமாணிக் ஆகியோர் மத்திய இணையமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். இணை அமைச்சர்களாக இருந்த 7 பேர் அமைச்சர்களாக உயர்த்தப்பட்டுள்ளார்.
- புதிதாகப் பதவியேற்றுக் கொண்ட 43 பேரையும் சேர்த்து மத்திய அமைச்சரவை பலம் 78–ஆக அதிகரித்துள்ளது. மத்திய அமைச்சரவையில் அதிகபட்சமாக 81 பேர் வரை இடம் பெற முடியும்.
- தமிழகத்துக்கு பிரதிநித்துவம்: தமிழகத்துக்கு மத்திய அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் இல்லாத நிலை இருந்து வந்தது. இந்நிலையில், தமிழக பாஜக தலைவர் எல்.முருகனுக்கு செய்தி ஒலிபரப்புத் துறை, மீன், கால்நடை, பால்வளத் துறை இணையமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- அமித் ஷாவுக்கு புதிய பொறுப்பு: கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவுத் துறை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சராசரி வயது 58–ஆக குறைந்தது: மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தில் இளம் தலைவர்களுக்கு அதிகம் வாயப்பளிக்கப்பட்டதை அடுத்து, மத்திய அமைச்சர்களின் சராசரி வயது 61–இல் இருந்து 58–ஆக குறைந்துள்ளது.
- புதிதாக 7 பெண் அமைச்சர்கள்: மீனாட்சி லேகி, அனுப்ரியா படேல், ஷோபா கரந்தலஜே உள்ளிட்ட 7 பெண்கள் புதிதாக அமைச்சர் பதவியேற்றுள்ளனர். ஏற்கெனவே அமைச்சராக இருக்கும் நிர்மலா சீதாராமன், ஸ்மிருதி இரானி, சாதிவி நிரஞ்சன் ஜோதி, ரேணுகா சிங் ஆகியோருடன் சேர்த்து பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை 11–ஆக அதிகரித்துள்ளது.

## பாடநூல் கழகத் தலைவராக திண்டுக்கல் ஐ.லியோனி நியமனம்

- தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் புதிய தலைவராக திண்டுக்கல் ஐ.லியோனி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமானது தனது பணிகளை செம்மையாகத் தொடர்ந்து மேற்கொள்ள, அந்த நிறுவனத்தின் புதிய தலைவராக திண்டுக்கல் ஐ.லியோனி நியமிக்கப்படுகிறார் என்று தனது அறிவிப்பில் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## வருமான வரித்துறை முதன்மை தலைமை ஆணையர் பொறுப்பேற்றார்

- சென்னையில் உள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரி, வருமானவரித்துறை அலுவலகத்தின் முதன்மைத் தலைமை ஆணையராக கபஸ்ரீ அனந்தகிருஷ்ணன் பொறுப்பேற்றுக் கொண்டார்.
- பெங்களூருவிலிருந்து பதவி உயர்வு பெற்று பணியிடமாற்றம் செய்யப்பட்ட சுபஸ்ரீ அனந்தகிருஷ்ணன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமானவரித்துறை முதன்மைத் தலைமை ஆணையராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## வியத்நாம் பிரதமருடன் மோடி பேச்சு

- வியத்நாம் பிரதமர் பாம்மின் சின்னுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக உரையாடினார்.

## தொழிலாளர் நலத்துறை முக்கிய பொறுப்பில் இந்திய அமெரிக்கர்

- அமெரிக்க தொழிலாளர் நலத் துறையின் தலைமை சட்ட அதிகாரியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சீமா நந்தா நியமிக்கப்பட்டுள்ளதற்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- அமெரிக்க தொழிலாளர் நலத் துறையின் தலைமை சட்ட அதிகாரி பொறுப்புக்கு சீமா நந்தாவை அதிபர் ஜோ பைடன் நியமித்தார். அந்த நியமனத்தின் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்ற மேலவையான செனட் சபையில் நடைபெற்றது. அதில், சீமா நந்தாவின் நியமனத்துக்கு ஆதரவாக 53 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் பதிவாகின. இதையடுத்து, அவரது நியமனம் சட்டப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டது. முன்னதாக,

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான வழக்குரைஞராக அவர் 15 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

## கேரளத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வரதட்சிணை தடுப்பு அதிகாரிகள் நியமனம்

- கேரளத்தில் வரதட்சிணை தடுப்பு விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் வரதட்சிணை தடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- கேரளத்தில் மண்டல அடிப்படையில் திருவனந்தபுரம், எர்ணாகுளம், கோழிக்கோடு ஆகிய மாவட்டங்களில் ஏற்கெனவே வரதட்சிணை தடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பெரு அதிபர் தேர்தலில் பெட்ரோ காஸ்டிலோ வெற்றி

- 2021ம் ஆண்டின் பெரு நாட்டின் அதிபர் தேர்தலில் பெட்ரோ கேஸ்டிலோ வெற்றி பெற்றுள்ளார். மார்க்ஸிஸ்ட் கட்சியை சேர்ந்த இவர் ஜூலை 28ல் பதவி ஏற்க உள்ளார்.

## 4 மருத்துவ நிபுணர்கள் கௌரவ பேராசியர்களாக நியமனம்

- தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ நிபுணர்கள் நான்கு பேர் வாழ்நாள் கௌரவப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ஜுரண மண்டல சிகிச்சை நிபுணரும், மெடிந்தியா மருத்துவமனையின் தலைவருமான டாக்டர் டி.எஸ்.சந்திரசேகர், காது மூக்கு தொண்டை சிகிச்சை நிபுணரும், மெட்ராஸ் இஎன்டி மருத்துவமனை மேலாண் இயக்குநருமான டாக்டர் மோகன் காமேஸ்வரன், சர்க்கரை நோய் சிறப்பு சிகிச்சை நிபுணரும் மோகன்ஸ் சர்க்கரை நோய் மருத்துவனை தலைவருமான டாக்டர் வி.மோகன், சென்னை மருத்துவக் கல்லூரியின் மருத்துவத் துறை முன்னாள் இயக்குநர் டாக்டர் சி.ராஜேந்திரன் ஆகிய நால்வர் புதிதாக கௌரவப் பேராசியராக நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான நியமனத்தை தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யன் மேற்கொண்டுள்ளார்.

## தில்லி காவல் ஆணையராக ராகேஷ் அஸ்தானா நியமனம்

- எல்லைப் பாதுகாப்புப் படை இயக்குநர் ஜெனரலாக இருக்கும் ராகேஷ் அஸ்தானா தில்லி காவல் துறை ஆணையராக அடுத்த ஓராண்டுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டது.

## லெபனான் நாட்டின் புதிய பிரதம அமைச்சர்

- நஜீம் மிகாதி லெபனான் நாட்டின் புதிய பிரதம அமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

### தேச துரோக சட்டத்தை நீக்காதது ஏன்?

- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட தேச துரோக சட்டத்தை, நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆன பிறகும் நீக்காமல் இருப்பது ஏன் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்ற கேள்வி எழுப்பியுள்ளது.
- இந்திய குற்றவியல் சட்டத்தின் 124ஏ பிரிவானது தேச துரோக குற்றம் இழைத்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய வழிவகை செய்கிறது. அரசின் மீது வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்து தெரிவிப்போர், செயல்படுவோர் மீது அந்தப் பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்ய முடியும். அவர்களுக்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வரை விதிக்க சட்டப்பிரிவு வழிவகை செய்கிறது.

## 2.1 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### ஆத்மநிர்பார் ரோஜ்கர் யோஜனா

- வேலைவாய்ப்பு உற்பத்தி திட்டமான ஆத்மநிர்பார் ரோஜ்கர் யோஜனாவை மத்திய அரசு மார்ச் 21–2022 வரை நீட்டித்துள்ளது.

**ஆத்மநிர்பர் ரோஜ்கர் யோஜனா**

- அக்டோபர் 1 2020ல் துவங்கப்பட்டது.
- வேலையாட்களின் வருங்கால வைப்பு நிதியிலிருந்து நிறுவன மேம்பாட்டை ஊக்குவித்தல்.

### இந்தியாவின் தொழில்நுட்பத்துக்கான காலம்: பிரதமர் மோடி

- அடுத்த 10 ஆண்டுகளை இந்தியாவின் தொழில்நுட்பத்துக்கான ஆண்டுகளாக மாற்றுவோம் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- "டிஜிட்டல் இந்தியா" திட்டம், 6 ஆண்டுகளை நிறைவு செய்ததை ஒட்டி, காணொலி முறையில் பிரதமர் மோடி உரையாடினார். அவர் கூறியதாவது:
- எண்ம (டிஜிட்டல்) யுகத்தில் இந்தியா மாபெரும் தகவல் களஞ்சியமாக உள்ளது. அதேநேரம், தகவல்களைப் பாதுகாப்பதில் இந்தியா மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்படுகிறது. தகவல்களைப் பாதுகாப்பதற்கான அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.
- தகவல்களும், மக்கள்தொகையும் இந்தியாவுக்கு ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்துள்ளன. இவை இரண்டையும் ஒருங்கிணைந்து இந்த பத்தாண்டுகளை இந்தியாவுக்கான தொழில்நுட்ப ஆண்டுகளாக வெற்றிபெறச் செய்வோம்.
- எதிர்வரும் ஆண்டுகளில் பத்துக்கும் மேற்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்கள், 100 கோடி டாலர் முதலீட்டுடன் இந்தியாவுக்குள் நுழைகின்றன. இதனால் அதிக வேலைவாய்ப்புகள் உருவாகும்.
- கரோனா பொருந்தொற்று காலத்தில் தடையின்றி மாணவர்களுக்கு கல்வி கிடைப்பதை உறுதி செய்வதிலும், குடிமக்களுக்கு இதர சேவைகள் தொடர்ந்து கிடைக்கச் செய்வதிலும் தொழில்நுட்பம் மிக முக்கியப் பங்கு வகித்தது.

## தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் 20 உள் கட்டமைப்புத் திட்டங்கள்

- தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெற்று வரும் 20 முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்து திட்டக் கண்காணிப்புக் குழுவினருடன் மத்திய வர்த்தகம், தொழில் மற்றும் ரயில்வே துறை அமைச்சர் பியூஷ் கோயல் ஆய்வு செய்தார்.
- நாடு முழுவதும் சுமார் ரூ.44.4 லட்சம் கோடி முதலீட்டில் 1,116 உள்கட்டமைப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் சாலைகள், பிரத்யேக சரக்கு ரயில் பாதைகள், துறைமுகங்கள். விமான நிலையங்கள், பெட்ரோலியம் உள்ளிட்ட திட்டங்களும் அடங்கும். தமிழகத்தில் நடைபெறும் ரூ.1.70 லட்சம் கோடியிலான 58 திட்டங்களும் இதில் அடங்கும். பொதுத் துறை நிறுவனங்கள், தனியார் பங்கேற்றுள்ள இந்தத் திட்ங்களை விரைவாக மேற்கொள்ள மத்திய வர்த்தகத் துறையில் உள்ள தொழில் ஊக்குவிப்பு உள்நாட்டு வர்த்தகப் பிரிவின் (டிபிஐஐடி) கீழ் உருவாக்கப்பட்டுள்ள "திட்டக் கண்காணிப்புக் குழு" (பிஎம்ஜி) உதவுகிறது. திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதில் உள்ள சிக்கல்களை சம்பந்தப்பட்ட மத்திய, மாநில அரசுகளுடன் பேசி இந்தக் குழு தீர்வு காண்கிறது. இதுவரை 810–க்கும் மேற்பட்ட திட்டங்களில் ஏற்பட்ட பிரச்னைகள், சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

## பிரயாஸ் திட்டம்

- பணியாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பு ஓய்வு பெறும் பணியாளர்கள் உடனடியாக தொகையை பெறும் வகையில் பிரயாஸ் என்ற திட்டத்தை துவங்கியுள்ளது.

## அனைவருக்கும் எழுத்தறிவு அளிக்கும்"நிபுண் பாரத் திட்டம்" தொடக்கம்

- 2020–ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கையின் ஓர் அங்கமாக நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் எழுத்தறிவு வழங்கும் "நிபுண் பாரத்" திட்டம் (ஜுலை 5) தொடங்கி வைக்கப்படுகிறது.
- மத்திய கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையானது நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் புரிதலுடன் வாசிப்பதற்கும், எண்ணறிவில் போதிய தகுதியைப் பெறுவதற்கும் ஏதுவாக "நிபுண் பாரத்" என்கிற திட்டத்தை இயக்கமாக அறிமுகப்படுத்தவிருக்கிறது. இதை மத்திய கல்வித் துறை அமைச்சர் ரமேஷ் போகிரியால் மெய்நிகர் முறையில் தொடங்கி வைக்கிறார்.
- கடந்த 2020–ஆம் ஆண்டு ஜுலை மாதம் வெளியிடப்பட்ட தேசிய கல்விக் கொள்கையின் அங்கமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, மத்திய பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை இந்த நிபுண் பாரத் திட்டத்தை அமைத்துள்ளது.
- நாட்டில் 3 வயது முதல் 11 வயது வரையில் சுமார் 5 கோடி குழந்தைகள் உள்ளனர். இதை முன்னிட்டு, 2026–27 ஆம் ஆண்டுக்குள் மூன்றாம் வகுப்பை நிறைவு செய்வதற்குள் ஒவ்வொரு குழந்தையும் புரிதலுடனான எழுத்து வாசிப்பிலும், எண்ணறிவில் போதிய தகுதியைப் பெறுவதற்கும் ஏதுவான சூழலியலை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது.

## பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டம்

- பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின் கீழ் 4–ஆம் கட்டமாக இலவச உணவு தானியங்களை விநியோகிக்கும் பணிகள் தொடங்கியுள்ளதாகவும், இதுவரை 14,700 டன் தானியங்கள் பயனாளிக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின் கீழ் 4–ஆம் கட்டமாக இலவச உணவு தானியங்களை விநியோகிக்கும் பணிகள் தொடங்கியுள்ளன. பொது விநியோகத் திட்ட பொருட்களை விநியோகிக்க வெவ்வேறு காலநிலைகளை மாநிலங்கள் பின்பற்றுவதால் இலவச உணவு தானியங்களின் 4–ஆம் கட்ட விநியோகத்தைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. எனினும் தற்போது தமிழ்நாடு, ராஜஸ்தான், ஜார்கண்ட் மாநிலங்களில் அந்தப் பணிகள் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளன. நவம்பர் வரை இலவச உணவு தானியங்கள் விநியோகம் தொடரும். இந்தத் திட்டத்தின் 3–ஆம் கட்டத்தில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த உணவு தானியங்களில் சுமார் 89 சதவீதம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

## 'ஒரே பாரதம் உன்னத பாரதம்"

- மத்திய அரசின் "ஒரே பாரதம் உன்னத பாரதம்" திட்டத்தின் கீழ் உயர்கல்வி நிறுவனங்களில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளை அறிக்கையாக அனுப்புமாறு யுஜிசி அறிவுறுத்தியுள்ளது.

- தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்காக மத்திய அரசு ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய அமைச்சகங்கள், கல்வி நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து பங்கேற்கச் செய்வதன் மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மொழி, இலக்கியம், பண்பாடு, விளையாட்டு, சுற்றுலா மற்றும் இதர முறைகள் மூலம் மக்களிடையே பரிவர்த்தனைகளை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## பிரதம மந்திரி அனைவருக்கும் வீடு திட்டம்

- 2022–ம் அண்டிற்குள் இந்தியாவில் வீடற்ற அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டமான பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனாவின் செயல்பாடுகளில் சில நிதி அளித்தலில் உள்ள குறைபாடு காரணமாக திட்டத்தின் இலக்கு விரைவில் அடைய இயலாமல் போவதற்கான வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது.
- 2021–ல் நிலவரப்படி பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா கிராமப்புறங்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 67% சதவீதம் மட்டுமே அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2021–2026 வரையிலான ஆயுஷ் திட்டம்

- 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தக் கூடிய தேசிய ஆயுஷ் திட்டத்தை பிரதமர் தலைமையிலான அமைச்சரவை செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.
- 4607 கோடி திட்டத்தில் (3000 கோடி மத்திய அரசும் 1607 கோடி மாநில அரசுகளும் பங்களிக்கும்)
- தேசிய ஆயுஷ் திட்டம் முதன் முதலில் 2014–ல் துவங்கப்பட்டது.
- ஆயுர்வேதா, சித்தா, சோவா, ரிக்பா, ஹோமியோபதியை உள்ளடக்கிய திட்டம், அனைத்து அரசு மருத்துவ மனைகளிலும் செயல்படுத்தப்படும்.

## மத்திய அரசு ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தை 2025 வரை நீட்டித்துள்ளது

- 2016 ஏப்ரல் மாதத்தில் இந்த திட்டம் பட்டியலின மற்றும் பழங்குடியினருக்காக அவர்களுள் முக்கியமாக பெண்களுக்காக இந்த திட்டம் துவங்கப்பட்டது.
- இந்த திட்டத்தின் கீழ் 1,16,266 கோடிக்கும் மேல் பெண்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

## SMILE திட்டம்

- மத்திய சமூக நீதி மற்றும் வலுப்படுத்தல் அமைச்சகம் நடுத்தர வருவாய் உள்ள குடும்பங்களின் நலனுக்காக SMILE என்ற திட்டத்தை வடிவமைத்தள்ளது.
- பிச்சை எடுப்பவர்கள் மறுவாழ்க்கைகாகவும் இந்த திட்டம் வெயல்படுத்தப்படுகிறது.
- உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## பாரதியா பிராகிரிதிக் கிரிஷி பதாதி திட்டம்

- பாரம்பரிய உள்நாட்டு பழக்க வழக்கங்களை மேம்படுத்தும் திட்டமான பரம்பிரகத் கிருஷி விகாஸ் யோஜனாவின் துணைத்திட்டமாக பாரதிய பிராக்ரிதி–யை மத்திய அரசு துவங்க உள்ளது.
- விவசாயத்தில் நவீன வேதி பொருள்கள் இல்லாமல் மாட்டுச்சாணம் போன்ற இயற்கை பொருட்களைக் கொண்டு பயிரிடல் முறைகளை ஊக்கவிப்பதே இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும்.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### இந்தியாவில் 35% புலிகள் பாதுகாப்பு பகுதிக்கு வெளியே உள்ளது

- WWF–UNEP அறிக்கையில் இந்தியாவில் வரும் மொத்த புலிகளில் 35% பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே வாழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- "Future for All – A Necessity for Human–Wildlife Coexistence", என்ற அறிக்கையில் மனிதர்கள் மற்றும் விலங்குகள் பிரச்சனை நிகழும் பகுதிகளில் 9.67 சதவீதம் மட்டும் சரி செய்யப்பட்டுள்ளது.

**World Wide Fund for Nature**

- தலைமையிடம் – கிளாண்ட் சுவிட்சர்லாந்து

UNEP (UN Environment Programme)

- தலைமையிடம் : நைரோபி, கென்யா

### ஸ்ரீவில்லிபுத்தூரில் அதிக சிறுத்தைகள்

- ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் அணில்கள் சரணாலயம் மேகமலை பகுதிகள் இணைந்து 5வது புலிகள் காப்பகமாக சமீபத்தில் உருவாக்கப்பட்டது.
- இந்த பகுதியில் மேற்கு மலைத்தொடர்ச்சி பகுதிகளிலேயே அதிக எண்ணிக்கையில் சிறுத்தைகள் உள்ளது என 2018 இந்திய சிறுத்தைகள் கண்கெடுப்பு அமைப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கை சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

| Tiger reserve | Leopards using the reserve | Leopards within the reserve | Density (Per 100 sq km) |
|---|---|---|---|
| Anamalai | 115 | 70 | 6.96 |
| Kalakkad –Mundanthurai | 156 | 111 | 10.18 |
| Mudumalai | 209 | 138 | 12.11 |
| Sathyaman–galam | 172 | 132 | 7.05 |



# 4.பொருளாதாரம்

## 4.1 தற்போதைய சமூக பொருளாதார சிக்கல்

### மே மாதத்துக்குப் பிறகு மீண்டெழுகிறது பொருளாதாரம்

- இந்திய பொருளாதாரம் நலிவடைந்து காணப்பட்ட நிலையில் கடந்த மே மாத பிற்பகுதியில் இருந்து மீண்டெழுகிறது என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்ததாஸ் கூறினார்.
- கடந்த 2020–21–ஆம் நிதியாண்டின் பிற்பகுதியில் மீட்சிபெற்ற பொருளாதாரம் மீண்டும் கடந்த ஏப்ரல்–மே மாதங்களில் நலிவடைந்தது. கரோனா பெருந்தொற்று அலை முடிவுக்கு வந்த பிறகு கடந்த மே மாதத்தின் பிற்பகுதி மற்றும் ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் பொருளாதார நடவடிக்கை ஏற்றம் பெறத் தொடங்கியது.

## 4.2 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### கரோனா: முறைசாரா தொழிலாளர்களுக்கு உலக வங்கி ரூ.3,700 கோடி கடனுதவி

- கரோனா சூழலில் பாதிக்கப்பட்டுள்ள முறைசாராத் தொழிலாளர்களுக்கு ரூ.3,717.28 கோடி (500 மில்லியன் அமெரிக்க டாலர்) கடனுதவி அளிப்பதாக உலக வங்கி அறிவித்துள்ளது. இந்தக் கடனுதவி மாநிலங்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில், மொத்தம் 500 மில்லியன் அமெரிக்க டாலரில் உலக வங்கியின் கிளை அமைப்புகளான சர்வதேச மேம்பாட்டு சங்கம் 112.50 மில்லியனையும், சர்வதேச மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி 387.50 மில்லியனையும் கடனாக வழங்குகிறது.
- 18.5 ஆண்டுகளுக்கு இந்தக் கடன் முதிர்ச்சி அடையும் காலமாகவும், அடுத்த ஐந்தாண்டுகள் கூடுதல் அவகாசமாகவும் அளிக்கப்படுகிறது.
- கரோனா பாதிப்பு தொடங்கியதில் இருந்து இந்தியாவின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காகவும், ஏழைகள், மிகவும் பின்தங்கிய மக்களின் உதவிகளுக்காகவும் உலக வங்கி இதுவரை ரூ.12,264.54 கோடியை (1.65 பில்லியன் அமெரிக்க டாலர்) வழங்கி உள்ளது.

### இந்திய பொருளாதார அமைப்பின் மைல்கல் ஜிஎஸ்டி பிரதமர் பாராட்டு

- சரக்கு–சேவைவரி(ஜிஎஸ்டி)அறிமுகப்படுத்தப்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டுத் தெரிவித்தார்.
- கடந்த 2017–ஆம் ஆண்டு ஜூலை 1–ஆம் தேதி ஜிஎஸ்டி வரி வசூல் முறை தேசிய அளவில் அமலபடுத்தப்பட்டது. ஜூன் 30 ஜிஎஸ்டி அமலாகி 4 ஆண்டுகள் நிறைவடைந்தது.
- இது தொடர்பாக சுட்டுரையில் பிரதமர் வெளியிட்ட பதிவில், "இந்தியாவின் பொருளாதார அமைப்பில் ஜிஎஸ்டி, ஒரு மைல்கல்லாக இருந்து வருகிறது. இது வெளிப்படைத்தன்மை, இணக்கம் மற்றும் ஒட்டுமொத்த வசூல் ஆகியவற்றை கணிசமாக அதிகரிக்கும். அதே வேளையில், சாதாரண மனிதர்கள் மீதான வரிகள், இணக்கச் சுமை மற்றும் ஒட்டுமொத்த வரிச்சுமை ஆகியவற்றைக் குறைத்துள்ளது" என்று கூறியுள்ளார்.

## மதுபானங்களுக்கான ஆல்கஹால் மீது மாநிலங்களே வரி விதிப்பை தொடரலாம்

- மதுபானங்கள் தயாரிக்கப் பயன்படும் ஆல்கஹால் மீது மாநில அரசுகளே வரி விதிப்பை தொடர்ந்து மேற்கொள்ள சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சில் முடிவு செய்துள்ளதாக ஜிஎஸ்டி கவுன்சிலின் கூடுதல் செயலர் எஸ்.கே.ரஹ்மான் தெரிவித்தார்.
- மதுபானங்கள் சரக்கு–சேவை வரி வரம்புக்குள் கொண்டு வரப்பட்டவில்லை. அவற்றையும் ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டு வர வேண்டுமென்று கோரிக்கை எழுந்தது. இது தொடர்பாக, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் கடந்த மே 28–ஆம் தேதி நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது, மதுபானங்கள் தயாரிக்கப் பயன்படும் ஆல்கஹாலை தற்போதைய சூழலில் ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டு வர வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டதாக எஸ்.கே.ரஹ்மான் தெரிவித்தார்.

## ஜிடிபி–யில் சுற்றுலாத் துறை பங்களிப்பு சரிவு

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) சுற்றுலாத் துறையின் பங்களிப்பு 4.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது குறித்து எஸ்பிஐ ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- கடந்த 2020–ஆம் ஆண்டில் நாட்டின் ஜிடிபியில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு 4.7 சதவீதமாக உள்ளது. ஆனால், அது முந்தைய 2019–ஆம் ஆண்டில் 6.9 சதவீதமாக இருந்தது.
- கரோனாவின் முதல் அலை காரணமாக சுற்றுலாத் துறை 36.3 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக, துறை சார்பான வேலைவாய்ப்புகளும் 3.18 கோடியாக சரிந்தது. 2019–ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 4.01 கோடியாக இருந்தது. இதன் மூலம், சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பு 20.8 சதவீத சரிவைச் சந்தித்தது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜுன்–ல் ஜிஎஸ்டி வருவாய் ரூ.1 லட்சம் கோடிக்குக் கீழ் குறைவு

- கரோனா தொற்றின் 2–ஆவது அலை பரவல் காரணமாக கடந்த ஜுன் மாதத்தில் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) வருவாய் ரூ.92,849 கோடியாகக் குறைந்துள்ளது.
- இது கடந்த 10 மாதங்களில் இல்லாத அளவுக்குக் குறைந்தபட்ச ஜிஎஸ்டி வருவாயாகும்.
- கரோனா தொற்று பரவல் காரணமாக கடந்த ஆண்டில் அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தால் பொருளாதார நடவடிக்கைகள் கடும் பின்னடைவைச் சந்தித்தன. அதன் காரணமாக சரக்கு–சேவை வரி வருவாயும் குறைந்தது. முக்கியமாக, கடந்த ஆண்டு ஏப்ரலில் குறைந்தபட்ச அளவாக ரூ.32,172 கோடி மட்டுமே வருவாய் கிடைத்தது.

## இந்தியப் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 10%–ஆக குறைத்தது ஃபிட்ச்

- நடப்பு நிதியாண்டுக்கான இந்தியப் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 10 சதவீதமாக குறைப்பதாக ஃபிட்ச் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து தர மதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:
- கரோனா இரண்டாவது அலைக்குப் பிறகு பொருளாதார மீட்சியானது குறைவான வேகத்திலேயே உள்ளது. கரோனா தடுப்பூசி திட்டம் விரைவுபடுத்தப்பட்டால் இது வர்த்தகம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை நிலையான அளவில் புத்துயிர் பெற உதவும்.
- நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் உருவான கரோனா பேரிடர் வங்கித் துறைக்கு மிகப்பெரிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது.
- இது போன்ற சூழல்களை கருத்தில் கொள்ளும் போது நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டுக்கான இந்தியப் பொருளாதார வளர்ச்சி 10 சதவீதமாக இருக்கும் என தற்போது குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது, முந்தைய மதிப்பீட்டில் இது 12.8 சதவீதமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தங்கப் பத்திரத்தின் விலை கிராம் ரூ.4,807–ஆக நிர்ணயம்

- தங்கப் பத்திர விற்பனை (ஜுலை 12) தொடங்கவுள்ள நிலையில், அதன் விலையை கிராமுக்கு ரூ.4,807–ஆக நிர்ணயித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

**இது குறித்த ரிசர்வ் வங்கி மேலும் கூறியுள்ளதாவது:**

- 3 தின சராசரி விலை: நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டுக்கான நான்காம் கட்ட தங்கப் பத்திர

விற்பனை ஜுலை 12–ஆம் தேதி தொடங்கி 16–ஆம் தேதி வரை 5 நாள்கள் நடைபெறவுள்ளது. இந்த கட்டத்தில் வெளியிடப்படும் 999 சுத்த தன்மை கொண்ட தங்கப்பத்திரத்தின் விலை கிராமொன்றுக்கு ரூ.4,807–ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வெளியீட்டுக்கு முந்தைய மூன்று வர்த்தக தின சராசரி விலையினை அடிப்படையாகக் கொண்டு தங்கப் பத்திரங்களுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- ரூ.50 தள்ளுபடி: மத்திய அரசுடன் ரிசர்வ் வங்கி நடத்திய ஆலோசனையின் அடிப்படையில் தங்கப் பத்திரங்களை வாங்க ஆன்லைனில் விண்ணப்பித்து டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவோருக்கு கிராமுக்கு ரூ.50 தள்ளுபடி வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.
- அத்தகைய முதலீட்டாளர்களுக்கு ஒரு கிராம் தங்கப் பத்திரத்தின் விலை ரூ.4,757–ஆக இருக்கும் என ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.
- முதலீட்டு அளவு: தற்போது வெளியிடப்படவுள்ள தங்கப் பத்திரங்களில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் 1 கிராம் முதல் அதிகபட்சம் 4 கிலோ வரை முதலீடு செய்ய முடியும். அஞ்சல் அலுவலகங்கள், வங்கிகள், பங்குச் சந்தைகள் மூலமாக தங்கப்பத்திரங்கள் முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன. நடப்பாண்டு மே 31 முதல் ஜுன் 4 தேதி வரையில் நடைபெற்ற மூன்றாம் கட்ட தங்கப்பத்திர விற்பனையில் கிராம் ரூ.4,889–ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.
- 6 கட்ட தங்கப்பத்திர விற்பனை: 2021 மே மாதத்திலிருந்து 2021 செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் ஆறு கட்டங்களாக தங்கப் பத்திர விற்பனையை மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த தங்கப் பத்திரங்களை மத்திய அரசின் சார்பில் ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது.
- சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கம்: நேரடியாக தங்கம் வாங்கும் போக்கை குறைத்து சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் கடந்த 2015–ஆம் ஆண்டு நவம்பரில் தங்கப் பத்திரம் திட்டத்தை மத்திய அரசு தொடக்கி வைத்தது.
- 2021 மார்ச் இறுதி வரையிலுமாக தங்கப் பத்திர விற்பனையின் மூலமாக ரூ.25,702 கோடி திரட்டப்பட்டுள்ளது.
- கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் ரிசர்வ் வங்கி 12 கட்டங்களாக தங்கப் பத்திரங்களை வெளியிட்டது. இதன் மதிப்பு ரூ.16,049 கோடியாகும் (32.35 டன்).

## கர் கர் ரேஷன் திட்டம்

- குறைந்த வருவாயை உடைய வாடிக்கையாளர் களுக்கு கோவிட்–19 காலத்திற்கான தனித்துவமான பணியாளர் வருங்கால வைப்பு திட்டத்தை IDFC வங்கி இந்தியாவில் முதன் முதலாக துவங்கியுள்ளது.

## கொரோனா பரவலுக்கு எதிராக போரிட 650 பில்லியன் டாலர்

- உலக நாடுகள் கொரோனாவிற்கு எதிராக போரிட சர்வதேச செலவாணி நிதியம் (IMF) 650 பில்லியன் (டாலர் ஒதுக்கீடு) செய்யப்பட்டுள்ளது.
- இந்ததகவல்IMFதலைமைஇயக்குநர்கிரிஸ்டலினா ஜார்ஜிவாவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி: நீதி ஆயோக் துணைத் தலைவர் நம்பிக்கை

- இந்திய பொருளாதாரம் வலுவான நிலையை நோக்கி செல்வதால், நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்டும் என்று நீதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் நம்பிக்கை தெரிவித்தார்.
- நாட்டின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம், கரொனா முதல் அலையின் தொடக்கத்திலும் இரண்டாவது அலை தாக்குதலின் போதும் இருந்ததைக் காட்டிலும், மூன்றாவது அலையின்போது குறைவாகவே இருக்கும்.
- நடப்பு நிதியாண்டில் அந்நிய நேரடி முதலீடும் அதிகரித்துள்ளன. பல நிறுவனங்கள் பொது பங்குகளை (ஐபிஓ) வெளியீடுவதற்கு தயார் நிலையில் உள்ளன. நடப்பு நிதியாண்டில் அரசு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் ரூ.1.75 லட்சம் கோடி திரட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பங்குகளை விற்பனை செய்வதற்கு சாதகமான சூழல் நிலவுகிறது. இதனால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடைந்துவிடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

## இந்தியாவின் தொழில்துறை உற்பத்தி 29.3% வளர்ச்சி

- இந்தியாவின் தொழில் துறை உற்பத்தி சென்ற மே மாதத்தில் 29.3 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இது, 2020 மே மாதத்தில் 33.4 சதவீதம் என்ற அளவில் பின்னடைவைச் சந்தித்திருந்தது. அதே சமயம், 2020 பிப்ரவரியில் இந்திய தொழில்துறை 5.2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

## சில்லறைப் பணவீக்கம் 6.26% ஆக குறைவு

- நாட்டின் சில்லறைப் பணவீக்கம் சென்ற ஜுன் மாதத்தில் 6.26 சதவீதமாக சற்று குறைந்துள்ளது. இது, முந்தைய மே மாதத்தில் 6.30 சதவீதமாக காணப்பட்டது.
- உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் ஜுன் மாதத்தில் 5.15 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதேசமயம், மே மாதத்தில் இப்பணவீக்கம் 5.01 சதவீதமாக காணப்பட்டது என தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

## எல்ஐசி பங்கு விலக்கல்: மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல்

- ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (எல்ஐசி) பங்குவிலக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- பொதுத் துறை நிறுவனங்களில் பங்குவிலக்கல் மற்றும் தனியார்மயமாக்கல் நடவடிக்கைகள் மூலம் நடப்பு நிதியாண்டில் ரூ.1.72 லட்சம் கோடி திரட்ட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக எல்ஐசியிலும் மத்திய அரசு பங்கு விலக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் எல்ஐசி பொதுப் பங்கு வெளியீடு (ஐபிஓ) நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக எல்ஐசி சட்டத்திலும் தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எல்ஐசி பொதுப் பங்கு வெளியீட்டில் 10 சதவீதம் காப்பீட்டுதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

## 100 பில்லியன் "நீல பொருளாதாரம்"

- இந்தியாவின் ஆழ்கடல் திட்டத்தின் மூலம் பெருங்கடல் மூலாதாரங்கள் மூலமும் நீலப் பொருளாதாரம் எனப்படும் கடல்சார் பொருளாதாரத்தின் இந்தியா 100 பில்லியன் டாலர் அளவிற்கான வர்த்தகத்தில் விரைவில் ஈடுபடும் என இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

## பணவீக்கம் 12.07%–ஆக குறைந்தது

- மொத்த விற்பனை விலை குறியீட்டெண் அடிப்படையில் (டபிள்யூபிஐ) கணக்கிடப்படும் பணவீக்கம் சென்ற ஜுன் மாதத்தில் 12.07 சதவீதமாக சற்று குறைந்துள்ளது.
- இதுகுறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது: கச்சா எண்ணெய் மற்றும் உணவுப் பொருள்களின் விலை குறைந்ததையடுத்து ஜுன் மாதத்துக்கான பொதுப் பணவீக்கம் 12.07 சதவீதமாக குறைந்துள்ளது. இருப்பினும், தொடர்ந்து மூன்றாவது மாதமாக இப்பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் இருந்து வருகிறது. 2020 ஜுனில் பொதுப் பணவீக்கம் (–) 1.81 சதவீதமாக காணப்பட்டது.
- வெங்காயத்தின்விலைஅதிகரித்திருந்தபோதிலும், உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் நடப்பாண்டு ஜுன் மாதத்தில் 3.09 சதவீதமாக மிகவும் குறைந்துள்ளது. இது முந்தைய மே மாதத்தில் 4.31 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது.
- மேலும், தயாரிப்புத் துறை பொருள்களுக்கான பணவீக்கமும் 10.83 சதவீதத்திலிருந்து 10.88 சதவீதமாக சற்று அதிகரித்தது.
- அதே சமயம், எரிபொருள், மின்சாரம் ஆகிய வற்றுக்கான பணவீக்கம் 37.61 சதவீதத்திலிருந்து 32.83 சதவீதமாக குறைந்தது என வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## கரோனா பேரிடருக்குப் பிறகும் நிதி சீரமைப்பு முன்னுரிமை கொள்கை தொடரும்: ஆர்பிஐ

- கரோனா பேரிடருக்குப் பிறகு நிதி சீரமைப்பு முன்னுரிமை கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிப்போம் என ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்தார்.
- இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:
- கரோனா பேரிடருக்குப் பிறகான வளர்ச்சியை ஒருங்கிணைந்ததாகவும் நீட்டித்த தன்மை உடையதாகவும் மீட்டெடுப்பதற்கு ரிசர்வ் வங்கி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். அதிலும், குறிப்பாக நிதி சீரமைப்பு என்பது ரிசர்வ் வங்கியின் முன்னுரிமை கொள்கையாக தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.
- அணுகுதல், பயன்பாடு, தரம் உள்ளிட்ட மூன்று பரிமானங்கள் இந்த குறியீட்டில் இடம் பெற்றிருக்கும்.

## ஜிஎஸ்டி வருவாய் இழப்பீடாக மாநிலங்களுக்கு ரூ.75,000 கோடி விடுவிப்பு

- நடப்பு நிதியாண்டுக்கான சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) வருவாய் இழப்பீடாக ரூ.75,000 கோடியை மாநிலங்களுக்கும் யூனியன்

பிரதேசங்களுக்கும் மத்திய அரசு விடுவித்துள்ளது.

- ஜிஎஸ்டி இழப்பீடாக தமிழகத்துக்கு ரூ.3,818.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- அதிகபட்சமாக கர்நாடகத்துக்கு 8,542.17 கோடியும், மகாராஷ்டிரத்துக்கு ரூ.6,501.11 கோடியும், குஜராத்துக்கு ரூ.6,151.10 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு ரூ.3,818.50 கோடியும், கேரளத்துக்கு ரூ.4,122.27 கோடியும், உத்தரபிரதேசத்துக்கு ரூ.3,839.72 கோடியும், புதுச்சேரிக்கு ரூ.517 கோடியும் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.
- இந்த இழப்பீட்டுத் தொகையானது, கரோனா தொற்று பரவலை மாநிலங்கள் திறம்பட எதிர்கொள்ளவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் உதவும் என்று மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் ரூ.1.10 லட்சம் கோடியைக் கடனாகப் பெற்று ஜிஎஸ்டி இழப்பீடாக மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்திய பொருளாதாரம் 2023–ஆம் நிதியாண்டிலிருந்து வேகமெடுக்கும்: சிஇஏ

- நாட்டின் பொருளாதாரம் வரும் 2023–ஆம் நிதியாண்டு முதல் வேகமெடுக்கத் தொடங்கும் என்று மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
- டன் & பிராட்ஸ்ட்ரீட் ஏற்பாடு செய்திருந்த காணொலி மூலமான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் இதுகுறித்து மேலும் கூறியுள்ளதாவது:
- கரோனாவுக்கான தடுப்பூசி திட்டமும் விரைவுப் படுத்தப்பட்டு வருகிறது.
- கரோனா இரண்டாவது அலை எதிர்பார்த்த அளவுக்கு பொருளாதாரத்தில் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.
- மத்திய அரசின் பல்வேறு சீர்திருத்த முயற்சி மற்றும் தடுப்பூசி திட்டம் ஆகியவை ஒருங்கிணைந்து பொருளாதாரத்தில் நல்ல பயனை விளைவிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

## மாநிலங்களுக்கான ஜிஎஸ்டி இழப்பீட்டு நிலுவை ரூ.81,179 கோடி

- ஜிஎஸ்டி இழப்பீட்டு தொகையாக மாநிலங்களுக்கு ரூ.81,179 கோடியை வழங்க வேண்டியுள்ளதாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இது குறித்து மத்திய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கூறியுள்ளதாவது:
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஜிஎஸ்டி இழப்பீட்டு தொகையாக கடந்த நிதியாண்டுக்கு ரூ.91,000 கோடி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது முழு அளவிலான தேவையை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. கடந்த 2020–21 நிதியாண்டுக்கு ஜிஎஸ்டி இழப்பீடாக மாநிலங்களுக்கு மத்திய அரசு இன்னும் ரூ.81,179 கோடியை வழங்க வேண்டியுள்ளது. நடப்பு ஏப்ரல்–மே மாதங்களில் இந்த நிலுவை ரூ.55,345 கோடியாக உள்ளது.
- கடந்த நிதியாண்டுக்கு மகாராஷ்டிரத்துக்கு ரூ.15,138 கோடியும், கர்நாடகத்துக்கு ரூ.7,202 கோடியும், உத்தரப்பிரதேசத்துக்கு ரூ.7,109 கோடியும், குஜராத்துக்கு ரூ.6,583 கோடியும், தமிழ்நாட்டுக்கு ரூ.6,155 கோடியும், தில்லிக்கு ரூ.5,190 கோடியும், மேற்கு வங்கத்துக்கு ரூ.3,911 கோடியும், பஞ்சாப்புக்கு ரூ.3,752 கோடியும் ஜிஎஸ்டி நிலுவை வழங்க வேண்டியுள்ளது.

## அந்நியச் செலாவணி கையிருப்பில் புதிய உச்சம்

- இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஜூலை 9–ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 61.189 கோடி டாலரைத் தாண்டி புதிய வரலாறு படைத்துள்ளது.
- இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- இந்தியாவின் அந்நியச் செலவணி கையிருப்பு 2021 ஜூலை 9–ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 188 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.14.122 கோடி) அதிகரித்து 61.189 கோடி டாலரை (ரூ.45.89 லட்சம் கோடி) கடந்து புதிய வரலாற்று சாதனையை பதிவு செய்துள்ளது.
- இதற்கு முந்தைய ஜூன் 2–ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் செலாவணி கையிருப்பானது 101 கோடி டாலர் அதிகரித்து 61.001 கோடி டாலராக காணப்பட்டது. ஒட்டுமொத்த கையிருப்பில் முக்கிய பங்களிப்பைக் கொண்டுள்ள அந்நிய கரன்ஸி சொத்து மதிப்பு (எஃப்சிஏ) வெகுவாக அதிகரித்ததன் காரணமாகவே ஜூலை 2–ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் செலாவணி கையிருப்பானது வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து சாதனை புரிந்துள்ளது.

## இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

- ஆசிய வளர்ச்சி வங்கி இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 2022ம் ஆண்டு நிதியாண்டில் 10% ஆகவும் 2023 நிதி ஆண்டின் 7.5% ஆக இருக்கும் எனவும் கணித்துள்ளது.

## டிஜிட்டல், நிலையான வர்த்தக வசதிகள்: ஐ.நா. ஆய்வில் இந்தியா முன்னேற்றம்

### வெளிப்படைத்தன்மையில் 100% மதிப்பெண்

- எண்ம முறையிலான (டிஜிட்டல்) நிலையான வர்த்தக வசதி தொடர்பாக ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக ஆணையம் நடத்திய ஆய்வில் இந்தியா 90.32 சதவீத மதிப்பெண்களுடன் முன்னேறியுள்ளது. கடந்த 2019–ஆம் ஆண்டில் இந்த அளவு 78.49 சதவீதமாக இருந்தது.
- 143 நாடுகளில் பொருளாதாரங்களை மதிப்பீடு செய்தபின், 2021–ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் வெளிப்படைத்தன்மை, நடைமுறைகள், நிறுவன ஏற்பாடு மற்றும் ஒத்துழைப்பு, காகிதப் பயன்பாடு இல்லாத வர்த்தகம், நாடுகள் தாண்டி வர்த்தகம் ஆகிய 5 முக்கிய விஷயங்களில் இந்தியாவின் முன்னேற்றம் சிறப்பாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்பெண், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பில் உறுப்பினராக உள்ள பிரான்ஸ், பிரிட்டன், கனடா, நார்வே, பின்லாந்து போன்ற நாடுகளைவிட அதிகமாக உள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்பெண், ஐரோப்பிய யூனியன் நாடுகளின் சராசரியை விட அதிகமாக உள்ளது.
- வெளிப்படைத்தன்மை விஷயத்தில் இந்தியா 100 சதவீத மதிப்பெண்ணை பெற்றுள்ளது. வர்த்தகத்தில் மகளிர் என்ற பிரிவில் 66 சதவீத மதிப்பெண்ணை இந்தியா பெற்றுள்ளது.

## நாட்டின் ஏற்றுமதி 45% அதிகரிப்பு

- நாட்டின் ஏற்றுமதி ஜுலை 1–24–ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் 45.13 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இது குறித்து அந்த அமைச்சகத்தின் புள்ளி விவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- நவரத்தினங்கள் – ஆபரணங்கள்: நடப்பு ஜுலை மாதத்தின் 1 முதல் 21–ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் நவரத்தினங்கள், ஆபரணங்கள், பெட்ரோலிய பொருள்கள், பொறியியல் சாதனங்கள் ஆகிய துறைகளின் ஏற்றுமதி கணிசமான வளர்ச்சியை கண்டது. இதன் காரணமாக, இந்த காலகட்டத்தில் நாட்டின் ஏற்றுமதி 45.13 சதவீதம் அதிகரித்து 2,248 கோடி டாலரை (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1.68 லட்சம் கோடி) எட்டியுள்ளது.
- வர்த்தக பற்றாக்குறை: இந்த காலகட்டத்தில் நாட்டின் இறக்குமதியும் 64.82 சதவீதம் உயர்ந்து 3,177 கோடி டாலராகியுள்ளது. இதையடுத்து, வர்த்தக பற்றாகுறை 929 கோடி டாலராக உள்ளது.
- ஜுலை 1–21 இடைப்பட்ட காலத்தில் நவரத்தினங்கள், ஆபரணங்கள், பெட்ரோலியம், பொறியியல் துறைகளின் ஏற்றுமதி முறையே 42.45 கோடி டாலராகவும், 92.33 கோடி டாலராகவும், 55.14 கோடி டாலராகவும் இருந்தன.
- பெட்ரோலியம் இறக்குமதி: அதே நேரம், இறக்குமதியைப் பொருத்தவரையில் பெட்ரோலியம், கச்சா தயாரிப்புகளின் இறக்குமதி 77.5 சதவீதம் உயர்ந்து 116 கோடி டாலராக அதிகரித்தது.

## இந்திய பொருளாதார வளர்ச்சி 8.8–9%

- கேர் ரேட்டிங் நிறுவனம் நிறுவனம் 2022ம் நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 8.8–9% இருக்கும் என கணித்துள்ளது.

## IMF, ஆசிய மற்றும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை குறைத்துள்ளது

- வரும் காலங்களில் ஆசியா மற்றும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறிப்பிட்ட அளவிற்கு குறையும் என சர்வதேச செலவாணி நிதியம் அறிவித்துள்ளது.
- ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5% எனவும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.5% ஆகவும் இருக்கும் என IMF தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**சர்வதேச செலவாணி நிதியம்**

- தோற்றம் – 1944 (1945)
- தற்போதைய தலைவர் – கிரிஸ்டலினா ஜார்ஜிவா
- தலைமையிடம் – வாஷிங்டன் D.C.

## 'விரைவில் 3 விகிதங்களில் ஜிஎஸ்டி"

- தற்போது 5 விகிதங்களில் உள்ள ஜிஎஸ்டி விரைவில் 3 விகிதங்களாக சீரமைக்கப்படும் என்று தலைமைப் பொருளாதார ஆலோசகர் கே.வி.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

- இந்திய தொழிலக, வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பான அசோசேம் சார்பில் காணொலி முறையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் கூறியதாவது: மூன்று விகிதங்களில் ஜிஎஸ்டி இருக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம். ஆனால் தொடக்கத்தில் நடைமுறை வசதிக்காக 5 விகிதங்கள் அறிவிக்கப்பட்டன என நினைக்கிறேன். தற்போது விகிதங்களை சீரமைத்து 3 சரக்கு–சேவை வரி விகிதங்கள் அமைப்பது மிக முக்கியம். அரசு இதுகுறித்து தீவிரமாக ஆலோசித்து வருகிறது. விரைவில் இது பற்றிய முடிவெடுக்கப்படும் என நம்புகிறேன் என்றார்.
- தற்போது 0.25%, 05% ,12%, 18%, 28% என 5 ஜிஎஸ்டி விகிதங்கள் உள்ளன. இதில் முதல் கட்டமாக 12% மற்றும் 18 சதவீதத்தை ஒருங்கிணைக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

## முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி 8.9% வளர்ச்சி

- முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி கடந்த ஜூன் மாதத்தில் 8.9 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்தது.
- இதுகுறித்து வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது:
- முக்கிய எட்டு துறைகளான நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்பு தயாரிப்புகள், உரம், உருக்கு, சிமெண்ட், மின்சாரம் ஆகியவற்றின் உற்பத்தி 2020 ஜூன் மாதத்தில் 12.4 சதவீத பின்னடைவைச் சந்தித்திருந்தது. இதற்கு காரோனா பொதுமுடக்கம் முக்கிய காரணமாக இருந்தது.
- இந்த நிலையில், 2021 ஜூனில் இத்துறைகளின் உற்பத்தி 8.9 சதவீதம் வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. குறிப்பாக, நிலக்கரி, இயற்கை எரிவாயு சுத்திகரிப்பு தயாரிப்புகள், உருக்கு, சிமெண்ட், மின்சாரம் ஆகிய துறைகளின் உற்பத்தி முறையே மதிப்பீட்டு மாதத்தில் 7.4 சதவீதம், 20.6 சதவீதம், 2.4 சதவீதம், 25 சதவீதம், 4.3 சதவீதம் மற்றும் 7.2 சதவீதம் என்ற அளவில் முன்னேற்றம் கண்டிருந்தன.
- 2020 ஜூனில் இத்துறை உற்பத்தி முறையே (–)15.5 சதவீதம், (–) 12 சதவீதம், (–) 8.9 சதவீதம், (–) 23.2 சதவீதம், (–) 6.8 சதவீதம் மற்றும் (–)10 சதவீதம் என்ற அளவில் பின்னடைவைக் கண்டிருந்தன.
- நடப்பாண்டு ஜூனில் கச்சா எண்ணெய் உற்பத்தி 1.8 சதவீதம் பின்னடைவை பதிவு செய்த நிலையில் 2020 ஜூனில் இது 6 சதவீத எதிர்மறை வளர்ச்சியை கண்டது. உரத் துறையின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஜூனில் 2 சதவீதமாக இருந்தது.

# 5.அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### ஊனமுற்ற விண்வெளியாளர்

- ஐரோப்பிய விண்வெளி முகைமை முதல் ஊனமுற்ற விண்வெளியாளரை பயிற்சிக்கு அமர்த்தியுள்ளது.
- உலகில் அனைவருக்கும் விண்வெளி சொந்தமானது என்பதை கூறவே அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஐரோப்பிய விண்வெளி முகைமை தனியார் நிறுவனங்களின் பெருமளவு போட்டியை சமாளிக்க உள்ளது.
- 2021 ஜுலையில் அமேசான் நிறுவனம் பீசோஸ் தனது முதல் முதல் விண்வெளி பயணத்தை துவங்க உள்ளார்.

### இந்தியாவின் முதல் ட்ரோன் எதிர்ப்பு அமைப்பு

- ஹைதராபாத்தை சேர்ந்த கிரீன் ரோபோட்டிக்ஸ் நிறுவனம் உள்நாட்டிலேயே முழுவதுமாக உருவாக்கப்பட்ட இந்திராஜல் என்ற ட்ரோன் எதிர்ப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது.
- 1000 முதல் 2000 சதுர கிலோ மீட்டர் பரப்பை இந்த அமைப்பு பாதுகாக்க கூடியது.

### சீன விண்வெளி வீரர்களின் முதல் விண்வெளி நடை

- சீனாவின் தியான்காங் விண்வெளி மையத்தில் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்காக சென்றுள்ள 3 வீரர்கள் விண்வெளியில் தங்களது முதல் நடையை செய்துள்ளனர்.
- இந்த விண்வெளி மையத்தின் மூலம் நிலவு மற்றும் செவ்வாய்க்கான ரோவர், லேண்டர் திட்டங்களை செயல்படுத்த சீனா திட்டமிட்டுள்ளது.

### புதிய வானிலை ஆய்வு செயற்கைக்கோள்: வெற்றிகரமாக செலுத்தியது சீனா

- புதிய வானிலை ஆய்வு செயற்கைக்கோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்தவும், கடல் வெப்பநிலையைக் கண்காணிக்கவும் இந்த செயற்கைக்கோள் உதவும் என அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக அச்செய்தி நிறுவனம் தெரிவித்திருப்பது: 11 செயற்கை உணர்திறன் கருவிகள் கொண்ட எஃப்ஒய்–3இ என்ற அந்த செயற்கைக்கோள் வடமேற்கு சீனாவில் உள்ள ஜிகுவான் செயற்கைக்கோள் ஏவுதள மையத்திலிருந்து லாங் மார்ச் 4–சி ராக்கெட் மூலம் திட்டமிடப்பட்ட சுற்றுப்பாதைக்குள் செலுத்தப்பட்டது. 8 ஆண்டு செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள செயற்கைக்கோள், வளிமண்டல வெப்பநிலை, ஈரப்பதம் ஆகியவற்றைக் கண்காணிக்கும். பனிப்படலம், கடல்நீர் வெப்பநிலை, இயற்கைப் பேரிடர்கள் ஆகியவற்றையும் கண்காணிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- "இந்த செயற்கைக்கோள் தினமும் காலையில் ஓரிடத்தையும், மாலையில் புவியின் மற்ற பகுதியையும் கண்காணிக்கும். இதன் மூலம் விடியல் மற்றும் அந்தி நேரத்தின் முக்கியமான தருணங்களைப் பதிவு செய்து சீனாவுக்கும் உலகுக்கும் துல்லியமான தரவுகளை வழங்கும்.

### சாட்டிலைட் TV வகுப்புகள்

- இஸ்ரோ நிறுவனம் இந்தியாவில் மாணவர்களுக்கு பயனளிக்க கூடிய வகையிலான சாட்டிலைட் TVயை துவங்குவதற்கான பரிந்துரையை

பாராளுமன்ற கல்விக்கான நிலைக் குழுவிடம் அளித்துள்ளது.

- மாணவர்கள் கற்றலுக்கான தொழில்நுட்ப உதவியை இஸ்ரோ அளிக்க உள்ளது.
- பாராளுமன்ற கல்விக்கான நிலைக்குழுவின் தலைவர் வினை சஹால் தீரா பதே.

**இஸ்ரோ**

- துவக்கம் – 1969
- தலைமையிடம் – பெங்களூரு
- தலைவர் – Dr.K.சிவன்

## "கோவேக்ஸின்" அவசரப் பயன்பாட்டுக்கு விரைவில் அனுமதி

- பாரத் பயோடெக் நிறுவனம் உருவாக்கியுள்ள "கோவேக்ஸின்" கரோனா தடுப்பூசியை அவசரப் பயன்பாட்டுக்கு அனுமதிப்பது தொடர்பாக 4 முதல் 6 வாரங்களில் உலக சுகாதார அமைப்பு முடிவெடுக்கும் என்று அந்த அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன் தெரிவித்தார்.
- தில்லியில் இருந்து அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் இணையதளம் வாயிலாக நடத்திய கருத்தரங்கில் பங்கேற்று அவர் பேசியது:
- கோவேக்ஸின் தடுப்பூசி தொடர்பான விவரங்களை அதன் உற்பத்தி நிறுவனமான பாரத் பயோடெக் தற்போது உலக சுகாதார அமைப்பின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்து வருகிறது. அந்தத் தடுப்பூசி குறித்து உலக சுகாதார நிறுவனம் பரிசீலித்து வருகிறது.

## விண்வெளிக்குச் செல்கிறார் ஜெஃப் பெசோஸ்

- அமேஸான் நிறுவனத்தின் நிறுவனரான ஜெஃப் பெசோஸ் ராக்கெட்டில் விண்வெளிக்குச் செல்வதற்கு அமெரிக்க விமானப் போக்குவரத்து நிர்வாகம் அனுமதி அளித்தது.
- அமெரிக்காவை சேர்ந்த விர்ஜின் கலாக்டிக் என்ற விண்வெளி சுற்றுலா நிறுவனத்தின் உரிமையாளர் ரிச்சர்ட் பிரான்ஸன், அவரது நிறுவனம் தயாரித்த ராக்கெட் விமானம் மூலம் விண்வெளிக்குச் சென்று வந்தார். அவருடன் இந்திய வம்சாவளியை சேர்ந்த ஸ்ரீஷா பண்ட்லா உள்ளிட்ட 5 பேரும் அந்த விண்வெளிப் பயணத்தில் இடம் பெற்றனர். அடுத்த ஆண்டுமுதல் கட்டணம் பெற்றுக்கொண்டு பயணிகளை விண்வெளிக்கு அழைத்துச் செல்ல பிரான்ஸனின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## 10–ஆவது பி–8ஐ போர் விமானம் இந்தியா வருகை

- நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கவல்ல 10–ஆவது பி–8ஐ போர் விமானம் அமெரிக்காவில் இருந்து இந்தியா வந்தடைந்தது.
- அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடமிருந்து 8 பி–8ஐ போர் விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு கடந்த 2009–ஆம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொண்டது. அதையடுத்து, கூடுதலாக 4 போர் விமானங்களை வாங்க கடந்த 2016–ஆம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- முதல் பி–8ஐ போர் விமானம் கடந்த 2013–ஆம் ஆண்டில் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது. அப்போதிலிருந்து 30,000 மணி நேரத்துக்கு அதிகமாக அந்தப் போர் விமானங்கள் பறந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்திய கடல்பகுதியைக் கண்காணிப்பதில் பி–8ஐ விமானங்கள் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன.
- 9வது பி–8ஐ போர் விமானம் கடந்த ஆண்டு நவம்பரில் இந்தியாவுக்கு வந்தது. தற்போது 10–ஆவது போர் விமானம் வந்தடைந்துள்ளன.

## விண்வெளி வெடிப்பை கண்டறிந்துள்ள இந்திய ஆராய்ச்சியாளர்கள்

- விண்வெளியில் ஹைட்ரோஜன் பற்றாக்குறை வெடிப்பு ஏற்படும் சிறப்பு வகை வெடிப்பை இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இதே வெடிப்பை தீவிரவாத ஆராய்வதன் மூலம் மேலும் பல காமா கதிர் வெடிப்பு, வேகமான ரேடியோ அலை வெடிப்புகளை கண்டறிய இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவல்கிணறு இஸ்ரோ மையத்தில் விகாஸ் என்ஜின் சோதனை வெற்றி

- திருநெல்வேலி மாவட்டம் காவல்கிணறு இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் விகாஸ் என்ஜின் சோதனை வெற்றிகரமாக நடந்துள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம் காவல்கிணறில் இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் ராக்கெட்களை இயக்கக்கூடிய என்ஜின்களின் திரவ நிலை சோதனை நடைபெற்று

வருகிறது. இந்நிலையில் இஸ்ரோ நிறுவனம் மனிதர்களுடன் விண்வெளிக்கு செல்லக்கூடிய ககன்யான் விண்கலத்தை விண்வெளிக்கு வெலுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

- இந்த ககன்யான் விண்கலத்தை விண்வெளிக்கு எடுத்து செல்லக்கூடிய ராக்கெட்டில் பொருத்தக்கூடிய விகாஸ் இன்ஜின் 3–ஆவது கட்ட சோதனை காவல்கிணறு இஸ்ரோ மையத்தில் நடைபெற்றது. 240 விநாடிகள் நடைபெற்ற இந்த சோதனை வெற்றிகரமாக நடந்து முடித்துள்ளதாக காவல்கிணறு இஸ்ரோ வட்டாரத்தில் தெரிவித்துள்ளனர்.

## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மக்கள் குறைதீர் செயலி

- மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தால் IIT–கான்பூர் உதவியுடன் உருவாக்கப்பட்ட மக்கள் குறைதீர் செயற்கை நுண்ணறிவு தளம் ராஜ்நாத் சிங்–ஆல் துவங்கி வைக்கப்பட்டுள்ளது.
- மனிதர்கள் நேரடியாக அலையாமல், நேரம் சேமித்தலுக்கும் இடற்பாடுகளை குறைக்கவும் இந்த செயலி பயனுள்ளதாக அமையும்.

## கடற்படைக்கு ரிமோட் மூலம் இயங்கும் துப்பாக்கி

- அந்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ரிமோட் மூலம் இயங்கக்கூடிய துப்பாக்கிகள் இந்திய கடற்படைக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய இந்த துப்பாக்கிகள் இந்திய ஆயுத தளவாட நிறுவனத்தால் தயாரித்து அளிக்கப்பட்டுள்ளது.

## புற்றுநோய் உருவாதலைக் கண்டறியும் கருவி வடிவமைப்பு

- சென்னை IIT யைச் சேர்ந்த விஞ்ஞானிகள் புற்றுநோயை உருவாதலைக் கண்டறியும் NBD என்ற கருவியை உருவாக்கியுள்ளனர்.
- இது குறித்து கேன்சர்ஸ் என்ற பத்திரிகையில் வெளியிடப்படடுள்ளது.

## பெகாஸஸ் உளவு வைரஸ்

- இந்திய பத்திரிக்கை யாளர்கள் மற்றும் உடகவிய லாளர்களை கண்காணிக்கப்படுவதற்காக பெகாஸஸ் வைரஸ் பயன்படுத்தப்பட்டதாக வாஷிங்டன் போஸ்ட் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விண்வெளி சென்று திரும்பினார் அமேசான் நிறுவனர்

- அமேசான் நிறுவனத்தின் நிறுவனரான ஜெஃப் பெசோஸ் தனது சொந்த நிறுவனம் உருவாக்கியுள்ள விண்வெளி ஓடம் மூலம் விண்வெளிக்கு வெற்றிகரமாகச் சென்று திரும்பினார்.
- ஜெஃப் பெசோஸுக்குச் சொந்தமான "ப்ளு ஆரிஜன்" உருவாக்கியுள்ள விண்வெளி ஓடம், முதல் முறையாக மனிதர்களுடன் செவ்வாய்க்கிழமை விண்ணில் செலுத்தப்பட்டது. அதில், ஜெஃப் பெசோஸுடன் அவரது சகோதரர் மார்க் வெசோஸ் பெண் விண்வெளி வீராங்கனை வாலி ஃபங்க் உள்ளிட்ட மேலும் 3 பெர் இருந்தனர்.
- 18 வயதாகும் மார்க் பெசோஸும், 82 வயதாகும் வாலி ஃபங்கும் தான் விண்வெளிக்குச் சென்ற மிகவும் குறைந்த மற்றும் அதிக வயதுடையவர்கள் ஆவர்.

## ரஷ்யாவின் S–500 ஏவுகணைகள்

- ரஷ்யா உற்பத்தி செய்துள்ள S–500 ஏவுகணைகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- 55R6m எனப்படும் ரஷ்யாவின் ஏவுகணை எதிர்ப்பு அமைப்பு வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- இந்தியா S–400 ஏவுகணைகள் வாங்க ரஷ்யாவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

## பிரான்ஸில் இருந்து மேலும் 3 ரஃபேல் விமானங்கள் இந்தியா வருகை

- இந்திய விமானப் படைக்கு மேலும் வலிமை சேர்க்கும் விதமாக, பிரான்ஸில் இருந்து மேலும் 3 ரஃபேல் போர் விமானங்கள் இந்தியாவை வந்தடைந்தன. பிரான்ஸில் இருந்து புறப்பட்ட அந்த விமானங்கள் நடுவழியில் எங்கும் நிற்காமல் 8,000 கி.மீ. பயணித்து இந்தியாவுக்கு வந்து சேர்ந்தன.
- இது குறித்து விமானப் படையின் சுட்டுரைப் பக்கத்தில் வெளியிடப்பட்ட பதிவில், "பிரான்ஸில் உள்ள இஸ்ட்ரஸ் விமானப்படைத் தளத்தில் போர் விமானங்கள் இந்தியா வந்தன. வரும் வழியில் தரையிறங்காமல் நடுவானில் இருந்தபடி எரிபொருள் நிரப்ப உதவிசெய்த ஐக்கிய அரபு அமீரகத்தின் விமானப் படைக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது."

## வியாழன் கிரகத்தின் நிலவில் ஆய்வு: ஸ்பேஸ்–எக்ஸுடன் நாசா ஒப்பந்தம்

- வியாழன் கிரகத்தின் 80 நிலவுகளில் ஒன்றான யூரோப்பாவில் ஆய்வு மேற்கொள்வதற்காக, அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா அந்த நாட்டின் தனியார் நிறுவனமான ஸ்பேஸ்–எக்ஸுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- உயிரினங்கள் வசிப்பதற்கு யூரோப்பா ஏற்றதாக என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அந்த நிலவுக்கு ஆய்வுக் கலனை வரும் 2024–ஆம் ஆண்டு செலுத்துவதற்கான இந்த திட்டத்தில், ஸ்பேஸ்–எக்ஸின் ஃபால்கன் கனரக ராக்கெட் பயன்படுத்தப்படவுள்ளது.
- 23 அடுக்குகளைக் கொண்ட, ஓரளவு மீண்டும் பயன்படுத்தத்தக்க ஃபால்கன்தான் உலகில் தற்போது செயல்பாட்டில் இருக்கும் அதிக சக்தி வாய்ந்த ராக்கெட் என்று கூறப்படுகிறது.

## கரோனா நிவாரணப் பொருள்களுடன் இந்தோனேசியா சென்ற ஐஎன்எஸ் ஐராவத்

- இந்திய கடற்படையைச் சேர்ந்த ஐராவத் போர்க்கப்பல் கரோனா நிவாரணப் பொருள்களுடன் இந்தோனேசியா சென்றடைந்தது.
- ஐஎன்எஸ் ஐராவத் போர்க்கப்பல் ராணுவ தளவாடங்களையும் ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் பல்வேறு நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் ஐராவத் போர்க்கப்பல், மனிதாபிமான அடிப்படையில் உதவிபுரியும் பணிகளிலும் பேரிடரிகளின்போது மீட்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

## கோழி இறைச்சி கழிவுகளில் இருந்து பயோடீசல்

- கோழி இறைச்சி கழிவுகளில் இருந்து பயோடீசலைத் தயாரித்த கேரள கால்நடை மருத்துவருக்கு அதற்கான காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.
- பெட்ரோல், டீசல் ஆகிய வாகன எரிபொருள்கள் அதிக அளவில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்தி வருவதால், அவற்றுக்குரிய மாற்று எரிபொருள்கள் மீதான ஆராய்ச்சி அதிகரித்து வருகிறது. எத்தனால் பயன்பாடு, உயிரி எரிபொருள், இயற்கை எரிவாயு உள்ளிட்டவற்றின் ஆராய்ச்சிகள் இறுதிகட்டத்தை அடைந்துள்ளன.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத எரிபொருளைத் தயாரிக்கும் ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கேரளத்தின் வயநாடு பகுதியைச் சேர்ந்த கால்நடை மருத்துவரும் பேராசிரியருமான ஜான் ஆபிரகாம், கோழி இறைச்சி கழிவுகளில் இருந்து பயோடீசலைத் தயாரிக்கும் முறையைக் கண்டறிந்தார்.
- கோழி இறைச்சியில் கொழுப்பு சத்து அதிகம் இருப்பதால், அதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெயைக் கொண்டு பயோடீசலை அவர் தயாரித்தார்.
- அதே வேளையில், அதன் விலை தற்போதைய டீசல் விலையுடன் ஒப்பிடுகையில் வெறும் 40 சதவீதமாக மட்டுமே உள்ளது.

## அடுத்த ஆண்டு இறுதியில் சந்திராயன்–3 ஏவப்படும்

- அடுத்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் சந்திராயன்–3 விண்கலம் விண்ணில் ஏவப்பட வாய்ப்புள்ளது என்ற மத்திய அணுசக்தி மற்றும் விண்வெளித் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து பூர்வமாக அவர் அளித்த பதிலில், "சந்திராயன்–3 திட்டத்தை மெய்யாக்குவதில் கட்டமைப்புப் பணியை இறுதி செய்தல், துணை அமைப்பு முறைகளின் நடைமுறையாக்கம், ஒருங்கிணைப்பு, விண்கல அளவில் விரிவான சோதனை மற்றும் பூமியின் மீது அமைப்பு முறை செயல்திறனை மதிப்பிடுவதற்கான சிறப்பு சோதனைகள் உள்ளிட்ட பல்வேறு செயல்முறைகள் அடங்கியுள்ளன. இந்தத் திட்டத்துக்கான பணிகள் கரோனா பெருந்தொற்றால் பாதிப்படைந்தது.

## விண்வெளி பயணம் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும்: சுவாதி மோகன்

- நாசாவின் செவ்வாய் கிரக திட்டமான பெர்சிரவன்ஸில் பணியாற்றிய இந்திய வம்சாவளி விஞ்ஞானி சுவாதி மோகன் விண்வெளி பயணங்கள் பணக்காரர்களுக்கு மட்டுமானதாக இல்லாமல் அனைத்து தரப்பு மக்களும் சென்றுவரக் கூடியதாக விரைவில் உருவாகும் என தெரிவித்துள்ளார்.
- சமீபத்தில்ரிச்சர்ட்பிரான்சன்,ஜெப்போஸ்போன்றார் விண்வெளி பயணம் மேற்கொண்டனர்.

## இங்கிலாந்தில் நோரோ வைரஸ்

- இங்கிலாந்தில் மனித செரிமான மண்டலத்தை தாக்கும் நேரோ வைரஸ் பாதிப்பு 154 பேருக்கு கண்டறியப்பட்டுள்ளது.
- நோரோ வைரஸின் அறிகுறிகள்: வாந்தி, பேதி, வயிற்று வலி, குடல் பகுதியில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

## ஹெபாடிடிஸ் –C க்கான உலகின் முதல் மருந்து

- மலேசியா ஹெபாடிடிஸ்–C க்கான முதல் மருந்தை பதிவு செய்துள்ளது.
- அறிகுறிகள் இல்லாத ஹெபாடிடிஸ் –C ஆள்கொல்லி நோயாகும்.

## கோவிட் பல்நோக்கு கருவி

- ECIL மற்றும் ESIC நிறுவனங்கள் இணைந்து கோவிட்–19 நோயாளிகளின் உடல்வெப்பநிலை மற்றும் ஆக்ஸிஜன் அளவீடுகளை குறித்த தகவல்களை சரியாக அளிக்கும் கோவிட் பீப் கருவியை வடிவமைத்துள்ளது. இதை பிரதமர் அலுவலக இணையமைச்சர் ஜிதேந்திர சிங் அறிவித்துள்ளார்.

## வியாழ கிரகத்தின் நிலவில் நீர்

- அமெரிக்காவின் நாசாவிற்கு சொந்தமான ஹப்புள் தொலைநோக்கி வியாழன் கிரகத்தின் நிலவான கானிமெட்–ல் நீர் மூலக் கூறுகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதை கண்டறிந்துள்ளது.
- UV கதிர்களின் அடிப்படையில் 1998ல் முதல் கானிமெட் புகைபடத்தை ஹப்புள் எடுத்திருந்தது. தற்போது O2 மூலக்கூறுகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை உறுதி செய்துள்ளது.

## கோவிட் RNA பரிசோதனைக் கருவி

- வீடுகளிலேயே கொரோனா பரிசோதனையை விரைவாக செய்யக்கூடிய கோவிட் RNA பரிசோதனைக் கருவியான COVI HOME–ஐ ஹைதராபாத் IIT நிறுவனம் வடிவமைத்துள்ளது.
- 30 நிமிடத்தில் இந்த கருவியால் முடிவுகளை அறிய இயலும்.
- RT–PCR பரிசோதனைகள் நிபுணர்கள் உதவியில்லாமலே அறிய இயலும்.

# 5.2 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

## ஆத்மநிர்பார் கிருஷி செயலி

- வேளாண்மை தகவல்கள் மற்றும் வெப்பநிலை தகவல்களை அளிக்க ஆத்மநிர்பார் கிருஷி செயலியை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

## 'போஷன் ட்ராக்கர்"

- அங்கன் வாடி பணியாளர்கள் குழந்தைகள் மற்றம் கர்ப்பிணி பெண்களின் ஊட்டச்சத்து நிலையை அறிய போஷான் ட்ராக்கர் என்ற செயலியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

## பெகாசஸ் உளவு வைரஸ்

- இணையதள தரவு உளவு அமைப்பான பெகாசஸ்க்கான புதிய தளம் உருவாக்கப்பட்டுள்ளது. மனித உரிமைப் போராளிகளுக்கு எதிராக இந்த அமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளதாக தடவியல் கட்டமைப்பு நிறுவனமான அம்னெஸ்டி இண்டர்நேஷனல் தெரிவித்துள்ளது.

## மத்ஸ்ய சேது மொபைல் செயலி

- மத்திய மீன்வளம் மற்றும் பால் கால்நடை அமைச்சர் கிரிராஜ் சிங் மீன்வளர்ப்பு தொழில் செய்பவர்களின் நலனுக்காக மத்ஸ்ய சேது என்ற மொபைல் செயலியை வெளியிட்டார்.
- இந்த செயலி ICAR–Central Institute of Freshwater Aquaculture என்ற புவனேஷ்வரை தலைமையிடமாக கொண்ட நிறுவனத்தால் தேசிய மீன்வள மேம்பாட்டு நிறுவனத்தின் (ஹைதராபாத்) நிதியுதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

## புதிய தகவல் தொழில்நுட்ப சட்டம் பயனாளர்களைப் பாதுகாக்கும்

- மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய தகவல் தொழில்நுட்ப சட்டம் சமூக ஊடக பயனாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதோடு, அவர்களுக்கு அதிகாரமளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது என்று மத்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல்தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.
- புதிய தகவல் தொழில்நுட்ப சட்டத்தை மத்திய அரசு அண்மையில் கொண்டு வந்தது. இந்த சட்டம் கடந்த மே 25–ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. ஃபேஸ்புக் உள்ளிட்ட சில சமூக ஊடக நிறுவனங்கள் இந்த புதிய சட்டத்துக்கு உள்பட்டு நடவடிக்கை எடுத்தன. எதிர்நிலைப்பாட்டுடன் இருந்து வந்த ட்விட்டர் நிறுவனம் இறுதியாக குறைதீர் அதிகாரியை நியமித்ததுடன், புதிய சட்டத்தின் கீழ் எடுத்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கையையும் மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.

## BHIM UPI –ஐ பயன்படுத்த துவங்கியுள்ள பூடான்

- இந்தியாவின் BHIM UPI–ஐ பூடான் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் சிங்கப்பூருக்கு அடுத்து இதை பயன்படுத்த துவங்கியுள்ள இரண்டாவது நாடாகவும் இந்தியாவின் அருகாமை நாடுகளில் முதல் நாடாகவும் உள்ளது.

## கிஸான் சாரதி

- சரியான நேரத்தில் சரியான தகவலைத் தெரிந்து கொள்வதற்காக விவசாயிகளுக்கு உதவி புரியும் "கிஸான் சாரதியை" விவசாய மற்றும் விவசாயிகளின் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் துவக்கி வைத்தார்.
- விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை பாதிப்பின்றி விற்பனை செய்ய இந்த தளம் துவங்கப்பட்டுள்ளது.

## சுட்டுரையில் 7 கோடி பின்தொடர்வோர்: பிரதமர் மோடி சாதனை

- சுட்டுரையில் (ட்விட்டர்) 7 கோடி பின்தொடர்வோரைப் பெற்று பிரதமர் நரேந்திர மோடி சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் இப்போது சர்வதேச அளவில் தீவிர அரசியலில் உள்ள தலைவர்களில் அதிக பின் தொடர்வோரைக் கொண்டவர்களில் பிரதமர் மோடி முதலிடத்தில் உள்ளார்.
- அமெரிக்க அதிபர் ஜோ பைடனை 3 கோடியே 9 லட்சம் பேர் சுட்டுரையில் பின் தொடர்கின்றனர். சர்வதேச அளவில் அதிக பின் தொடர்வோரைக் கொண்டவராக அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா உள்ளார். அவரை 12.98 கோடி பேர் பின் தொடர்கின்றனர். சர்வதேச அளவில் அதிகம் பின்தொடர்வோரைக் கொண்டவர்களின் பட்டியலில் பிரதமர் மோடி 11–ஆவது இடத்தில் உள்ளார்.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## தேசிய மருத்துவர்கள் தினம்: மருத்துவர்களிடையே பிரதமர் உரை

- தேசிய மருத்துவர்கள் தினம் (ஜூலை 1) கொண்டாடப்படுவதை யொட்டி மருத்துவர் களிடையே பிரதமர் நரேந்திர மோடி உரையாற்ற இருக்கிறார்.
- இது தொடர்பாக சுட்டுரையில் பிரதமர் விடுத்துள்ள செய்தியில், "கரோனா தொற்றுக்கு எதிராக போராட்டத்தில் அனைத்து மருத்துவர்கள் மேற்கொண்ட முயற்சியில் இந்தியா பெருமிதம் அடைகிறது.

## இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் ஜி20 நாடுகளின் ஒப்பந்தம்

- ஜி20 நாடுகள் மேற்கொண்டுள்ள ஒப்பந்தம், விவசாயிகள் நலனில் இந்தியா கொண்டிருக்கும் கவலைகளை பிரதிபலிக்கும் வகையில் இருப்பதாக வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கூறினார்.
- இத்தாலியில் உள்ள மடேரா நகரில் ஜி20 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டுக் கூட்டம் நடைபெற்றது. அதில், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது, வறுமை ஒழிப்பு, சமுதாய வளர்ச்சி, சமூக–பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி, நிலையான வளர்ச்சி ஆகியவற்றை அடைவதற்கு முடிவு செய்யப்பட்டது.

## நாடு முழுவதும் 16 மாநிலங்களில் உள்ள 3.6 லட்சம் கிராமங்களுக்கு பிராட்பேண்ட் வசதி

- இந்தியாவில் 16 மாநிலங்களில் உள்ள 3.6 லட்சம் கிராமங்களுக்கு பிராட்பேண்ட் இணைப்பு வசதி அளிக்கும் பாரத்நெட் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அரசு மற்றும் தனியார் பங்கேற்போடு (பிபிபி) இத்திட்டம் நிறைவேற்றப்படும்.
- நாட்டில் 1,000 நாட்களில் அனைத்து கிராமங் களுக்கும் பிராட்பேண்ட் வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்று கடந்த ஆண்டு ஆகஸ்ட் 15–ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். அதன்படி தற்போது இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- பிராட்பேண்ட் சேவையில் தனியாரும் சிறப்பான சேவை அளிக்க வசதியாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்ட செயலாக்கத்துக்கு தேவைப்படும் நிதி அளவான ரூ.19,041 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பிராட் பேண்ட் சேவையில் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள கிராமங்கள் இணைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.6 லட்சம் கோடி கரோனா நிவாரண திட்டங்கள் மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீட்க மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்த ரூ.6.29 லட்சம் கோடி நிவாரண தொகுப்புக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீட்க உதவும் வகையில் சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ.1.5 லட்சம் கோடி கூடுதல் கடனுதவி, சுகாதாரத் துறைக்கு கூடுதல் நிதி, சுற்றுலா நிறுவனங்கள், வழிகாட்டிகளுக்கு கடனுதவி, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விசா கட்டண தள்ளுபடி, ஏழைகளுக்கு நவம்பர் வரை இலவச உணவு தானியங்கள் வழங்கும் திட்டத்துக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த ரூ.93,869 கோடி, மேலும் கிராம பஞ்சாயத்து, விவசாயம் உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சிக்கு என மொத்தம் ரூ.6.29 லட்சம் கோடி திட்டங்களை மத்திய நிதி அமைச்சர் அறிவித்திருந்தார்.

- நிதி அமைச்சரின் அறிவிப்புப்படி, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் ஆகியோர் இதைத் தெரிவித்தனர்.

## ITU–உலக சைபர் பாதுகாப்பு குறியீடு 2020

- சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (International Telecommunication Union) வெளியிட்டுள்ள உலக சைபர் பாதுகாப்பு குறியீடு 2020ல் இந்தியா 10வது இடம் பெற்றுள்ளது.
- அமெரிக்கா முதலிடத்திலும், இங்கிலாந்து சவுதி அதேபிய இரண்டும் இரண்டாமிடத்திலும் எஸ்டோனியா 8ம் இடம் பெற்றுள்ளது.

ITU

- துவக்கம் – 17 மே 1865
- தலைமையிடம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- பொதுச்செயலாளர் – ஹௌலின் சாஹோ

## உலக ஸ்டார்ட் அப் சூழல் குறியீடு 2021

- உலக ஸ்டார்ட் அப் சூழல் குறியீடு 2021ல் 100 நாடுகளில் இந்தியா 20வது இடம் பெற்றுள்ளது.
- இந்தியாவில் ஸ்டார்ட் அப்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இணையதள வேகம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 1000 நகரங்களில் பெங்களூரு 10வது இடத்தையம் புதுதில்லி (14) மும்பை (16) என மொத்தமாக 43 நகரங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல், கனடா, ஜெர்மனி முதல் 5 நாடுகள்.

## NATRAX

- ஆசியாவின் மிக நீளமான ஆட்டோமொபைல் வாகனங்களுக்கான பாதை இந்தூரில் துவங்கப்பட்டு உள்ளது.
- 1000 ஏக்கர் நிலப்பரப்பில் 11.3 கி.மீ.தூரத்திற்கு இந்த சாலை அமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் பழமையான செய்தித்தாள் மும்பை சமாச்சார்

- மும்பை சமாச்சார் பத்திரிக்கை 200 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.
- பார்சி தலைவர் பர்தூண்ஜி முராஸ்பான் 1822ல் உருவாக்கினார்.

## இந்திய ரயில்வேயின் முதல் நகரும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு கால்வாய்

- பெங்களூரில் இந்திய ரயில்வே மேம்பாட்டு அமைப்பு HNi நீர்வாழ் உயிரின அமைப்புடன் இணைந்து முதல் நகரும் நீர்வாழ் உயிரின கால்வாயை திறந்துள்ளது.

## உத்தரகாண்ட் புதிய முதல்வர் புஷ்கர் சிங் தாமி

- உத்தரகாண்ட் மாநிலத்தின் புதிய முதல்வராக மாநில சட்டப் பேரவை உறுப்பினர் புஷ்கர் சிங் தாமி பதவியேற்க உள்ளார்.

## உலகின் 3–வது மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம்

- ராஜஸ்தானின் ஜெய்பூரில் உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் அரங்கம் கட்டப்பட்டு வருகிறது.
- 75,000 பேர் அமரக்கூடிய வகையில் 100 ஏக்கரில் 3 ஆண்டுகளில் 650 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகிறது.
- முதல் பெரிய அரங்கம் நரேந்திர மோடி அரங்கம் அகமதாபாத்.
- இரண்டாவது பெரிய அரங்கம் – ஆஸ்திரேலியா மெல்போர்ன் அரங்கம்.

## பிரிட்டன், இத்தாலிக்கு ராணுவ தலைமைத் தளபதி 4 நாள் பயணம்

- ராணுவ தலைமைத் தளபதி எம்.எம்.நரவணே, பிரிட்டன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கு 4 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக இவர் தில்லியில் இருந்து புறப்பட்டார்.
- இந்தப் பயணத்தில், பிரிட்டன், இத்தாலி நாடுகளின் ராணுவ தலைமைத் தளபதிகள் மற்றும் மூத்த ராணுவ அதிகாரிகளை எம்.எம். நரவணே சந்தித்து இரு நாடுகள் இடையேயான ராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து பேச்சு வார்த்தை நடத்துகிறார்.

## அமெரிக்க சுதந்திர தினம்: பிரதமர் வாழ்த்து

- அமெரிக்க சுதந்திர தினத்தையொட்டி (ஜூலை 4) அந்நாட்டு அதிபர் ஜோ பைடனுக்கும், மக்களுக்கும் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- இது தொடர்பாக மோடி சுட்டுரையில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:
- அமெரிக்காவின் 245–ஆவது சுதந்திர தினத்தையொட்டி அதிபர் ஜோ பைடனுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் வாழ்த்துகள். துடிப்பான ஜனநாயக நாடுகளான இந்தியாவும் அமெரிக்காவும் சுதந்திரத்தின் மாண்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன. நமது ராஜீய கூட்டுறவு, உலக அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்று மோடி தெரிவித்துள்ளார்.

## கோ–வின் சர்வதேச மாநாடு: பிரதமர் உரை

- "கோ–வின்" வலைதள மென்பொருளை இந்தியா மற்ற நாடுகளுக்கு இலவசமாக அளிக்க உள்ள நிலையில், அதுதொடர்பாக நடைபெறும் சர்வதேச மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்று இந்திய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள உள்ளார்.
- இது குறித்து தேசிய சுகாதார ஆணைய (என்ஹெச்ஏ) தலைவர் ஆர்.எஸ்.சர்மா, தனது சுட்டுரை பக்க பதிவில் கூறியிருப்பதாவது:
- அனைவரும் பயன்படுத்தக் கூடிய வகையிலான ஓபன் சோர்ஸ் மென் பொருள் அடிப்படையில் கோ–வின் செயலி பதிப்பை உருவாக்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தியிருந்தார். இந்த பணிகள் நிறைவடைய உள்ள நிலையில், அது தொடர்பான காணொலி வழி சர்வதேச மாநாடு நடைபெற உள்ளது. பல்வேறு நாடுகள் பங்குறே'கும் இந்த மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று, கோ–வின் வலைதளம் தொடர்பான இந்தியாவின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள உள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

## பழங்குடியினருக்கு கூடுதல் அதிகாரம்: மத்திய அரசு முடிவு

- வன வளங்களைப் பாதுகாத்து மேலாண்மை செய்யும் வகையில், பழங்குடியினருக்கு கூடுதல் அதிகாரமளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இதற்காக கூட்டு ஒப்பந்தத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமும், பழங்குடியினர் விவகார அமைச்சகமும் சேர்ந்து (ஜூலை 6) கையெழுத்திடுகின்றன என்று மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வனப்பகுதிகளில் பரம்பரையாக வாழ்ந்து வரும் பழங்குடியினருக்கு வனப் பகுதிகளில் உரிமை அளித்து, அங்கு அவர்கள் பாரம்பரிய தொழில் புரியும் வகையில் சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## இதுவரை 433.24 லட்சம் டன் கோதுமை கொள்முதல்

- இந்திய உணவுக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான ஆதிஷ் சந்திரா கூறுகையில், "நடப்பு 2021–22–ஆம் ஆண்டின் ரபி சந்தைப் பருவத்தில் பஞ்சாப், உத்தர பிரதேசம், ராஜஸ்தான், உத்தரகாண்ட், குஜராத், ஹிமாசல பிரதேசம் மற்றும் ஜம்மு–காஷ்மீரில் முன்னெப்போதையும் விட அதிக அளவில் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 433.24 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதன் மூலம் 49.16 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- 2020–21–ஆம் ஆண்டின் காரீஃப் சந்தைப் பருவத்தில் ஜூலை 4–ஆம் தேதி வரை 862.01 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது 900 லட்சம் டன்னை எட்ட வேண்டும்" என்று தெரிவித்தார்.

## நீக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப சட்டப் பிரிவின் கீழ் தொடர்ந்து வழக்குகள் பதிவு

- ஏற்கெனவே நீக்கப்பட்ட தகவல்தொழில்நுட்ப சட்டப் பிரிவு 66ஏ–இன் கீழ் தொடர்ந்த வழக்குகள் பதிவு செய்யப்படுவது ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளிப்பதாக உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.
- இந்த சட்டப் பிரிவின் கீழ், அவதூறாகவும் அரசுக்கு எதிராகவும் கருத்துகளைப் பதிவிடுபவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அபாரதமும் விதிக்க முடியும்.
- இந்த சட்டப் பிரிவுக்கு எதிராக முதன் முதலில், மகாராஷ்டிர மாநிலம், தாணே மாவட்டம் பல்கர் பகுதியில் கைது செய்யப்பட்ட ஷாஹீன் தாதா, ரிணு ஸ்ரீநிவாசன் என்ற இரண்டு சட்ட மாணவிகள் கடந்த 2012–ஆம் ஆண்டு பொதுநல வழக்கு தொடர்ந்தனர். சிவசேனை தலைவர் பால் தாக்கரே மறைவைத் தொடர்ந்து மும்பையில் முழு அடைப்பு நடத்தப்பட்டதற்கு எதிராக கருத்து

பதிவிட்டதற்காக இவர்கள் இருவர் மீதும் தகவல் தொழில்நுட்ப சட்டப் பிரிவு 66ஏ–இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

- இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், "கருத்து சுதந்திரமும், கருத்துகளை வெளிப்படுத்துவதுமே மேலானது. எந்தவொரு நபருக்கும் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 21 வழங்கும் அடிப்படை உரிமை மறுக்கப்படக கூடாது" என்று கூறி, தகவல்தொழில்நுட்ப சட்டப் பிரிவு 66ஏ நீக்கப்படுவதாக கடந்த 2015–ஆம் ஆண்டு பிப்ரவரி 24–ஆம் தேதி தீர்ப்பளித்தது.

## திறந்தவெளி இணையதள டிஜிட்டல் வணிக தளம் உருவாக்கலுக்கான பரிந்துரை குழு

- தேசிய அளவிலான திறந்தவெளி இணையதள டிஜிட்டல் வணிக தளம் உருவாக்கலுக்காக பரிந்துரைகள் அளிப்பதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழுவில் தேசிய சுகாதார அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி ராம் சேவக் சர்மா மற்றும் இன்போசிஸ் செயல் தலைவர் நந்தன் நீலகேனி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

## 8 மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்கள் கர்நாடக ஆளுநராகிறார் மத்திய அமைச்சர் தாவர்சந்த் கெலாட்

- கர்நாடகம், மத்திய பிரதேசம், மிஸோரம், ஹிமாசல பிரதேசம், கோவா, ஹரியாணா, திரிபுரா, ஜார்க்கண்ட் ஆகிய 8 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நியமித்தார்.
- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சராக இருக்கும் தாவர்சந்த் கெலாட், கர்நாடக மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- குஜராத்தைச் சேர்ந்த, பாஜக மூத்த தலைவர் மங்குபாய் சகன்பாய் படேல், மத்திய பிரதேச ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இந்த மாநில ஆளுநராக, உத்தர பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார்.
- மிஸோரம் ஆளுநராக, ஆந்திர மாநில பாஜக மூத்த தலைவர் ஹரிபாபு கம்பம்பதி நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஹிமாசல பிரதேச ஆளுநராக, ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மிஸோரம் ஆளுநராக இருந்த பி.எஸ்.ஸ்ரீதரன் பிள்ளை, கோவா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஹிமாசல பிரதேச ஆளுநராக இருந்த பண்டாரு தத்தாத்ரேயா, ஹரியாணா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஹரியானா மாநில ஆளுநராக இருந்த சத்யதேவ் நாராயண் ஆர்யா, திரிபுரா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- திரிபுரா ஆளுநராக இருந்த ரமேஷ் பைஸ், ஜார்கண்ட் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனங்கள், அவர்கள் பதவியேற்கும் நாளில் இருந்து அமலுக்கு வருகிறது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய அரசுப் பணிகளுக்கு 2022 முதல் பொதுத் தகுதித் தேர்வு

- மத்திய அரசுப் பணிகளுக்கு ஆள்களைத் தேர்வு செய்வதற்கு 2022–ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து நாடு முழுவதும் பொதுத் தகுதித் தேர்வுகள், ஓய்வூதியத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.
- மத்திய அரசுப் பணிக்கு இளைஞர்களைத் தேர்வு செய்யும் முறையை எளிமைப்படுத்துவதற்கான பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் திருப்புமுனைச் சீர்திருத்தமாக பொதுத் தகுதித் தேர்வு அமைந்துள்ளது. இளைஞர்கள் மீது பிரதமர் நரேந்திர மோடி வைத்திருக்கும் அக்கறையின் அடையாளமாகவும் நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு பிரதிபலிப்பாகவும் இந்த மிகப் பெரிய சீர்திருத்தம் அமைந்துள்ளது.
- பொதுத் தகுதித் தேர்வை நடத்துவதற்காக மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுடன் தேசிய ஆள்சேர்ப்பு முகமை அமைக்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர் தேர்வாணையம், ரயில்வே தேர்வு வாரியம் மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் ஆகியவற்றால் தற்போது அரசுத் துறைகளுக்காக நடத்தப்படும் ஆள்சேர்ப்பு தேர்வுகளுக்கு பதிலாக பொது தகுதி தேர்வை தேசிய ஆள்சேர்ப்பு முகமை நடத்தும்.

## ராஜஸ்தானின் 4வது புலிகள் காப்பகம்

- ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ராம்கர் விஷ்ஹாரி வனவிலங்கு சரணாலயம் அம்மாநிலத்தின் 4வது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2018 புலிகள் கணக்கெடுப்பின்படி அம்மாநிலத்தில் 108 புலிகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பழங்குடியின வருவாயை அதிகரிக்க திட்டம்

- காதி கிராம தொழிற்சாலை ஆணையம் நீர்வளம் குறைந்த வறட்சியான பகுதிகளில் மூங்கில் வளர்ப்பு மூலம் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருவாயை பெருக்க BOLD (Bamboo Oasis on Lands in Draught) என்ற திட்டத்தை துவங்கியுள்ளது.
- ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் மஹ்த்வா பகுதியில் இந்த திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

## 52வது சர்வதேச இந்திய திரைப்பட திருவிழா

- 2021 நவம்பர் 20–28 வரை 52வது சர்வதேச இந்திய திரைப்பட திருவிழா கோவாவில் நடைபெற உள்ளது. இதற்கான தகவலை மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் அறிவித்தார்.
- இந்திய சினிமா இசையின் மேஸ்ட்ரோ–சத்தியஜித் ரேயின் 100வது ஆண்டை முன்னிட்டு அவரது பெயரில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட உள்ளது.

## கூட்டுறவு துறைக்கு புதிய அமைச்சர்

- மத்திய அரசின் அமைச்சரவை கூட்டுறவு மேம்பாட்டிற்காக கூட்டுறவு அமைச்சகம் என்ற புதிய அமைச்சகத்தை உருவாக்கி உள்ளது.
- நாட்டின் கூட்டுறவு மேம்பாட்டில் சட்டம் இயற்றல் ஒழுங்குபடுத்தல் போன்ற பணிகளை இந்த துறை மேற்கொள்ள உள்ளது. இந்த துறையின் அமைச்சராக அமித்ஷா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## கரோனாவை எதிர்கொள்ள ரூ.23,123 கோடி சிறப்புத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- நாட்டில் கரோனா தொற்று பரவலை எதிர்கொள்வதற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.23,123 கோடி மதிப்பிலான சிறப்புத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அமைச்சரவையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. 12 அமைச்சர்கள் ராஜிநாமா செய்தனர். 43 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். முக்கியமாக, சுகாதாரம், கல்வி, தகவல் தொழில்நுட்பம், சட்டம், விளையாட்டு ஆகிய துறைகளுக்குப் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.
- இந்நிலையில், மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காணொலி வாயிலாக நடைபெற்றது. கூட்டத்தின் போது, "இந்தியா கொவைட்–19 அவசர கால நிவாரணம் மற்றும் சுகாதார கட்டமைப்பு தயார்நிலை நிதித் தொகுப்பு–இரண்டாம் கட்டம்" என்ற திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், "புதிய திட்டத்தின் கீழ் சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் ரூ.23,123 கோடி செலவிடப்பட¬–வுள்ளது. அத்தொகையில் ரூ.15,000 கோடியை மத்திய அரசு வழங்கும், மீதமுள்ள தொகையை மாநில அரசுகள் வழங்கும்.
- இ–சஞ்சீவனி திட்டம்: காணொலி வாயிலாக மருத்துவ ஆலோசனைகள் பெறுவதற்கான இ–சஞ்சீவனி திட்டம் விரிவுப்படுத்தப்பட்வுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தினமும் 50,000 பேர் ஆலோசனைகளைப் பெற்று வருகின்றனர். இந்த எண்ணிக்கையை 5 லட்சமாக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- 8,800 ஆம்புலன்ஸ்: மருத்துவ தர ஆகிசிஜனை சேமித்து வைப்பதற்காக 1,050 கிடங்குகள் அமைக்கப்படவுள்ளன.
- மத்திய அரசு சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் கட்டமைப்பு நிதித் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட வேளாண் கட்டமைப்பு நிதித் திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி வரை குறைந்த வட்டியில் கடன் அளிக்கப்பட்டு வருகிறது.
- தேங்காய் வளர்ச்சி வாரியம்: மத்திய செய்தி–ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் கூறுகையில், "தேங்காய் வளர்ச்சி வாரிய சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.
- இதன் மூலமாக, நிர்வாகிகள் அல்லாதோரையும் அந்த வாரியத்தின் தலைவராக நியமிக்க வழிவகை செய்யப்படவுள்ளது. வேளாண் துறையில் அனுபவம் கொண்டவர், தேங்காய் வளர்ச்சி வாரியத்தின் தலைவராக நியமிக்கப்படுவார். இதன் மூலம் தேங்காய் உற்பத்தி அதிகரிக்கும்" என்றார்.
- ஒப்பந்தத்துக்கு ஒப்புதல்: இந்தியத் தொழில்போட்டி ஆணையம்–ஜப்பான் நியாய வர்த்தக ஆணையம் இடையே மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## புதிய கல்விக் கொள்கை பெரும் மாற்றத்தைப் புகுத்தியுள்ளது

- நாட்டின் கல்வி முறையில் புதிய தேசியகல்விக் கொள்கையானது, மிகப் பெரும் மாற்றத்தைப் புகுத்தியுள்ளதாக மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
- இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (ஐஐடி), தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (என்ஐடி), இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (ஐஐஎஸ்சி), இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்கள் (ஐஐஎம்) உள்ளிட்டவற்றின் தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.
- கல்வித் துறை சார்பில் அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கூட்டத்தில் பேசிய அமைச்சர் தர்மேந்திர பிரதான், "புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய கல்விக் கொள்கை காரணமாக, நாட்டின் கல்விமுறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்துக்கு ஏற்ற இந்தியாவை உருவாக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கை அமைந்துள்ளது.

## இந்தியாவின் முதல் கடல்சார் நடுவர் மன்றம்

- இந்தியாவின் முதல் கடல்சார் நடுவர் மன்றம் குஜராத் மாநிலம் காந்தி நகரில் அமைக்க குஜராத் கடல்சார் பல்கலைக்கழகமும் சர்வதேச நிதி சேவைகள் மையமும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- கடல்சார் போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகளை எளிதில் களைய இந்த மையம் அமைக்கப்பட உள்ளது.
- குஜராத்தின் GIFT சிட்டியில் இந்த மையம் ஏற்படுத்தப்பட உள்ளது.

## இந்திய இராணுவ துப்பாக்கி சூடு தளத்திற்கு வித்யா பாலன் பெயர்

- ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் பாராமுல்லா மாவட்டத்தின் குல்மர்க் பகுதியல் உள்ள இராணுவ துப்பாக்கி சூடு தளத்திற்கு சினிமா துறையில் சிறப்பாக பங்களிப்பு செய்த வித்யா பாலன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் UPI அடிப்படையிலான பார்க்கிங் வசதி

- டெல்லி மெட்ரோ ராயில் நிறுவனம் இந்தியாவிலேயே முதல் முறையாக பாஸ்டேக் அல்லது ஒருங்கிணைந்த செலுத்துதல் வசதியுடன் கூடிய பணமுறையற்ற பார்க்கிங் வசதியை துவங்கியுள்ளது.

## நிதியை சீரமைக்க 8 அம்சங்களில் ஆலோசனை கூறுங்கள்

- தமிழ்நாட்டின் கடன் சுமை ரூ.5 லட்சம் கோடிக்கும் அதிகமாக இருப்பதாகவும், நிதி கட்டமைப்பைச் சீரமைக்க எட்டு அம்சங்களில் ஆலோசனை கூற வேண்டுமென நிபுணர் குழுவிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
- முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்கள் எஸ்தர் டஃப்லோ, ரகுராம் ராஜன், அரவிந்த் சுப்பிரமணியன், ஜீன் டிரீஸ், எஸ். நாராயண், அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இமயமலை எருமைகளுக்கு காப்பீடு

- இமயமலையின் உயரமான பகுதிகளில் வாழும் சிறப்பு வகை எருமைகளுக்கு உயர்ந்து வரும் வெப்ப நிலையால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து காக்க காப்பீட்டு திட்டத்தை அருணாச்சல பிரதேசம் திராங்கில் உள்ள தேசிய எருமைகள் ஆராய்ச்சி மையமுக தேசிய இன்சூரன்ஸ் நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ளது.
- 2012–2019 வரையிலான காலகட்டத்தில் 25% எண்ணிக்கை குறைந்துள்ளது. இந்தியாவில் ஜம்மு–காஷ்மீர், லடாக் பகுதியில் 26000 அருணாச்சல பிரதேசத்தில் 24000 மற்றும் சிக்கிம் 5000, ஹிமாச்சல பிரதேசத்தில் 2000 மேற்கு வங்கத்தில் 1000 என 58000 எருமைகள் உள்ளது.

## மணிப்பூரில் இரயில்வே பாதை

- அஸ்ஸாமின் சில்கார் இரயில் நிலையத்திலிருந்து மணிப்பூரின் வைங்கைசன்பாவோ இரயில் நிலையத்திற்கு முதல் பயணிகள் இரயில் இயக்கப்பட்டுள்ளது. இது அகல இருப்பாதை வகையானது.

- சிவாங்கைசன்பாவோ மற்றும் இம்பால் இடையிலான இரயில் அகலப்பாதை பயனிகள் கட்டுமானத்தில் உள்ளது.

## அணுசக்தி , விண்வெளி, பாதுகாப்பு ஒத்துழைப்பு

- அணுசக்தி, விண்வெளி, பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவை குறித்து ரஷிய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கேய் லாவ்ரோவுடன் மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் முக்கிய ஆலோசனை நடத்தினார்.
- மூன்று நாள் பயணமாக ரஷியா சென்றுள்ள அமைச்சர் ஜெய்சங்கர் அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவை சந்தித்து ஆப்கன், ஈரான், சிரியா நாடுகளின் சர்வதேச விவகாரங்கள் குறித்தும், உள்நாட்டு விவகாரங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தினார். பின்னர், இருவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

## நிஷ்தா திட்டத்தில் பயிற்சி பெற்றவர்களுள் ஜம்மு–காஷ்மீர் முதலிடம்

- பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் முக்கிய திட்டமான நிஷ்தா திட்டத்தின் கீழ் 80600 ஆரம்ப பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து ஜம்மு–காஷ்மீர் முதலிடத்தில் உள்ளது.
- NISHTHA (National Initiative for School Heads' and Teachers' Holistic Advancement).

## புவிசார் குறியீடு சான்று பெற்ற ஃபாசில் மாம்பழங்கள்: மேற்கு வங்கத்திலிருந்து பஹ்ரைனுக்கு ஏற்றுமதி

- புவிசார் குறியீடு பெற்ற ஃபாசில் மாம்பழ வகைகள் மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டத்திலிருந்து பஹ்ரைன் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.
- குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே விளையக் கூடிய தனித்துவமான விளைபொருள் அல்லது உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு புவிசார் குறியீடு சான்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த சான்றின் மூலம், அந்த பொருளின் தரமும் தனித்துவமும் உறுதி செய்யப்படும்.
- இந்த சான்றின் மூலம் அதனை உற்பத்தி செய்பவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதோடு, வேறு யாரும் அந்தப் பெயரை பயன்படுத்த முடியாது.
- டார்ஜீலிங் தேயிலை, திருப்பதி லட்டு, நாகபுரி ஆரஞ்சு பழம், காஷ்மீரின் பாஷ்மினா கம்பளி ஆடை உள்ளிட்ட இந்திய பொருள்களுக்கு புவிசார் குறியீடு சான்று வழங்கப்பட்டுள்ளது. அந்த வரிசையில் மேற்கு வங்க மால்டா மாவட்ட ஃபாசில் வகை மாம்பழங்களுக்கும் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இந்த மாம்பழ வகைக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

## சிக்கிம் 27% மலர் வகைகள்

- இந்திய தாவரவியல் கணக்கீட்டின் படி (BSI) இந்தியாவின் நிலப்பரப்பில் ஒரு சதவீத அளவை மட்டும் கொண்டிருக்கும் சிக்கிமில் நாட்டில் காணப்படும் மொத்த மலர் வகைகளில் 27% காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கஞ்சன் சங்கா உயிர்கோள காப்பக பகுதியில் இவைகள் அதிகம் காணப்படுகின்றன.

## 2 குழந்தைகளுக்கு அதிகமாகப் பெற்றோர் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடத் தடை

- "உத்தரபிரதேசத்தில் 2 குழந்தைகளுக்கு அதிகமாகப் பெற்ற நபர்கள் அரசு வேலைக்கு விண்ணப்பிக்க முடியாது, உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட முடியாது" என்று மாநில அரசு வெளியிட்டுள்ள மக்கள் தொகைக் கட்டுப்பாடு வரைவு மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாட்டில் மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதே வளர்ச்சி விகிதம் நீடித்தால் வரும் 2025–ஆம் ஆண்டுக்குள் சீனாவை விஞ்சி மக்கள்தொகை எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தைப் பிடிக்கும் என்று கணிக்கப்படுகிறது. மக்கள்தொகையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று சில மாநில அரசுகள் கருத்து தெரிவித்து வருகின்றன.
- இந்நிலையில், நாட்டிலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாநிலமான உத்தர பிரதேசத்தில் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான வழிமுறைகள் அடங்கிய வரைவு மசோதா வெளியிடப்பட்டுள்ளது. "உத்தர பிரதேசம் மக்கள் தொகை (கட்டுப்படுத்துதல், நிலைப்படுத்துதல், நலவாழ்வு) மசோதா, 2021" என்று பெயரிடப்பட்டுள்ள வரைவு மசோதா மீது

மக்கள் ஜூலை 19–ஆம் தேதி வரை கருத்து தெரிவிக்கலாம் என்று மாநில சட்ட ஆணையம் தெரிவித்துள்ளது.

## பயணத்தில் இயற்கையை ரசிக்க உதவும் "விஸ்டாடோம்" ரயில் பெட்டிகள்

- ரயில் பயணத்தின் போது இயற்கையை ரசிப்பதற்கு வழிவகுக்கும் நோக்கில் "விஸ்டாடோம்" பெட்டிகள் வடிவமைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளன.
- சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக இந்திய ரயில்வே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிறப்பு மலை ரயில்களை இயக்கி வருவதோடு மட்டுமல்லாமல், மலைப் பிரதேசங்களில் ரயில் பயணிக்கும்போது பயணிகள் இயற்கையை ரசிக்கும் நோக்கில் ரயிலை மெதுவாக இயக்குவது உள்ளிட்டவற்றை ரயில்வே மேற்கொண்டு வருகிறது.

## இந்தியாவின் முதல் விதைகள் இல்லாமல் உருவாக்கப்படும் தோட்டம்

- இந்தியாவின் முதல் விதைகள் விதைக்கப்படாமலேயே 50க்கும் மேற்பட்ட உயிரினங்களை உருவாக்கும் தோட்டம் உத்திரகாண்ட் மாநிலம் டேராடூனில் உருவாக்கப்பட்டு துவங்கப்பட்டுள்ளது.

## நாட்டின் தனியார் LNG நிலையம் : நாக்பூர்

- நீர்ம இயற்கை எரிவாயு (LNG) பெற்றுக் கொள்ளும் நாட்டின் முதல் தனியார் நிலையம் மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி–யினால் நாக்பூரில் துவங்கி வைக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் முதல் LNG நிலையம் நாக்பூரின் ஜபல்பூர் தேசிய நெடுஞ்சாலையில் துவங்கி வைக்கப்பட்டுள்ளது.

## உலகின் முதல் இணைந்த தடுப்பூசி

- கியூபா நாட்டின் பையோ பார்மா நிறுவனம் கோபரின்னா–2 என்ற 92% பயனளிக்க கூடிய வகையிலான தடுப்பு மருந்தை தயாரித்துள்ளது. 3ம் நிலை பரிசோதனையில் உள்ளது.

## அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் புரட்சி தேவை

- வேளாண் துறையில் அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் புரட்சியை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு) நிறுவன தினம் கொண்டாடப்பட்டது. அதையொட்டி, நபார்டு வங்கி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்ச்சிக்காக பிரதமர் மோடி அனுப்பிய செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:
- நாட்டில் கரோனா தொற்றுப் பரவல் காணப்பட்ட சூழலிலும் விவசாயிகள் கடினமாக உழைத்ததால், வேளாண் பொருள்கள் உற்பத்தி வரலாற்று உச்சத்தை எட்டியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே நாட்டில் வேளாண் பொருள்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது. எனவே, தற்போது அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் புரட்சியை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.
- அதே போல் வேளாண் உற்பத்திப் பொருள்களின் மதிப்பைக் கூட்டுவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. நிலத்தை உழுதல், விதையிடல், நீர்ப்பாசனம், அறுவடை உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைளிலும் தொழில்நுட்ப வசதிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது.
- தற்சார்பு பொருளாதாரம்: கிராமப்புறங்களின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. அங்கு வளர்ச்சித் திட்டங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலமாக வேளாண் துறையும் மேம்பாடு அடையும். நாட்டைத் தற்சார்பு அடையச் செய்யவேண்டுமெனில், கிராமப்புறப் பொருளாதாரம் தற்சார்பு அடைய வேண்டியது முக்கியமாகும்.
- அமைச்சர் நரேந்திர சிங் தோமர்: நபார்டு 40–ஆவது நிறுவன தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பேசியதாவது:
- கடந்த சில அண்டுகளாக நமது வேளாண் துறையும், கிராமப்புறம் சார்ந்த துறைகளும் வலுவாக உள்ளன. அதுவும் கரோனா பரவல் காலகட்டத்தில் வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டின.

## உள்நாட்டு நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்திற்கான தனி துறை

- அசாம் அரசு மாநிலத்தில் உள்ள உள்நாட்டு மக்களின் நம்பிக்கைகள் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்கும் வகையில் செயலாற்ற ஒரு தனிதுறையை புதியதாக உருவாக்கியுள்ளது.

- மாநிலத்தின் பூர்வீக பழங்குடிகளான போடோஸ், மோனஸ், ராப்ஸ் மற்றும் மிஷிங்ஸின் மேம்பாட்டிற்காக இந்த துறை பல சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தும்.
- மாநில மக்களின் பிரத்யேக நம்பிக்கை மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கான 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டம்: 15.30 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் விநியோகம்

- பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்ட 4–ஆம் கட்டத்தின் கீழ் இதுவரை தமிழகம் உள்பட 31 மாநிலங்களுக்கு 15.30 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக மத்திய உணவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "கரோனா தொற்று காலத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், இலவசமாக உணவு தானியங்கள் வழங்குவதற்கு பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தை கடந்த ஆண்டு மத்திய அரசு தொடங்கியது.
- இந்தத் திட்டத்தின் 4–ஆம் கட்டம் இவ்வாண்டு நவம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தின் கீழ் விநியோகிக்க 198.79 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## இந்தியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி நிலையம் பாட்னா

- ஆசியாவின் முதல் தேசிய டால்பின் ஆராய்ச்சி நிலையம் கங்கைக் கரையில் பாட்னாவில் அமைக்கப்பட்டுள்ளது.
- நன்னீரில் வாழும் கங்கை டால்பின்கள் மிகவும் அழிவிற்குள்ளான நிலையில் உள்ளது. 2018–2019ஐ கணக்கெடுப்பில் 1455 மட்டுமே காணப்பட்டது. யாங்சி, சிந்து, அமெசான் நதிகளிலும் இந்த நன்னீர் டால்பின் வாழ்கிறது.

## வாரணசியில் சர்வதேச மாநாட்டு மையம்: பிரதமர் திறந்து வைக்கிறார்

- உத்தர பிரதேச மாநிலம், வாராணசியில் கட்டப்பட்டுள்ள "ருத்ராக்ஷா" எனப் பெயர் சூட்டப்பட்ட சர்வதேச மாநாட்டு மையத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்.
- இது தொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: போஸ் சிகரா பகுதியில் 2.87 ஹெக்டேர் நிலத்தில் இரண்டு தளங்கள் கொண்ட மாநாட்டு மையம் கட்டப்பட்டுள்ளது. இந்த மையத்தில் 108–க்கும் மேல் ருத்ராக்ஷங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன் கூரை சிவலிங்க வடிவில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் அனைத்து இடங்களும் இரவில் ஒளிரும் வகையில் எல்இடி பல்புகள் பொருத்தப்பட்டுள்ளன. அரங்கில் 1,200 பேர் அமர்ந்து நிகழ்ச்சியைக் காணும் வசதியுடன் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

## 100% கொரோனா தடுப்பூசி பெற்ற மாநிலம்

- இந்தியாவின் முதல் 100 சதவீத தடுப்பூசி பெற்றுக்கொண்ட மாநிலமாக யூனியன் பிரதேச மாநிலம் லடாக் உருவாக்கி உள்ளது. மாநிலத்தில் உள்ள 89,404, மக்களில் 60936 மக்களுக்கு இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டது.

## மாலத்தீவு அதிபருடன் இந்திய பிரதமர் பேச்சு

- மாலத்தீவு அதிபர் இப்ராஹிம் முகம்மது கோலி இந்திய பிரதமருடன் தொலைபேசி வாயிலாக இருதரப்பு உறவு குறித்து உரையாடினார்.

## ஆந்திரம் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு

- ஆந்திர மாநிலத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு வேலைவாய்ப்பிலும் 10 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான புதிய உத்தரவை அந்த மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- அந்த வகையில் இடபிள்யூஎஸ் பிரிவில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 10 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் சாசன சட்டத் திருத்தம் 103–இன்படி இந்த இடஒதுக்கீடு வழங்கப்படுவதாக அந்த மாநில அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- முன்னதாக, உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஆந்திரத்தில் ஏற்கெனவே கடந்த இரண்டு ஆண்டுகளாக பொருளாதார ரீதியில் பின்தங்கியோருக்கு கல்வியில் மட்டும் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது அரசு உத்தரவுப்படி வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு வழங்குவது நீட்டிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் தானிய ATM

- ஹரியானா மாநிலம் குருகிராமின் உலக உணவு திட்டத்தின் (WFP) மூலம் தானியங்கி தானியம் வழங்கும் கருவி ஆதார் அல்லது ரேஷன் அட்டையை உட்செலுத்தி நாம் நமக்கான தானியத்தை பெற இயலும்.

## இந்தியாவின் மிகப்பெரிய சூரிய மின்னுற்பத்தி நிலையம்

- குஜராத் மாநிலம் கட்ச் பகுதியில் கவாடாவில் 47500 மெகாவாட் திறனுள்ள மிகப்பெரிய சூரிய மின்னுற்பத்தி நிலையம் தேசிய அனல் மின் கழகத்தால் (NTPL) அமைக்கப்பட உள்ளது.

## ஐந்து நட்சத்திர ஹோட்டலுடனான காந்தி நகர் ரயில் நிலையம்

- குஜராத் மாநிலத்தில், ஐந்து நட்சத்திர ஹோட்டலுடன் கட்டப்பட்டுள்ள மறுசீரமைக்கப்பட்ட காந்திநகர் ரயில் நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
- நாட்டிலேயே ஐந்து நட்சத்திர ஹோட்டல் மற்றும் அதிநவீன வசதிகள் கொண்ட முதல் ரயில் நிலையம் இதுவாகும். இணையவழி மூலம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மறுசீரமைக்கப்பட்ட வாட்நகர் ரயில் நிலையத்தையும், ஆமதாபாத் அறிவியல் நகரத்தில் புதிய கட்டடங்களையும், காந்திநகர்–வாராணசி, காந்திநகர்–வரீதா விரைவு ரயில்களையும் பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.
- பிரதமர் மோடி தனது சிறு வயதில் வாட்நகர் ரயில் நிலையத்தில் தனது தந்தை தாமோதர் தாஸின் தேநீர் கடையில் உதவியாளராகப் பணியாற்றி வந்தார்.
- இதை தனது உரையில் குறிப்பிட்டுப் பேசிய பிரதமர் மோடி, "வாட்நகர் நகர் ரயில் நிலையத்துடன் எனது நினைவுகள் ஏராளம் உள்ளன. புதிய ரயில் நிலையம் கவரும் வகையில் உள்ளது. வாட்நகர் – மொடேரா–படான் வழித்தடமும் அகல ரயில்பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

## 100% எத்தனால் பயன்பாடு இந்தியாவின் உச்சபட்ச இலக்கு: பியூஷ் கோயல்

- வாகனங்களை 100 சதவீத எத்தனால் பயன்பாட்டில் இயக்குவது தான் இந்தியாவின் உச்சபட்ச இலக்கு. அந்த வகையில், வரும் 2023–24ஆம் ஆண்டில் பெட்ரோலில் 20 சதவீத எத்தனாலை கலப்பதற்கான இலக்கு எட்டப்படும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் கூறினார்.
- காற்று மாசுபாட்டை குறைக்கவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு மற்றும் பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தி வருகிறது. அதுபோல, பெட்ரோலியம் பொருள்களில் எத்தனாலை கலப்பதற்கான நடவடிக்கையையும் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.
- வாகனங்களை 100 சதவீத எத்தனால் பயன்பாட்டில் இயக்குவதுதான் இந்தியாவின் உச்சபட்ச இலக்கு. அந்த வகையில், வரும் 2023–24–ம் ஆண்டில் பெட்ரோலில் 20 சதவீத எத்தனாலை கலப்பதற்கான இலக்கு எட்டப்படும்.
- மின்சார கார்களை பயன்படுத்துபர்வகள், அந்தக் கார்களின் பேட்டரிகளை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, அல்லது சூரியசக்தி மூலம் சார்ஜ் செய்வதற்கு ஊக்குவிக்கப்படுவர். அதற்காக, நாடு முழுவதும் வாகனங்களுக்கான எரிவாயு நிரப்பும் நிலையங்களில், கார் பேட்டரிகளை சார்ஜ் செய்வதற்கான நிலையங்களை அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

## முதன் முதலாக செயற்கைக்கோளை உருவாக்கியுள்ள கர்நாடக பள்ளி

- கர்நாடக மாநிலத்தில் மாலேங்ஹாம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் இணைந்து செயற்கைக்கோளை உருவாக்கியுள்ளனர்.
- 75–வது சுதந்திர தினத்தில் 75 செயற்கைக் கோளை உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இவை உருவாக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் ஓட்டுநர் இல்லாத டாக்ஸிகள்

- டெல்லி நொய்டா சர்வதேச விமான நிலையத்தையும் நொய்டா பிளம் சிட்டியையும் இணைக்கும் வழிதடத்தில் ஓட்டுநர் இல்லாத டாக்ஸி வசதி துவங்கப்பட்டுள்ளது.
- இந்த பட் வகை டாக்ஸி வசதி டெல்லி மெட்ரோ ரயில் அமைப்பால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 2030க்குள் கார்பன் உமிழ்வு குறைக்க இலக்கு

- இந்திய மின்சார அமைச்சர் R.K.சிங் 2030க்குள் 33 சதவீத அளவிற்கு கார்பன் உமிழ்வைக்

குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## பிரத்யேக பாதுகாப்புச் கொள்கை வடிவமைப்பு

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் முதல் முறையாக நாட்டின் பாதுகாப்புக்கென பிரத்யேக கொள்கை வகுக்கப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- எல்லை பாதுகாப்புப் படையில் (பிஎஸ்எப்) சிறப்பாகச் செயலாற்றிய அதிகாரிகளுக்கு பதக்கம் அளித்து கௌரவிக்கும் விழா புதுதில்லியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பின்எஸ்எப் படையின் முதல் தலைவரான கே.எப்.ருஸ்தம்ஜி நினைவு சொற்பொழிவாற்றினார். அதில் அமித்ஷா பேசியதாவது:
- நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தனிக் கொள்கை உள்ளதா என்ற கேள்வி அடிக்கடி எழுவதுண்டு. பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சி அமைவதற்கு முன்பாக நாட்டுக்கென பிரத்யேக, சுதந்திரமான பாதுகாப்புக் கொள்கை காணப்படவில்லை.
- முந்தைய ஆட்சிக் காலங்களில் இயற்றப்பட்ட பாதுகாப்புக் கொள்கைகள் அனைத்தும் வெளியுறவுக் கொள்கையால் வழி நடத்தப்படுவதாகவே இருந்தன. முன்பு வெளியுறவுக் கொள்கையும் பாதுகாப்புக் கொள்கையும் இணைந்தே வகுக்கப்பட்டன. தனியாக பாதுகாப்புக் கொள்கை வடிவமைக்கப்படவில்லை.

## "இந்திய நாட்டியம் 75" ஜுலை 22–இல் தொடக்கம்:

- இந்திய நாட்டிய கலாசார மையத்தின் சார்பில் ஜுலை 22–ஆம் தேதி முதல் மெய்நிகர் முறையில் நடைபெறவுள்ள நாட்டிய போட்டிகளில் பல்கலைக்கழகங்கள், கல்லூரி மாணவர்களை பங்கேற்க செய்யுமாறு யுஜிசி அறிவுறுத்தியுள்ளது.
- இந்திய நாட்டிய கலாசார மையம் கடந்த 1977–ஆம் ஆண்டு முதல் கலாசார நாட்டியங்களைப் பயிற்றுவித்தல், பாரம்பரிய இசையைக் கற்பித்தல், யோகா, சம்ஸ்கிருது வகுப்புகளை நடத்துதல் போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. இந்த மையம் சார்பில் "இந்தியா நடனம் 75" என்ற கருப்பொருளில் மிகப் பெரிய அளவில் நாட்டிய போட்டிகள் மெய்நிகர் முறையில் திட்டமிடப்பட்டுள்ளது.
- பாரம்பரிய நாட்டியக் கலைகளான ஒடிஸி, பரதம், கதக், குச்சுப்புடி, மோகினியாட்டம் போன்றவை வரும் ஜுலை 22 முதல் தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறவுள்ளன. அவற்றில் சிறப்பு நாட்டிய நிகழ்வுகள் குரு புத்த பூர்ணிமா நாளான ஜுலை 24–இல் நடைபெறும். ஒவ்வொரு பிரிவுகளிலும் பல்வேறு கருப்பொருள்களில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

## இந்தியாவில் பயங்கரவாதத்துக்கான நிதி தடுப்பு சூழல்: எஃஏடிஎஃப் ஆய்வு ஒத்திவைப்பு

- நிதி மோசடி, பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி கிடைப்பது உள்ளிட்டவற்றைத் தடுப்பதற்காக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பயங்கரவாதத்துக்கான நிதி தடுப்பு அமைப்பு (எஃப்ஏடிஎஃப்) நடத்தவிருந்த ஆய்வு அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
- பயங்கரவாத அமைப்புகள், பயங்கரவாதிகள் ஆகியோருக்கு நிதி கிடைப்பதைத் தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை பாரீஸை சேர்ந்த எஃப்ஏடிஎஃப் அமைப்பு மேற்கொண்டு வருகிறது. பல நாடுகளில் அந்த அமைப்பு ஆய்வுகளை நடத்தி, அதற்கேற்ப நாடுகளை வகைப்படுத்தி வருகிறது.
- தற்போதைய நிலவரப்படி, வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளை எஃப்ஏஃப் அமைப்பு கருப்புப் பட்டியலில் வைத்துள்ளது. பாகிஸ்தான், மியான்மர், உகாண்டா, யேமன், மோரீஷஸ், கம்போடியா உள்ளிட்ட நாடுகள் "கிரே" பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் வைக்கப்படும் நாடுகளால் சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்), உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் இருந்து நிதியுதவியைப் பெற முடியாது.

## மதிய உணவு திட்டம்

- மதிய உணவு திட்டம் இந்திய மாணவர்கள் குறிப்பாக மாணவிகளிடையே நீடித்த கால அளவிலான நன்மைகளை அளிக்கும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2005 முதல் 2016 வரையிலான கால கட்டத்தில் இந்த திட்டத்தின் மாபெறும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹிமாச்சல துறவி பழம்

- ஹிமாச்சல பிரதேசத்தில் முதன்முறையாக துறவி பழம் விளைவிக்கபடுகின்றது.
- நீரிழ்வு நோயாளிகளுக்கு பயன்படக்கூடிய இந்த பழம் முதன்முதலாக விளைவிக்கப்பட உள்ளது.

## பிளாக் செயின் தொழில்நுட்பத்தில் கல்வி சான்றிதழ்கள்

- மகாராஷ்டிரா மாநில அரசு மாநில மாணவர்கள் மற்றும் கல்வித் துறை சார்ந்த பணிகளை பிளாக்செயின் தொழில்நுட்ப அடிப்படையில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து மாணவர்களுக்கும் டிஜிட்டல் வடிவிலான கோப்புகள் வழங்கப்படும்.

## 'கலாச்சார வரலாற்று ஆய்வுக் குழு பன்முகத்தன்மையுடன் மாற்றியமைக்கப்படும்

- நாட்டின் கலாச்சார பண்பாட்டின் தோற்றம், பரிணாமம் குறித்த வரலாற்றை ஆய்வு செய்ய மத்திய அரசால் அமைக்கப்பட்ட 16 பேர் கொண்ட குழு பன்முகத்தன்மையுடன் மாற்றியமைக்கப்படும் என மத்திய கலாசாரத் துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவின் 12,000 ஆண்டு கால பண்பாட்டின் தோற்றம், பரிணாமம் குறித்த வரலாற்றை ஆய்வு செய்ய மத்திய அரசால் 16 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இதில், சில சமூகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளதாக நாடாளுமன்றத்தில் பல முறை புகார்கள் எழுப்பப்பட்டன.இந்தக்குழுவில்தென்னிந்தியர்கள், செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ் ஆய்வாளர்கள் இல்லை என நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

## பசுமை ஹைட்ரஜன் நிலையம்

- இந்திய ஆயில் கார்பரேஷன் (IOC) தனது முதல் பசுமை ஹைட்ரஜன் நிலையத்தை மதுராவில் அமைத்துள்ளது.
- இங்கு 250 மெகாவாட் மின்னுற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

## இந்திய பாரம்பரிய நிறுவனம்

- இந்திய அரசு பாரம்பரிய நிறுவனத்தை நொய்டாவில் அமைச்சர் திட்டமிட்டுள்ளது.
- வரலாறு, கலை, பாதுகாப்பு மற்றும் இசையியல் கட்டிடக்கலையில் முதுகலைப்பட்டம் மற்றும் முனைவர் பட்டங்களை இந்த நிறுவனம் வழங்க உள்ளது.

## இயற்கை வேளாண்மைக்கு 100% நிதியுதவி

- ரசாயன உரங்கள் இல்லாத கழிவுகளை மக்க வைத்து தயாரிக்கப்படும் இயற்கை உரங்களைக் கொண்ட இயற்கைவேளாண்மைக்கு(ஆர்கானிக்) மாநில அரசுகள், அரசு நிறுவனங்களுக்கு 100 சதவீதம் நிதியுதவி அளிக்கப்படும் என மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- மேலும், தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள் மேற்கொள்ளும் இயற்கை வேளாண்மை முதலீட்டில் 33 சதவீதம் உதவியாகவும் அதிகபட்சம் ரூ.63 லட்சம் வரை மூலதன முதலீடும் வழங்கப்படுகிறது.
- மாநில அரசு அல்லது அரசு நிறுவனங்கள் இத்தகைய இயற்கை உரங்களைக் கொண்ட இயற்கை உரங்களைக் கொண்ட இயற்கை வேளாண்மைக்கு முதலீடு செய்யும்போது ஒரு அலகுக்கு அதிகபட்சம் ரூ.19 கோடி வரை உதவி செய்யப்படும்.
- தமிழகத்தில் இத்தகைய 4 நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவற்றுக்கு ரூ.1.48 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
- கிருஷ்ணகிரி காங்கிரஸ் கட்சி உறுப்பினர் செல்லகுமார், நாகை எம்.செல்வராஜ் ஆகியோர் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு நரேந்திர சிங் தோமர் இவ்வாறு பதிலளித்தார்.

## சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் ரூ.2,376 கோடி ஒதுக்கீடு

- தமிழகத்தைச் சேர்ந்த பெரு நிறுவனங்கள் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களுக்காக கடந்த ஆண்டுகளில் (2017–20) ரூ.2,376 கோடியை ஒதுக்கியதாக மத்திய புள்ளியியல், திட்ட செயலாக்கம் மற்றும் பெரு நிறுவன விவகாரத் துறை இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.
- பெரு நிறுவனங்கள் கல்வி வளர்ச்சிக்கு மட்டும் ரூ.930 கோடியை கடந்த 3 ஆண்டுகளில் ஒதுக்கியிருந்ததாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈரான் வெளியுறவு அமைச்சருடன் ஜெய்சங்கர் ஆலோசனை

- ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவேத் ஜாரிஃபுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, இரு தரப்பு விவகாரங்கள் குறித்தும், ஆப்கானிஸ்தானின் நிலவரம் குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

## கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி புதிய உச்சத்தை எட்டும்

- நாட்டின் கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் புதிய உச்ச அளவு வளர்ச்சியை எட்டும் என கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (இபிசிஎச்) தெரிவித்துள்ளது.
- இது குறித்து அந்த கவுன்சிலின் தலைவர் ராஜ் கமார் மல்ஹோத்ரா கூறியுள்ளதாவது:
- இந்திய கைவினைப் பொருள்களுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், அங்கிருந்து கிடைக்கும் ஆர்டர்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளதாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- இதனை கருத்தில் கொள்ளும் போது, தற்போதைய நிலவரப்படி நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் கைவினைப் பொருள்களின் ஏற்றுமதி 10–15 சதவீத வளர்ச்சியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச சவால்களுக்கு தீர்வு காணும் நிபுணர்களாக பல்கலைக்கழகங்கள் செயல்பட வேண்டும்

- பருவநிலை மாற்றம் வறுமை மற்றும் மாசு போன்ற சர்வதேச சவால்களுக்கு தீர்வு காண்பதற்காக பல்கலைக்கழகங்கள் நிபுணர்களாக செயல்பட வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு கேட்டுக்கொண்டுள்ளார்.
- பல்வேறு சமூகப் பொருளாதார விஷயங்கள் மற்றம் அரசியல் சாரந்த விஷயங்கள் குறித்து பல்கலைக்கழகங்கள் விவாதிக்க வேண்டும் என்றும், அரசுகளின் தேவைகள் மற்றும் வசதிக்கேற்ப அமல்படுத்துவதற்கான யோசனைகளையும் முன்வைக்குமாறு அவர் கூறினார்.
- ஹரியானா மாநிலம் சோனிபட்டில் உள்ள ஒ.பி.ஜிண்டால் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலகப் பல்கலைக்கழகங்கள் உச்சி மாநாட்டில் காணொலி வாயிலாக வெங்கையா நாயுடு தொடக்க உரையாற்றினார். அவர் பேசியதாவது:
- சிறந்த பண்புகள், திறன், குணநலன்களுடைய தலை சிறந்த கல்வியாளர்கள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் அரசியல்வாதிகளைப் பல்கலைக்கழகங்கள் தயார்படுத்த வேண்டும்.
- நம்மைச் சுற்றியுள்ள சவால்களை எதிர்கொள்வதற்காக தீர்வுகளை ஒருங்கிணைந்த கல்வியின் வாயிலாக உருவாக்க வேண்டும்.
- நமது மரபுசார்ந்த வகுப்பறை கல்விக்கு நிகராக காணொலி காட்சி அமையாது. எனினும், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு வகுப்பறை மற்றும் இணையதள கல்வியின் தலைசிறந்த அம்சங்கள் கலந்து கற்பிக்கும் மாதிரியை உருவாக்க வேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் மாதிரி, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தி சிறந்த கற்றலை உறுதி செய்யும் வகையில் அமைய வேண்டும்.

## எஃகு உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.6,322 கோடி

- நாட்டில் சிறப்பு எஃகு பொருள்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் அத்துறைக்கு ரூ.6,322 கோடி மதிப்பில் உற்பத்திசார் ஊக்கத்தொகை வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு வாய்ந்த எஃகு பொருள்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு ரூ.6,322 கோடியில் உற்பத்திசார் ஊக்கத்தொகை வழங்குவதற்கு கூட்டத்தின்போது ஒப்புதல் வழங்கப்பட்டது.
- இந்த முடிவு குறித்து மத்திய செய்தி–ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "உற்பத்திசார் ஊக்கத்தொகையானது அடுத்த 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். உள்நாட்டில் எஃகு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இத்தொகை வழங்கப்படவுள்ளது.
- அதிக இறக்குமதி: மதிப்பு கூட்டப்பட்ட எஃகு பொருள்கள் இந்தியாவில் குறைந்த அளவிலேயே தயாரிக்கப்படுகின்றன. அவை பெரும்பாலும் சீனாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

## 13 லட்சம் எம்எஸ்எம்இ நிறுவனங்களின் கடன் மறுசீரமைப்பு

- பொதுத்துறை வங்கிகளால் 13.06 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் (எம்எஸ்எம்இ) கடன்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- 2020–21 நிதியாண்டில் 13,327 கி.மீ. தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மேலும், நடப்பு 2021–22 நிதியாண்டுக்குள் 12,000 கி.மீ. தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருவதாக சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

## உள்நாட்டுப் போக்குவரத்து கப்பல்கள் மசோதா மக்களவையில் தாக்கல்

- உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து கப்பல்கள் மசோதாவை துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால், மக்களவையில் அறிமுகம் செய்துவைத்தார். அப்போது அவர் கூறுகையில், "உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து தொடர்பான அனைத்து சட்டங்களையும் ஒன்றிணைக்கும் நோக்கில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.
- உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தைப் பாதுகாப்புமிக்கதாக மாற்றவும், அந்த வழித்தடத்தில் பயணிக்கும் கப்பல்கள், பயணிகள் உள்ளிட்டோரின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கிலும் இந்த மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து காரணமாக ஏற்படும் மாசுபாட்டைக் குறைப்பதற்கான வழிமுறைகள் இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ளன.

## சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவாக சேர்ப்பு

- சில்லறை மற்றும் மொத்த வியாபரங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவாக சேர்க்கப்பட்டுள்ளதாக மக்களவையில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் நாராயண் ராணே தெரிவித்தார்.
- 2021 ஜுலை 2–ம் தேதி முதல் சில்லறை மற்றும் மொத்த விற்பனை வர்த்தகத்தை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவாக மத்திய அரசு சேர்த்துள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிலின் புதிய வகைப்பாடு அறிமுகம் மூலம், கடந்த 2020–ஆம் ஆண்டு ஜுலை 1ம் தேதி முதல், புதிய இலவச ஆன்லைன் பதிவு முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இது முந்தைய உத்யோக் ஆதார ஒப்பந்த தாக்கல் முறையை மாற்றியுள்ளது.
- குறு, சிறு நிறுவனங்களுக்கு 3–ஆம் நபர் உத்தரவாதமின்றி, எளிதாக கடன் வழங்கும் முறையை வலுப்படுத்த கடன் உத்தரவாத திட்டத்தை அரசு தொடங்கியது. இதன் மூலம் கடன் பெறும் உறுப்பு நிறுவனங்களுக்கு ரூ.2 கோடி வரை கடன் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கியதில் இருந்து ரூ.2,72,007.42 கோடி அளவுக்கு கடன் உத்தரவாத திட்டத்தின் கீழ் கடன் அளிக்கப்பட்டுள்ளது.
- பிரதமரின் வேலைவாய்ப்பு உற்பத்தி, கிராம வேலை வாய்ப்பு உற்பத்தி திட்டம், முத்ரா திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பலன்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெற முடியும் மற்றும் கரோனா தொற்று காரணமாக பிரச்னைகளை சந்தித்த குறு, சிறு நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்க இந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

## ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தலைவர் பிரதமர் மோடியுடன் சந்திப்பு

- இந்த ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாலத்தீவு வெளியுறவு அமைச்சர் அப்துல்லா சாஹித் இன்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச உள்ளார்.

## யுனெஸ்கோ நகர்ப்புற கட்டமைப்பு திட்டம்

- மத்திய பிரதேசம் குவாலியர் மற்றும் அர்ச்சா பகுதிகள் யுனெஸ்கோ பாரம்பரிய பகுதியினுள் அதன் வரலாற்று நகர்ப்புற கட்டமைவு பகுதியினுள் சேர்க்கப்பட்டு உள்ளது.
- தெற்கு ஆசிய பகுதியின் 6 நகரங்கள் இந்த பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- குவாலியர், அர்ச்சா பகுதிகள் 7வது மற்றும் 8வது பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

## தாராளமயமாக்கலின் 30–ஆவது ஆண்டு: மன்மோகன் சிங்

- இந்தியாவில் பொருளாதார தாராளமயமாக்க நடவடிக்கை தொடங்கப்பட்டு ஜூலை 24–ஆம் தேதியுடன் 30 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நினைவு கூர்ந்துள்ளார்.
- 1991–ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் பி.வி.நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது பொருளாதார நிபுணரான மன்மோகன் சிங்குக்கு நிதியமைச்சர் பதவி அளிக்கப்பட்டது. அப்போது மோசமான நிலையில் இருந்த இந்தியப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் மிகப்பெரிய பொறுப்பை அவர் ஏற்றார். இந்தியாவுக்கான புதிய பொருளாதாரக் கொள்கையை அப்போதைய பிரதமர் நரசிம்மராவுடன் இணைந்து மன்மோகன் சிங் முன்வைத்தார்.
- 1991ஆம் ஆண்டு ஜூலை 24–ஆம் தேதி பட்ஜெட் உரையின் போது இந்தியாவின் தாராளமயமாக்கல் கொள்கையை மன்மோகன் சிங் அறிவித்தார். வெளிநாட்டு முதலீடு உள்ளிட்ட பொருளாதார தாராளமயமாக்கல் நடவடிக்கைக்குப் பிறகுதான் இந்தியாவின் வளரச்சி வேகமெடுத்தது. இந்தியாவில் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் வளர்ச்சியடைந்தன. தகவல்–தொழில்நுட்பம் உள்ளிட்ட நவீன துறைகளில் இந்தியா தடம் பதிக்கத் தொடங்கியது.

## இயற்கை குறியீடு 2021

- பெங்களூரைச் சேர்ந்த ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் பொருட்கள் அறிவியலில் இயற்கை குறியீடு 2021ல் 50 சிறந்த நிறுவனங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- சீனாவின் ஷாங்காய் கிளேடாங் பல்கலைக்கழகம் முதலிடத்திலும் சீனாவின் தெற்கு பல்கலைக்கழகம் இரண்டாமிடத்திலும் தென்கொரியாவின் KAIST பல்கலைக்கழகம் 3ம் இடத்திலும் இடம் பெற்றுள்ளது.

## தமிழக நீர்ப்பாசன கட்டுமானங்களை நவீனப்படுத்த உலக வங்கி ரூ.992 கோடி

- தமிழகத்தின் நீர்ப்பாசன கட்டுமானங்களை நவீனப்படுத்தும் திட்டத்துக்கு உலக வங்கி ரூ.2,073 கோடியை கடனுதவியாக வழங்குகிறது.
- இதில், இதுவரை ரூ.992.19 கோடி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நீர்வளத் துணை இணையமைச்சர் விஸ்வேஷ்வர் துடு மக்களவையில் தெரிவித்தார்.
- இத்திட்டத்துக்கு ரூ.3,300 கோடி உலக வங்கி கடனுதவி அளிப்பதாக இருந்தது குறித்து தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு மத்திய நீர்வளம், பழங்குடி விவகாரத் துறை இணையமைச்சர் விஸ்வேஷ்வர் துடு அளித்துள்ள பதில்:
- தமிழகத்தில் நீர்ப்பாசன விவசாயத்தை நவீனப்படுத்தல் திட்டத்தின் மொத்த செலவில் 70 சதவீத தொகை ரூ.2,073 கோடியை உலக வங்கியின் ஐபிஆர்டி அமைப்பு கடனாக வழங்குகிறது. இந்தத் திட்டத்தை 2025–க்குள் முடிக்க திட்டமிட்டப்பட்டுள்ளது.

## புத்தரின் கொள்கைகளால் உலகம் மேன்மையுறும்

- சர்வதேச பௌத்த சங்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்காக பிரதமர் மோடி அனுப்பியிருந்த செய்தியில், "கரோனா தொற்று பரவல் காரணமாக மக்கள் பாதிப்புகளைச் சந்தித்து வரும் சூழலில், புத்தரின் கொள்கைகள் தற்காலத்துக்கும் பொருந்துவதாக உள்ளன. அவரது கொள்கைகளின் வலிமையை மக்கள் தற்போது உணர்ந்து கொண்டுள்ளனர். பல்வேறு நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்வை ஏற்படுத்துவதற்கு அக்கொள்கைகள் உதவுகின்றன.

## உயர்நீதிமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்யும் இந்தியாவின் முதல் நீதிமன்றம்

- குஜராத் உயர்நீதி மன்றம் இந்தியாவிலேயே முதன்முறையாக நீதிமன்ற நடைமுறைகளை நேரடி ஒளிபரப்பு செய்ய உள்ளது.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி N.V.ரமணா இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

## தேசமே முதன்மையானது

- 'மனதின் குரல்" வானொலி நிகழ்ச்சி மூலமாக நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர்.
- வரும் ஆகஸ்ட் 15–ஆம் தேதி, நாடு சுதந்திரம் அடைந்ததன் 75–ஆவது ஆண்டில் இந்தியா அடியெடுத்து வைக்கிறது. இதையொட்டி, நாடு முழுவதும் "அம்ருத் மகோத்சவம்" கொண்டாடப்படவுள்ளது. இது தொடர்பாக

பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மத்திய கலாசாரத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. பல இந்தியர்கள் ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் தேசிய கீதத்தைப் பாடுவது அதில் ஒரு நிகழ்ச்சியாகும்.

## நீலகிரியில் ஆட்டோ அவசர ஊர்தி சேவை: பிரதமர் மோடி பாராட்டு

- நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ராதிகா சாஸ்திரி என்பவரின் ஆட்டோ அவசர கால ஊர்தி சேவையை பிரதமர் நரேந்திர மோடி தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் பாராட்டினார்.

## குழாய் வழி குடிநீர் வழங்கும் முதல் இந்திய நகரம்

- ஒடிசா மாநிலம் சூரிய நகரத்தில் பொது இடங்களில் தூய்மையான குடிநீர் 24x7 வகையில் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## குடியரசுத் தலைவராக 4 ஆண்டுகளை நிறைவு செய்தார் ராம்நாத் கோவிந்த்

- குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் 4 ஆண்டுகளை நிறைவு செய்தார். கடந்த 4 ஆண்டுகளில் மத்திய, மாநில அரசுகளின் 63 மசோதாக்களுக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- ராம்நாத் கோவிந்த் கடந்த 2017–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25–ஆம் தேதி, நாட்டின் 14–ஆவது குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றார்.

## கார்கில் வெற்றி தினம்

- கார்கில் போரில் வெற்றி பெற்ற தினத்தையொட்டி, அப்போரில் உயிரிழந்த வீரர்களுக்கு ராணுவத்தினரும், நாடாளுமன்ற எம்.பி.க்களும் அஞ்சலி செலுத்தினர்.
- கார்கில் பகுதியில் ஊடுருவி கைப்பற்றுவதற்கு பாகிஸ்தான் ராணுவம் கடந்த 1999–ஆம் ஆண்டில் முயன்றது. அந்த முயற்சியை இந்திய ராணுவ வீரர்கள் தடுத்து நிறுத்தினர். இரு நாட்டு ராணுவங்களுக்குமிடையே நடைபெற்ற போரில் இந்தியா வெற்றி பெற்றது.
- போரில் வெற்றி பெற்ற ஜுலை 26–ஆம் தேதியானது ஆண்டுதோறும் கார்கில் வெற்றி தினமாக (கார்கில் விஜய் திவஸ்) கொண்டாடப்பட்டு வருகிறது. போரின் 22–ஆவது வெற்றி தின விழா லடாக்கின் திராஸ் பகுதியில் அமைந்துள்ள கார்கில் போர் நினைவிடத்தில் நடைபெற்றுது.
- கடந்த 1971–ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் நிகழ்ந்த போரில் இந்தியா வெற்றி பெற்றது. அந்த வெற்றியின் 50–ஆவது ஆண்டைக் கொண்டாடும் விதமாக, நாடு முழுவதும் வெற்றி தீபம் எடுத்துச் செல்லப்பட்டது. அந்த தீபம் கார்கில் போர் நினைவிடத்துக்கு வந்து சேர்ந்தது.

## உலகின் சிறந்த 10 வேளாண்மை ஏற்றுமதி நாடுகளில் இந்தியா

- உலக வர்த்தக அமைப்பின் (WTO) 2019ம் ஆண்டு வேளாண்மை தரவுகளின்படி கடந்த 25 ஆண்டுகளில் (1995 முதல்) இந்தியாவின் வேளாண் உற்பத்தி ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.
- மொத்த உலக வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 3.1% ஆக உள்ளது.
- இந்த பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் (16%) முதலிடத்திலும் அமெரிக்கா (15.8) இரண்டாமிடத்திலும் பிரேசில் (7.8) மூன்றாமிடத்திலும் பெற்றுள்ளது.

## பசவராஜ் பொம்மை கர்நாடக புதிய முதல்வர்

- கர்நாடகத்தின் புதிய முதல்வராக பசவராஜ் பொம்மை பாஜக எம்எல்ஏக்களால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆளுநர் மாளிகையில் (ஜுலை 28) நடைபெறவுள்ள விழாவில், மாநிலத்தின் 20–ஆவது முதல்வராக அவர் பதவியேற்கவிருக்கிறார்.

## மாநிலங்களவை: அமளிக்கிடையே நிறைவேறியது சிறார் நீதிச் சட்டத் திருத்த மசோதா

- திருத்தப்பட்ட மசோதாவில், சிறார் தலம் தொடர்பான விவகாரங்களில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட சார் ஆட்சியர் ஆகியோரின் பங்களிப்பு அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளது.

## புதிய தேசிய கல்விக் கொள்கை ஓராண்டு நிறைவு: பிரதமர் இன்று உரை

- தேசிய கல்விக் கொள்கை 2020–இன் கீழ் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு ஓராண்டு நிறைவு பெறுவதைக் குறிக்கும் வகையில் நாடு முழுவதும் உள்ள கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி வாயிலாக (ஜூலை 29) உரையாற்றுகிறார். அப்போது கல்வித் துறையில் பல்வேறு முன் முயற்சிகளையும் அவர் அறிமுகப்படுத்த இருக்கிறார்.

- உயர் கல்வியில் மாணவர்கள் சேர்வதற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்குவது, முதலாமாண்டு பொறியியல் திட்டங்கள் பிராந்திய மொழிகளில் வழங்கப்படுவது, உயர் கல்வியை சர்வதேசமயமாக்குவதற்கான வழிகாட்டுதல்கள் போன்றவற்றுக்கு வழிவகை செய்யும் "அகாடமிக் கிரடிட்" வங்கியை பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

## அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இந்தியா வருகை

- அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்தார். இந்தியா–அமெரிக்கா இடையேயான இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்தில் அவருடைய பயணம் அமைந்துள்ளது.

## தேசிய விவசாயிகள் தரவு மையம்

- வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் உலகளாவிய தரவுகளை தெரிந்து கொள்ளவும் நேரடி மானிய திட்டங்களை அறியும் வகையில் ஒரு தகவல் தரவு மையத்தை ஏற்படுத்த உள்ளதாக பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.
- மண்வளம், வேளாண் தகவல், கடன், காப்பீடு, பருவகாலம் விதைகள், பூச்சி மருந்து, உரம் போன்ற அனைத்து தகவல்களும் இதில் அடங்கும்.

## இந்தூர்

- சர்வதேச சுத்தமான காற்று பிரித்தல் திட்டத்தில் இந்தியாவிலிருந்து இணைந்துள்ள ஒரே நகரம் மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரம் ஆகம்.
- இந்தியாவின் சுத்தமான நகரமான இந்தூர் இந்த திட்டத்தில் 5 ஆண்டுகள் செயல்படும்.
- இந்த சர்வதேச காற்று வகைப்படுத்தல் திட்டம் அமெரிக்கா சர்வதேச மேம்பாட்டு அமைப்பால் துவங்கப்பட்டுள்ளது.

## மருத்துவப் படிப்புகளில் ஓபிசிக்கு 27% இட ஒதுக்கீடு

- அகில இந்திய ஒதுக்கீட்டின் கீழ் உள்ள இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (ஓபிசி) 27 சதவீதமும், பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கு இடபிள்யூஎஸ்) 10 சதவீதமும் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- நடப்பு 2021–22–ஆம் கல்வியாண்டு முதல் இந்த இட ஒதுக்கீடு முறை அமல்படுத்தப்பட உள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துன்ளது.
- குறிப்பிட்ட மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், மற்ற மாநிலங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு வசதியாக அகில இந்திய ஒதுக்கீட்டு முறையானது உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் கடந்த 1985–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, அனைத்து மாநிலங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இளநிலை படிப்புகளுக்கான இடங்களில் 15 சதவீதமும், முதுநிலை படிப்புகளுக்கான இடங்களில் 50 சதவீதமும் அகில இந்திய ஒதுக்கீட்டுக்காக வழங்கப்பட்டன. அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களில் கடந்த 2007–ஆம் ஆண்டு முதல் தாழ்த்தப்பட்டோருக்கு (எஸ்.சி) 15 சதவீதமும் பழங்குடியினருக்கு 75 சதவீதமும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.
- இடங்கள் அதிகரிப்பு: மருத்துவப் படிப்புகளில் கடந்த 2014–ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு பல்வேறு சீர்திருத்தங்களைப் புகுத்தியுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் எம்பிபிஎஸ் படிப்புகளுக்கான இடங்கள் 56 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2014–ஆம் ஆண்டில் 54,348–ஆக இருந்த இடங்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டில் 84,649–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதே காலகட்டத்தில் மருத்துவ முதுநிலைப் படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கையும் 30,191–லிருந்து 54,275–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தேசத்தைக் கட்டமைப்பதில் புதிய கல்விக் கொள்கைக்கு முக்கியப் பங்கு

- 'தேசத்தைக் கட்டமைப்பதில் புதிய தேசிய கல்விக் கொள்கை முக்கியப் பங்கு வகிக்கிறது; நமது இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை புதிய கல்விக் கொள்கை பூர்த்தி செய்யும்' என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.
- புதிய தேசிய கல்விக்கொள்கை அமல்படுத்தப்பட்ட தன் ஓராண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.
- புதிய கல்விக்கொள்கையில் தாய்மொழிக்கும் உள்ளூர் மொழிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக, 8 மாநிலங்களில் உள்ள 14 பொறியியல் கல்லூரிகளில் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மராத்தி, வங்காளம் ஆகிய 5 மொழிகள் வழியாக பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன. இதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- தாய்மொழியிலும், உள்ளூர் மொழியிலும் பாடங்களைக் கற்பது, ஏழை எளிய கிராமப்புற, பழங்குடி மாணவர்களுக்கு நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்.
- தொடக்கக் கல்வியிலும் பயிற்றுமொழியாக தாய்மொழி அறிமுகம் செய்யப்பட்டிருப்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றும்.

## பெண் வேலையின்மை: 4.2%

- 2019–20ம் ஆண்டிற்கான பெண்கள் வேலையின்மை விகிதம் 4.2% என தேசிய புள்ளியியல் அமைப்பு தெரிவித்துள்ளது.

SAFAL கணக்கீட்டு திட்டம்

- CBSE பயிலும் மாணவர்களுக்காக அவர்களின் திறனை ஆராயும் SAFAL என்ற கணக்கீட்டு திட்டம் பிரதமர் மோடியால் துவங்கப்பட்டுள்ளது.
- தேசிய நெடுஞ்சாலைகளில் 703 கி.மீ. தொலைவுக்கு நெகிழிக் கழிவுகளால் சாலை அமைப்பு
- தேசிய நெடுஞ்சாலைகளில் இதுவரை 703 கிலோமீட்டர் தொலைவிற்கு நெகிழிக் கழிவுகளால் சாலை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி மக்களவையில் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

## புலிகளை பாதுகாப்பதில் இந்தியா உறுதி

- புலிகளைப் பாதுகாப்பதிலும், அவற்றுக்குப் பாதுகாப்பான வாழ்விடங்களை வழங்குவதிலும் இந்தியா உறுதியாக உள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- சர்வதேச புலிகள் தினம், (ஜூலை 29) கொண்டாடப்பட்டது. இது தொடர்பாக பிரதமர் மோடி சுட்டுரையில் வெளியிட்ட பதிவுகளில் கூறியிருப்பதாவது:
- சர்வதேச புலிகள் தினத்தையொட்டி வன உயிர் ஆர்வலர்களுக்கு குறிப்பாக புலிகள் பாதுகாப்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு வாழ்த்துகள். உலகளவில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட புலிகள் வசிக்கும் இடமாக இந்திய தேசம் உள்ளது. நமது புலிகளுக்கும் பாதுகாப்பான வாழ்விடங்களை உறுதி செய்வதிலும், புலிகளுக்கு உகந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மேம்படுத்துவதிலும் இந்தியா உறுதியாக உள்ளது.
- நாட்டில் 18 மாநிலங்களில் 51 புலிகள் சரணாலயங்கள் உள்ளன. 2018–ஆம் ஆண்டில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட புலிகள் கணக்கெடுப்பில், அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.
- புலிப் பாதுகாப்பு குறித்த செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பிரகடனத்தின் இலக்கான, புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் நோக்கத்தை 4 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்தியா அடைந்தது.
- இந்தியாவின் புலிகள் பாதுகாப்பு திட்டத்தில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்துவது மிக முக்கியமானதாக உள்ளது.

## திருநங்கைகளுக்கு 1% இடஒதுக்கீடு

- கர்நாடக மாநிலத்தில் அரசு வேலைவாய்ப்புகளில் திருநங்கைகளுக்கு 1% இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.
- கர்நாடக மாநில குடிமைப்பணியாளர் சட்டத்தில் (1977) திருத்தங்கள் செய்யப்பட்டு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## பெண்கள் பாதுகாப்பிற்காக பிங் திட்டம்

- கேரள காவல் துறை பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும் Pink Protection என்ற திட்டத்தை துவங்கியுள்ளது.
- வரதட்சனை கொடுமை, சைபர் மிரட்டல், போன்றவற்றில் பெண்களுக்கு பாதுகாப்பளிக்க இந்த திட்டம் உதவும்.

## இந்திய புலிகள் காப்பகங்களுக்கு சர்வதேச அங்கீகாரம்

**இந்தியாவிலுள்ள**

- மனாஸ், ஓரான் – அசாம்
- சாத்புத்ரா, பன்னா, கன்வா – மத்திய பிரதேசம்
- துத்வா – உத்திரபிரதேசம்
- பென்ச் – மகாராஷ்டிரா
- சுந்தரவனம் – மேற்கு வங்கம்
- வால்மீகி நகர் – பீகார்
- பரம்பிக்குளம் – கேரளா
- முதுமலை, ஆணைமலை – தமிழ்நாடு
- பந்திப்பூர் – கர்நாடகா
- ஆகிய 14 புலிகள் காப்பகத்திற்கு சர்வதேச அளவிலான சிறந்த பயன்பாட்டிற்கான CA/TS அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

# 7 சர்வதேச நிகழ்வு



## உலக மொபைல் காங்கிரஸ்

- 2021ம் ஆண்டு உலக மொபைல் காங்கிரஸ் ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனாவில் நடைபெற உள்ளது.
- 2006ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் GSMA என்ற நிறுவனம் இந்த வர்த்தக கூட்டத்தை நடத்துகிறது.

## 7வது இந்திய பெருங்கடல் கடற்படை மாநாடு

- பிரான்சில் 7வது இந்திய பெருங்கடல் கடற்படை மாநாடு சமீபத்தில் முடிவுற்றது.
- இந்த மாநாட்டில் பிரான்ஸ், இந்திய கடற்படை உயரதிகாரிகள் பங்கேற்றனர்.
- இந்திய பெருங்கடல் கடற்படை மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவதாகும்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பச்சை பாஸ்போர்ட்

- ஐரோப்பிய நாடுகளுக்குள் தடையின்றி உலவ பச்சைநிற பாஸ்போர்ட்டை ஐரோப்பிய ஒன்றியம் அறிமுகம் செய்துள்ளது.
- ஐரோப்பிய ஒன்றிய டிஜிட்டல் கோவிட் சான்றிதழ் (EU Digital COVID Certificate) என்ற அடையாள அட்டை அவர்களின் கரோனா தடுப்பூசி செலுத்திய நிலையுடன் கூடிய தகவல்களை கொண்டு தனித்துவமான QR கோடு வாயிலாக உருவாக்கப்பட்டது.

## டெல்டாவை விட அபாயகரமான லம்படா கரோனா

- புதிதாகத் தோன்றியுள்ள லம்படா என்ற வகையைச் சேர்ந்த கரோனா, இந்தியாவில் முதல்முறையாகக் கண்டறியப்பட்ட டெல்டா வகையைவிட அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் அபாயத்தன்மை கொண்டது என்று மலேசிய சுகாதாரத் துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

## உலகின் மிக உயரமான மனற்கோட்டை

- உலகின் மிக உயரமான மனற்கோட்டை டென்மார்க்கில் அமைக்கப்பட்டுள்ளது. கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ள இந்த கோட்டை 21.16 மீட்டர் உயரம் உடையது.
- இதற்கு முன்னர் ஜெர்மனியில் 17.66 மீட்டர் உயரத்தில் ஏற்படுத்தப்பட்டது.

## உலகின் முதல் முப்பரிமான அச்சு பள்ளி

- உலகின் முதல் முப்பரிமான அச்சில் உருவாக்கப்பட்ட பள்ளி ஆப்பிரிக்க கண்டத்தின் மலாவியில் திறந்த வைக்கப்பட்டுள்ளது.
- 18 மணி நேரத்தில் இந்த பள்ளி உருவாக்கப் பட்டுள்ளது.
- கட்டுமான வசதிகள் பெரிதும் காணப்படாத ஆப்பிரிக்க பகுதிகளில் இந்த முப்பரிமாண தொழில்நுட்ப கட்டிடங்கள் முக்கியப் பங்காற்றும்.

## "ஜம்மு–காஷ்மீரில் தொகுதிகள் மறுவரையறை வெளிப்படையாக நடைபெறும்"

- ஜம்மு–காஷ்மீரில் சட்டப்பேரவைத் தொகுதி மறுவரையறைப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அந்த யூனியன் பிரதேசத்துக்கு தொகுதி மறுவரையறைக் குழு 4 நாள் பயணம் மேற்கொண்டது. ஜூலை 6, 7–ஆம் தேதிகளில் காஷ்மீரிலும், ஜூலை 8, 9–ஆம் தேதிகளில் ஜம்முவிலும் உள்ள பல்வேறு அமைப்பினரை அந்தக் குழு சந்தித்து ஆலோசனை நடத்தியது.
- இந்நிலையில் அந்தக் குழுவின் தலைவரும் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியுமான ரஞ்சனா பிரகாஷ் தேசாய், தலைமை தேர்தல் ஆணையர் சுஷீல் சந்திரா ஆகியோர் ஜம்முவில் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

- "கடந்த 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி ஜம்மு–காஷ்மீரில் தொகுதி மறுவரையறைப் பணிகள் சட்டத்தைப் பின்பற்றி வெளிப்படையாக நடைபெறும். அவ்வாறு இல்லையெனில் தொகுதி மறுவரையறைக் குழு இங்கு வந்து அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களை கேட்க இத்தனை நாள்களை செலவிட்டிருக்காது.

## நாடு முழுவதும் 1,500 புதிய ஆக்சிஜன் ஆலைகள்

- பிஎம் கேர்ஸ் நிதியம் மற்றும் பொது நிறுவனங்கள் மூலம் நாடு முழுவதும் 1,500 ஆக்சிஜன் ஆலைகள் நிறுவப்படவுள்ளன. இதன் மூலம் நாட்டில் 4 லட்சம் மருத்துவப் படுக்கைகளுக்கு ஆக்சிஜன் விநியோகிக்கப்படும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- கரோனா நோய்த்தொற்றின் மூன்றாவது அலையை நாடு எதிர்கொள்ள நேரிட்டால் அதற்கான அனைத்து நிலைகளையும் தயார்படுத்தும் பணிகளை மத்திய அரசு முடுக்கிவிட்டுள்ளது. இந்தப் பணிகளுக்கான ஏற்பாடுகள் குறித்த உயர்நிலை ஆய்வுக் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் காணொலி முறையில் நடைபெறெ்றது.
- ஆக்சிஜன் ஆலைகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பில் மருத்துவமனை ஊழியர்களுக்கு போதிய பயிற்சியை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட பிரதமர் ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.
- நிபுணர்களால் உருவாக்கப்பட்ட ஆக்சிஜன் ஆணைய பராமரிப்பு குறித்த ஒரு பயிற்சி மாதிரியைக் கொண்டு நாடு முழுவதும் 8,000 பேருக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பட்டினியால் நிமிஷத்துக்கு 11 பேர் மரணம்: ஆக்ஸ்ஃபாம்

- சுமார் 20 சர்வதேச அறக்கட்டளைகளின் அந்தக் கூட்டமைப்பு, "பரவும் பட்டினித் தீநுண்மி" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- பற்றாக்குறை காரணமாக உலகம் முழுவதும் நிமிஷத்துக்கு 11 பேர் இறக்கின்றனர் சர்வதேச அளவில் 15.5 கோடி பேர் தற்போது கடும் பஞ்சத்தின் பிடியில் சிக்கியுள்ளனர். இது முந்தைய ஆண்டைவிட 2 கோடி அதிகமாகும்.

## முதல் இந்தியா, இங்கிலாந்து நிதி சந்தைகள் பேச்சுவார்த்தை

- 2020–ம் ஆண்டில் 10–வது பொருளாதார மற்றும் நிதி பேச்சுவார்த்தை கூட்டத்தில் இந்தியா–இங்கிலாந்து இடையே இந்த புதிய கூட்டமைவு ஏற்படுத்தப்பட்டது. அதன் முதல் கூட்டம் ஜூலை 8ம் தேதி நடந்து முடிந்துள்ளது.
- 2030–ம் ஆண்டுக்குள் இரண்டு நாடுகளுக்கிடையேயான நிதி உறவுக்கான பாலம் அமைத்தலுக்காக இந்த கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.
- குஜராத், காந்தி நகரின் GIFT சிட்டியை உலக தரத்திலான மையமாக மாற்றுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

## இந்தியா காம்பியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- பொது துறை தீர்த்தல் மற்றும் மேலாண்மை மறுசீரமைப்புகளை மேற்கொள்ள இந்தியா காம்பியா இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது.

**காம்பியா**

- தலைநகர் – பஞ்சுல்
- அதிபர் – அதாமா பாரோ

## நேபாள பிரதமராக 5–ஆவது முறையாக பதவியேற்றார் ஷேர் பகதூர் தேவுபா

- நேபாள பிரதமராக ஷேர் பகதூர் தேவுபா பதவியேற்றார். இதன்மூலம் 5–ஆவது முறையாகப் பிரதமரானவர் என்ற சாதனையை அவர் படைத்தார்.
- நேபாள நாடாளுமன்ற கலைப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற அரசிலமைப்பு அமர்வு, அரசியலமைப்புச் சட்டத்தின் 76(5)–ஆவது பிரிவின்படி நேபாள காங்கிரஸ் கட்சித் தலைவர் ஷேர் பகதூர் தேவுபாவை பிரதமராக நியமிக்க வேண்டும் எனக் கூறியது.

## உலகின் முதல் வர்த்தக ரீதியிலான சிறிய ரக அணுசக்தி நிலையம்

- உலகின் முதன் சிறிய ரக அணுசக்தி நிலையத்தை ஹைனான் மாகாணம் சான்ஜியாங் அனுசக்தி நிலையத்தில் லிங்லாங் ஒன் என்ற பெயரில் உருவாக்கி வருகிறது.
- சர்வதேச அணுசக்தி முகமை இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 125000 கிலோவாட் திறனுடைய

இந்த நிலையம் மூலம் 500000 குடும்பங்களுக்கு சீனாவில் மின்சாரம் அளிக்க இயலும்.

## எத்தியோப்பியா தேர்தல்

- எத்தியோப்பியா பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் அபி அகமதுவின் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

## உலகின் பெரிய சூரியசக்தி பண்ணைகள் : சிங்கப்பூர்

- பருவகால மாற்றத்திற்கு எதிராக போரிட சிங்கப்பூர் உலகின் மிகப்பெரிய சூரிய சக்தி பண்ணைகளை அமைத்து வருகிறது.
- இவை 45 கால்பந்து மைதானங்களுக்கு இணையானவை
- டென்ஜி அணைப்பகுதியில் 60 மெகாவாட் திறனுடைய மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி நிலையம் கட்டப்பட்டு வருகிறது.

## நேபாளம்: நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் ஷேர் பகதூர் தேவுபா வெற்றி

- நேபாள புதிய பிரதமர் ஷேர் பகதூர் தேவுபா நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.
- அரசிலமைப்புச் சட்டப் பிரிவு 76(5)–இன் படி நேபாள புதிய பிரதமராக ஷேர் பகதூர் தேவுபாவை நியமிக்க கடந்த ஜூலை 12–ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, பிரதமராக அவர் பதவியேற்றார். இந்நிலையில், கூடிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவையில் அவர் நம்பிக்கை வாக்கெடுப்பு கோரினார். 275 உறுப்பினர்கள் கொண்ட அவையில் 136 வாக்குகள் தேவைப்பட்ட நிலையில், 249 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்றனர். இதில் ஷேர் பகதூர் தேவுபா அரசுக்கு ஆதரவாக 165 வாக்குகளும், எதிராக 83 வாக்குகளும் கிடைத்தன. ஒருவர் நடுநிலை வகித்தார். முன்னாள் பிரதமர் சர்மா ஓலி அணியைச் சேர்ந்த 8 உறுப்பினர்கள் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

## யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் உள்ள பவள பாறைகள்

- ஆஸ்திரேலியாவின் மாபெரும் பவள பாறைகள் பகுதி 1995ம் ஆண்டின் உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.
- சீனா போன்ற நாடுகள் கடல் நீரை அதிகம் மாசுபடுத்தலில் அந்த பகுதி பாதிப்பிற்குள்ளாவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## சிரியாவின் அதிபர் பதவியேற்பு

- சிரியாவின் அதிபராக பஷார் அல் ஆசாத் 4வது முறையாக பதவியேற்றுள்ளார்.

## ஆக்ஸ்போம் அறிக்கை

- இந்திய சுகாதார குறியீடுகளில் பொதுப்பிரிவு மக்களுக்கும் பட்டியலின மக்கள் மற்றும் பழங்குடியினர் இடையே மிகப் பெரிய இடைவெளி நிலவுவதாக ஆக்ஸ்போம் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- பெண்கள் கல்வி குறித்தும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பட்டியலின மற்றும் பழங்குடியினர் இடையே பெண்கள் கல்வி அறிவு விகிதம் குறைவாக உள்ளதாகவும், முஸ்லிம் பெணகள் கல்வி அறிவு விகிதம் 64.3% என்ற அளவிலேயே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹைட்டி: புதிய பிரதமர் பொறுப்பேற்பு

- கரீபியன் பெருங்கடல் நாடான ஹைட்டியின் அதிபர் ஜோவனேல் மாய்ஸ் படுகொலை செய்யப்பட்டதால் எழுந்துள்ள பதற்ற சூழலுக்கிடையே, அந்த நாட்டின் புதிய பிரதமராக ஏரியல் ஹென்றி பொறுப்பேற்றுக் கொண்டார்.

## லிவர்பூல் யுனெஸ்கோ பாரம்பரிய பட்டியலில் இருந்து நீக்கம்

- இங்கிலாந்தை சேர்ந்த நகரான லிவர்பூல் யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில் 2004ம் ஆண்டு சேர்க்கப்பட்டது. சமீப காலத்தில் அந்த நகருக்குள் ஏற்படுத்தப்பட்ட கட்டிடங்கள் மற்றும் கால்பந்து மைதானம் அதன் பழமையை மீறுவதாக எண்ணிய யுனெஸ்கோ பாரம்பரிய பட்டியலில் இருந்து அவற்றை நீக்கியுள்ளது.

## உலகின் முப்பரிமான துருப்பிடிக்காத இரும்பு பாலம்

- நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டம் நகரின் அவுடெங்கிட் ஆர்டர் பரீக்வால் கால்வராயன் மீது உலகின் முதல் முப்பரிமான துருப்பிடிக்காத இரும்பு பாலம் திறந்து வைக்கப்பட்டு உள்ளது.
- 4500 கிலோ இரும்பை பயன்படுத்தி இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது.

## உலகின் மிகப்பெரிய கார்பன் சந்தை

- உலகின் மிகப்பெரிய கார்பன் சந்தை சீனாவில் துவங்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய பசுமை இல்ல வாயு உமிழ்வு நாடான சீனா கார்பன் அளவீடு குறைப்பதற்கான முயற்சியாக இந்த சந்தையை துவங்கியுள்ளது.

## மாசில்லா எரிசக்தி: பிரதமர் மோடிக்கு அமெரிக்கா பாராட்டு

- கரோனா நெருக்கடிகிடையிலும் இந்தியாவில் மாசற்ற எரிசக்தி பயன்பாட்டை மேம்படுத்தவதில் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக அமெரிக்கா பாராட்டியுள்ளது.
- பருவநிலை மாற்றத்தைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டாக மேற்கொள்ள இந்தியாவும் அமெரிக்காவும் உறுதி பூண்டுள்ளன.
- 2030-ஆம் ஆண்டுக்குள் பருவநிலை மாற்றம் மற்றும் மாசற்ற எரிபொருள் விவகாரத்தில் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை இந்தியாவும் அமெரிக்காவும் கடந்த ஏப்ரல் மாதம் மேற்கொண்டன.
- பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்காற்று அமைப்பை அமைத்தல், அதற்கு உகந்த சந்தை நிலவரத்தை ஏற்படுத்துதல், தேவையான முதலீடுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் 450 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்யும் இந்தியாவின் இலக்கை எட்டுவதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு அளிக்கும் என்றார் அவர்.

## மரபனு மாற்றம் செய்யப்பட்ட தங்க அரிசிக்கு அனுமதி

- மரபனு மாற்றம் செய்யப்பட்ட தங்க அரிசிக்கு வர்த்தக ரீதியிலான அனுமதியை பிலிப்பைன்ஸ் வழங்கியுள்ளது.
- இந்த அரிசியை பிலிப்பைன்ஸ் அரிசி ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளது.
- அதிக ஊட்டச்சத்து நிரம்பிய இந்த அரிசியினால் குழந்தைகளிடையே ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய-தெற்கு ஆசிய இணைப்பு மாநாடு - 2021

- 2021ம் ஆண்டிற்கான மத்திய - தெற்கு ஆசிய இணைப்பு மாநாடு உஸ்பெகிஸ்தான் நாட்டின் தாஷ்கண்டில் நடைபெற்றது.
- Central and South Asia: Regional Connectivity challenges and opportunities என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டில் 40 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தியா சார்பாக வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டனர்.

## பிரேசிலின் "சிட்டியோ பர்லி மார்க்ஸ்"

- பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவிற்கு அருகில் அமைந்துள்ள சிட்டியோ பர்லி மார்க்ஸ் பகுதி சமீபத்தில் யுனெஸ்கோ பாரம்பரிய பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது.
- இந்த பர்ல் மார்க்ஸ் பகுதியில் பிரேசிலின் கலை கட்டடம், கலை பூங்காக்கள் உலக புகழ்பெற்றவை.

## புவிசார் குறியீடு பெற்ற ராஜா மிளகாய்

- நாகாலாந்தில் விளையும் புவிசார் குறியீடு பெற்ற ராஜா மிளகாய் கவுகாத்தி வழியாக முதல் முறையாக இலண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.
- உலகின் மிக காரமான 5 மிளகாய் வகைகளுள் இது ஒன்றாகும்.

# 8 தமிழ்நாடு



## தமிழக அரசு ஊழியர்களுக்கு காப்பீட்டு திட்டம்

- தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் ஒரு ஒருங்கிணைந்த காப்பீட்டு திட்டத்தை துவங்க அரசு முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆண்டிற்கு 3240 என்ற தவணையில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து துவங்கப்பட்டுள்ளது.

## கடற்கரையோர காற்று மின்உற்பத்தி நிலையங்கள்

- இந்தியாவிற்கான டென்மார்க் தூதர் பீரீடி ஸ்வான் தமிழ்நாட்டின் கடற்கரையோர காற்று மின் உற்பத்தி மையங்கள் அமைப்பதற்கான சாதகமான சூழல் நிலவுவதால் அதிக அளவில் அமைக்க டென்மார்க் முதலீடு செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளார்.

## "கேட்" தேர்வில் தேர்ச்சியை அதிகரிக்கப் பயிற்சி வகுப்புகள்

- உயர் கல்விக்கான "கேட்" தேர்வில் தமிழக மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க அரசின் சார்பில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.
- உயர்கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்தி: தமிழ்நாட்டில் உயர்கல்வி மாணவர்களின் சேர்க்கை சில மாவட்டங்களில் குறைவாக இருந்து வருகிறது. இந்த நிலையை சீர்செய்யும் விதமாக அடுத்த 10 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.
- தாலுக்காக்களில் கல்லூரிகள்: வேலைவாய்ப்புக்கு உகந்த பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்தவும், தேவையானதாலுகாக்களில்புதியகல்லூரிகளைத் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (பாலிடெக்னிக்) மாணவர்களின் சேர்க்கையை அதிகரிப்பது குறித்தும், "கேட்" தேர்வில் விகிதத்தை உயர்த்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

## ஒரே துறையின்கீழ் நியாயவிலைக் கடைகள்

- கூட்டுறவு, உணவுப் பொருள் வழங்கல் ஆகிய துறைகளின் கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளை ஒரே துறையின் கீழ் கொண்டு வருவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசித்தார்.
- விவசாயக் கடன்: கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக விவசாயக் கடன், நகைக் கடன்கள், மானிய விலையில் உரம் மற்றும் விவசாய இடு பொருள்கள் வழங்குதல் ஆகியவற்றை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்துவது பற்றியும் அதிகாரிகளுடன் விவாதித்தார்.

## முட்டுக்காடு கழிமுக பகுதியை பாதுகாக்க பிரச்சாரம்

- கேளம்பாக்கம் பகுதியை சேர்ந்த மக்கள் 103 கிலோ மீட்டர் நீளமுள்ள பக்கிங்காம், கோட்டூர்புரம் பகுதிகளை இணைக்கும் ராஜீவ்காந்தி சாலையை ஒட்டியுள்ள உவர்நீர் பகுதியான முட்டுக்காடு பகுதியை பாதுகாக்க பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.
- அதிகப்படியான நகர மையமாதல், நீர்வரத்து ஆக்கிரமிப்பு போன்றவற்றில் இந்த பகுதி பாதிப்பிற்குள்ளாகி உள்ளது.

## மயிலாடுதுறையின் புளோரன்ஸ்

- மயிலாடுதுறை தர்மபுரம் ஆதீனத்தின் இலவச பிரசவ மருத்துவனையின் 25 ஆண்டுகளாக

பணியாற்றிய ஆஸ்திரேலியா பெண் மருத்துவ Dr.ரோட்ரிகிஸ் காலமானார்.

## கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் பள்ளிச் சேர்க்கை

- 2009ம் ஆண்டு கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளின் 25% இடங்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. இந்த இடங்களில் சேர்வதற்கான அனுமதி துவங்கியுள்ளது.
- தமிழ்நாட்டில் 5000 பள்ளிகளில் 1.13 இலட்சம் இடங்கள் இதன் மூலம் நிரப்பப்படுகின்றது.

## 'டோக்கியோவை நோக்கி சாலை" விநாடி வினா: இணையவழியில் ஜூலை 22 வரை நடக்கிறது

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையம் இணைந்து நடத்தும் "டோக்கியோவை நோக்கி சாலை" எனும் தலைப்பில் இணையதளம் (https//fitindia.gov.in/quiz}) மூலம் வினாடி வினா போட்டிகள், ஜூலை 22–ஆம் தேதி வரை நடத்தப்பட்டு வருகிறது.

**வினாடி வினா போட்டிக்கான வழிமுறைகள்:**

- போட்டிகள் 120 வினாடி (2 நிமிஷம்) மட்டுமே நடைபெறும்.
- போட்டியில் 10 கொள்குறி வினாக்கள் கேட்கப்படும்.
- வினாக்கள் அனைத்தும் ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் மட்டும் இடம் பெற்றிருக்கும்.
- ஒலிம்பிக் வரலாறு, விளையாட்டு தொடர்பான கேள்விகள், முன்னாள் வீரர், வீராங்கனைகள் பெற்ற சாதனைகள், உலக சாதனைகள், கடந்த மற்றும் தற்போதைய சாதனைகள் மற்றும் சாதனையாளர்கள் தொடர்பான கேள்விகள் இடம் பெற்றிருக்கும்.

## ஜெர்மனி கொலோன் பல்கலைக்கழக தமிழ்த் துறைக்கு ரூ.1.25 கோடி நிதி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

- ஜெர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை தொடர்ந்து இயங்கிட ரூ.1.25 கோடி நிதியுதவி அளிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு:
- ஜெர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பிரிவு முக்கியப் பங்காற்று வருகிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல், தமிழியல் ஆய்வு நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அங்கு தமிழ்ப் பேராசிரியராக இருந்த நிக்லாஸ், ஓய்வு பெற்ற பிளசு தமிழ்ப் பிரிவை மூடுவதாக அந்தப் பல்கலைக்கழகம் அறிவித்தது.

## மாநில உயர்கல்வி மன்றம் திருத்தியமைப்பு

- தமிழ்நாடு மாநிலம் உயர்கல்வி மன்றத்தை திருத்தியமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
- திருத்தியமைக்கப்பட்ட மாநில உயர்கல்வி மன்றம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு: கடந்த 2016–ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவர் பதவி நிரப்பப்படாமலும், உயல்கல்வி மன்றம் திருத்தியமைக்கப்படாமலும் இருந்தது. இந்த நிலையில், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- துணைத் தலைவர் அ.ராமசாமி: மாநில உயர்கல்வி மன்றத்தின் தலைவராக உயர்கல்வித் துறை அமைச்சர் இருப்பார். துணைத் தலைவராக பேராசிரியர் அ.ராமசாமி செயல்படுவார். அவர் அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றியவர். அறிஞர் அண்ணா விருது, ராஜா சர்.அண்ணாமலை செட்டியார் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் உயர் கல்வி மன்றத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.
- மாநில அளவிலான உயர்கல்வித் திட்டங்களின் மேம்பாட்டுக்கும், மாநிலத் திட்டங்கள், போன்றவற்றை ஒருங்கிணைக்க, மாநில உயர்கல்வி மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. இப்போது பல்வேறு கல்வி நிறுவனங்கள் வழங்கும் பட்டப் படிப்புகளுக்கான பாடத் திட்டங்களைத் தலைப்பு வாரியாக ஆய்வு செய்து, இணைக் கல்வி குழுவின் முன்பு சமர்ப்பித்து அதன் தீர்மானங்களை அரசுக்கு அனுப்பும் பணியையும் உயர்கல்வி மன்றம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## வருவாய் பற்றாக்குறை 4–ஆவது மானியம்: தமிழகத்துக்கு ரூ.183 கோடி ஒதுக்கீடு

- மாநிலங்களின் வருவாய்க்கும் செலவுக்கும் ஏற்படும் பற்றாக்குறைக்கான மானியத்தின் 4–ஆவது தவணைத் தொகையாக 17 மாநிலங்களுக்கு

ரூ.9,871 கோடியை மத்திய நிதியமைச்சகம் விடுவித்துள்ளது. இதில், தமிழகத்துக்கு ரூ.183.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- ஜிஎஸ்டி உள்ளிட்ட வரி வருவாய் பகிர்வுக்குப் பின்னர் மாநிலங்களின் செலவுகளில் ஏற்படும் பற்றாக்குறைகளுக்கு 15–ஆவது நிதி பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்துள்ளது. இந்த ஆணையத்தின் காலகட்டமான 2021–26–க்குள் தமிழகம் உள்ளிட்ட 17 மாநிலங்கள் இந்த நிதியைப் பெற தகுதி பெற்றுள்ளன. இது அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 275–இன் கீழ் இந்த மாநிலங்களுக்கு, வரி வருவாய் பகிர்வுக்குப் பிந்தைய வருவாய் பற்றாக்குறைக்கான மானியமாக வழங்கப்படுகிறது.

## 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாக்க நடவடிக்கை

- 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அதிகாரிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார். பிற்படுத்தபட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் அவர் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது.
- அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை எந்தவித தாமதமும் இல்லாமல் நடைமுறைப்படுத்த வேண்டும்.
- துறையின் கீழ் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும். பின்னர் சீரமைப்புப் பள்ளிகளை மேம்படுத்தி சிறப்பான கல்வி பயிற்சி அளித்து மாணவர்கள் மேற்படிப்புகளில் அதிகளவில் சேர வகை செய்திட வேண்டும். கல்வி உதவித் தொகையைத் தேவைப்படும் அனைவருக்கும் உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வதுடன், மிதிவண்டிகளைக் கல்வியாண்டின் துவக்கத்திலேயே அளித்திட வேண்டும்.
- இடஒதுக்கீடு: 69 சதவீத இடஒதுக்கீடு குறித்த வழக்கு உச்ச நீதமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வரும் போது மூத்த வழக்குரைஞர்களை நியமித்து இடஒதுக்கீட்டைப் பாதுகாத்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கீழ், பதிவு செய்யப்படாத வாரியங்களைப் பதிவு செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஆக்கிரமிப்பில் உள்ள வக்ஃப் சொத்துகளை மீட்கவும், சொத்து ஆவணங்களை கணினிமயமாக்கவும், வாரியப் பணிகள், சேவைகளை இணைய சேவையாக மாற்ற வேண்டும்.
- நரிக்குறவர், சீர்மரபினர், உலமா மற்றும் இதரப் பணியாளர்கள் நலவாரியங்கள் வாயிலாகப் பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் உதவிகள் சீரிய முறையில் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். நரிக்குறவர் சமுதாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அவர்களுக்கு வாழ்விடங்களை அடிப்படை வசதிகளுடன் உருவாக்கிட வேண்டும். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டு மனை வழங்கும் திட்டத்தை விரிவுப்படுத்தி அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.
- சிறுபான்மையினருக்கான சச்சார் கமிட்டியின் பரிந்துரைகளைச் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.
- இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர், கே.எஸ்.மஸ்தான் மற்றும் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கட்டாய ஹால்மார்க் திட்டம் அமல் அதிக மாவட்டங்கள் பட்டியலில் தமிழகம் முதலிடம்

- தங்க நகைகளின் தரத்தை நிர்ணயிக்கும் ஹால்மார்க் முத்திரையை கட்டாயமாக்கும் முதல்கட்டத் திட்டத்தில் தமிழகம், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களைச் சேர்ந்த அதிக மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன.
- கடந்த ஜுன் 16–ஆம் தேதி முதல் தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரையிடுவதை மத்திய அரசு கட்டாமாக்கியுள்ளது.
- இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், "கட்டாய ஹால்மார்க் திட்டம் 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 256 மாவட்டங்களில் முதல் கட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இதில் அதிகபட்சமாக தமிழகத்தில் 24 மாவட்டங்களும், குஜராத்தில் 23 மாவட்டங்களும், மேற்கு வங்கம் மற்றும் உத்தர பிரதேசத்தில் 19 மாவட்டங்களும் இடம் பெற்றுள்ளன. தில்லி, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தலா 12 மாவட்டங்களும், கர்நாடகத்தில் 14 மாவட்டங்களும், ஹரியாணாவில் 15 மாவட்டங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- இந்த மாவட்டங்களில் 14, 18, 22 காரட் தங்க நகைகள் மட்டும் ஹால்மார்க் முத்திரையுடன் விற்பனை செய்யப்பட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்திய தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (பிஐஎஸ்) 2000, ஏப்ரல் மாதம் முதல் தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை வழங்கி வருகிறது. தற்போது சுமார் 40 சதவீத தங்க நகைகள் ஹால்மார்க் முத்திரையிடப்படுகின்றன.

## தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ.40 ஆயிரம் கோடி கடனுதவி

- நபார்டு வங்கி நடப்பு நிதியாண்டில், தமிழக வளர்ச்சிப் பணிகளுக்காக, ரூ.40 ஆயிரம் கோடி கடனுதவி வழங்க உள்ளதாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தெரிவித்தார்.
- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் (நபார்டு வங்கி) 40–ஆவது நிறுவன தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அவர் காணொலி மூலமாக உரையாற்றிய போது, நபார்டு வங்கி.
- 2020–21–ஆம் ஆண்டு நிதியாண்டில், தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு ரூ.27,135 கோடி கடனுதவி வழங்கியது. நடப்பு நிதியாண்டில் ரூ.40 ஆயிரம் கோடி வழங்க உள்ளது என்றார் அவர்.
- நபார்டு வங்கியின் தமிழ்நாடு மண்டல அலுவலக வசதிகளை மேம்படுத்துவதற்காக, பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, விவசாயிகள் முன்னேற்றம், வங்கிக் கடனுதவியை அதிகரித்தல், ஊரக உள்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளிலும் நபார்டு வங்கி உதவி வருகிறது என்றார் அவர்.

## தமிழக பல்கலைக்கழகம் – ஆஸ்திரேலிய இடையே 83 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

- தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் – ஆஸ்திரேலியா இடையே 83 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்தார்.
- சென்னையில் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி ஆஸ்திரேலிய நாட்டு தூதரக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியது: உயர்கல்வித் துறையின் வளர்ச்சியை அதிகரிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதற்கான தொடர் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு வருகிறோம். அந்தவகையில் ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகளுடன் உயர்கல்வி தொடர்பான விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அப்போது தமிழக பல்கலைக்கழகங்கள்– ஆஸ்திரேலியா இடையே 83 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

## "மக்கள் பணியில் சங்கரய்யா" குறுந்தகடு வெளியீடு

- சுதந்திரப் போராட்ட வீரரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவருமான என்.சங்கரய்யாவின் 100–ஆவது பிறந்த நாளையொட்டி "மக்கள் பணியில் சங்கரய்யா" என்கிற குறுந்தகடு வெளியிடப்பட்டது.

## நீட் தேர்வின் தாக்கம்: நீதிபதி ஏ.கே. ராஜன் குழு அறிக்கை தாக்கல்

- நீட் தேர்வால் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்த நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழு தனது அறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கியது. மாணவர்கள், பெற்றோர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள், புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயே கருத்துகளைத் தொகுத்துள்ளதாக குழுவின் தலைவர் நீதிபதி ஏ.கே.ராஜன் தெரிவித்தார்.

## உலக இளைஞர் நலன் நாள் முதல்வர் வாழ்த்து

- உலக இளைஞர் திறன் தினத்தை ஒட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து, அவர் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி:
- இளைஞர்களே நாட்டின் வளர்ச்சிக்கான வித்துகள். தமிழ் நாட்டு இளைஞர்களின் திறன் அதிகரிக்க அரசின் திட்டங்கள் அமையும் என்பதால்தான் தொழிலாளர் நலத்துறையுடன் திறன் மேம்பாட்டுத் துறை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. நம் இளைஞர்களின் திறன் உலக அரங்கில் ஒளிரட்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## மேக்தட்டு: காவிரி மேலாண்மை ஆணையத்தின் அனுமதி அவசியம்

- காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடகம் மேக்தாட்டுவில் அணை கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்காது என்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தமிழக அனைத்துக் கட்சிக் குழுவினரிடம் உறுதியளித்தார்.

## மத்திய அரசின் கோவிட் நிவாரண உதவி

- மத்திய அரசின் தமிழ்நாடு கொரோனா நிவாரணத்திற்காக 800 கோடியை அளித்துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

## நோயாளிகளின் வீட்டுக்கே சென்று சிகிச்சை அளிக்கும் நடமாடும் மருத்துவ வாகனம்

- நடமாட முடியாத நிலையில் முடங்கி கிடக்கும் நோயாளிகளின் வீடுகளுக்கே நேரில் சென்று சிகிச்சை அளிக்கும் நடமாடும் மருத்துவ வாகன திட்டத்தை தமிழகத்தில் முதன்முதலாக திருவள்ளூரில் பால்வளத் துறை அமைச்சர் சா.மு. நாசர் தொடக்கி வைத்தார்.

## தமிழக சட்டப்பேரவை 100

- பழம்பெரும் பாரம்பரியம் கொண்ட தமிழக சட்டப் பேரவை நூற்றாண்டைக் காண்கிறது. இந்த நூற்றாண்டு விழா கொண்டாட்டத்துக்கு தலைமை வகிக்க குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்துள்ளார்.
- 1920–களின் இறுதியில் நடந்த தேர்தலில் நீதிக் கட்சி வென்ற அதன் தலைமையில் அமையப் பெற்ற சட்டப்பேரவை இப்போது நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் உருவப் படம் திறப்பு உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு தயாராகி வருகிறது.
- இந்தியாவின் அனைத்து மாநில சட்டப் பேரவைகள் மற்றும் மக்களவைக்கு நடத்தப்படும் தேர்தலுக்கு அடிப்படை நாதமாக இருப்பது, மக்கள் பிதிநிதித்துவ சட்டம்தான். இந்த சட்டம் 1952–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்துக்கு முன்பாக, மாகாணங்களில் தேர்தல்களை நடத்துவதற்கு வகை செய்த சட்டம், இந்திய அரசுச் சட்டம் 1919.

## தேசிய கடல் மீன்வள வரைவு மசோதா

- கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கட்டாயம் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
- 12 கடல் மைல் தூரத்திற்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்ல வேண்டும் எனில் கட்டணம் செலுத்த வேண்டும். கடலில் எந்த இடத்தில் மீன்பிடிக்கச் செல்கிறோம் என்பதை முன்னதாகவே மீன்வளத்துறைக்குத் தெரியப்படுத்தி இருக்க வேண்டும். கடலுக்குச் செல்லும்போது தாங்கள் எடுத்துச் செல்லும் அனைத்து பொருள்கள் குறித்தும், மீனவர்களின் பெயர் விவரங்கள் உள்ளிட்டவைகளை தெரிவித்திருக்க வேண்டும்.
- ஆழ்கடல் மீன்பிடித் தொழில்களில் ஈடுபடுத்தப்படும் விசைப்படகுகளில் படித்த கடல்சார் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட ஏராளமான கட்டுப்பாடுகள் இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்த மசோதா சட்டமாக்கப்படும் நிலையில் இச்சட்டத்தை செயல்படுத்தும் அதிகாரத்தை கடலோரக் காவல் படை அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

## தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர் சேர்க்கை நிலை: முதல்வரிடம் நீதிபதி குழு அறிக்கை தாக்கல்

- தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை நிலையை ஆராய அமைக்கப்பட்ட நீதிபதி த.முருகேசன் தலைமையிலான குழு தனது அறிக்கையை தாக்கல் செய்தது. தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அறிக்கை அளிக்கப்பட்டது.

## நீர்வழிப் போக்குவரத்தை அதிகரிக்கும் திட்டம்

- சென்னை–புதுச்சேரி, காரைக்கால்–யாழ்ப்பாணம் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் விரைவில் ஒப்பந்ததாரர்களைத் தேர்வு செய்ய உள்ளது.
- உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தினை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து பெரிய துறைமுகங்களிலும் சுங்கத்துறை

கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட உள்நாட்டு முனையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இம்முனையங்களுக்கு வந்து செல்லும் உள்நாட்டுக் கப்பல்களுக்கு பல்வேறு விதமான கட்டணச் சலுகைகளையும் துறைமுக நிர்வாகங்கள் அளித்து வருகின்றன. துறைமுக கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் புதிய வழித்தடங்களில் பயணிகள் கப்பல் போக்குவரத்தினை அறிமுகம் செய்யும் பணியை கப்பல் போக்குவரத்து அமைச்சகம் விரைவுப்படுத்தியுள்ளது. இதன் ஒரு பகுதியாக சென்னையிலிருந்து கடலூர், நாகப்பட்டினம் வழியாக புதுச்சேரி வரையிலும், காரைக்கால்–யாழ்ப்பாணம் (இலங்கை) இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கிடுவதற்கான ஒப்பந்தப் புள்ளி விரைவில் கோரப்பட உள்ளது. இதற்கிடையே இத்திட்டத்தில் பங்கேற்க ஆர்வமுள்ள நிறுவனங்களுடன் கலநதுரையாடல் திங்கள் மற்றும் செவ்வாய்கிழமை நடைபெற்றது.

## முதலீட்டாளர்களின் முதல் முகவரி இனி தமிழகம்

- முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற, "தொழில் முதலீட்டாளர்களின் முதல் முகவரி–தமிழ்நாடு" என்ற இந்த நிகழ்ச்சியில், 35 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. மேலும், ஒன்பது ஆலைகளுக்கான அடிகல்லும், 5 ஆலைகளின் செயல்பாடுகளை தொடக்கியும் வைத்தார். இதைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது:
- ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலம், மிகத் துயரமான கரோனா காலமாகும். தமிழ்நாடு அரசின் துணிச்சலான, துரிதமான நடவடிக்கைகளின் காரணமாக கரோனாவை வென்ற காலமாக இதனை மாற்றினோம். கரோனா தமிழ்நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதையும் எதிர்கொள்ளும் வல்லமை கொண்டதாக மாநிலத்தை மாற்றியிருக்கிறோம்.
- தெற்காசியாவிலேயே உகந்த மாநிலம்: கரோனா காலத்திலும் கணிசமான முதலீடுகளை தமிழகம் ஈர்த்துள்ளது. சவால்களை எதிர்கொள்ளும் எங்களது அரசின் திறன் என்றென்றும் நிலைத்து நீடித்து இருக்கும். உலகளவில் உற்பத்தித் துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தாலும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துணர்வு பெற்று இயங்கத் தொடங்கியுள்ளது.

## ஒற்றைச் சாளர இணையம் 2.0

- தொழில் புரிவதை எளிதாக்கவும், அரசின் அனுமதிகளை விரைந்து வழங்கிடவும் ஒற்றைச் சாளர இணையதளம் 2.0–வை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- இது குறித்து அவர் தனது உரையில் கூறியது: இப்போதுள்ள முதலீட்டாளர்களுக்கு மட்டுமின்றி, புதிய முதலீட்டாளர்களுக்கும் உதவிடும் வகையில் 24 துறைகளின் 100 சேவைகள் கொண்ட ஒரு மேம்படுத்தப்பட்ட இணையதளமாக அது இருக்கும். இணைய முறையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். உரிய துறைகளுக்கு அவை உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.
- செயற்கை நுண்ணறிவு உதவியுடன் வாடிக்கையாளர்களுடன் உடனடி உரையாடல்கள் நடத்தப்படும். இந்த வசதிகள் அனைத்தும் ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 மூலமாக கிடைக்கும். கூடுதலாக 210 சேவைகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

## தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இலக்கு 1 டிரில்லியன் டாலர்

- பல்வேறு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் துவங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தமிழ்நாட்டின் மாநில உற்பத்தி அளவு 1 டிரில்லியன் டாலர் (70 இலட்சம் கோடி) என்ற இலக்கை நோக்கி பயணிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

## முப்பரிமான களைதல் மையம்

- சென்னை IIT விஞ்ஞானிகள் மற்றும் செயின்ட்கோபைன் நிறுவனம் இணைந்து ஓமந்தூரார் அரசு மருத்துவ கல்லரியில் பயன்படுத்திய PPE களைதல் மையத்தை முப்பரிமான முறையில் உருவாக்கியுள்ளது.
- இதை சுகாதார அமைச்சர் மா.சுப்பிரணியன் துவங்கி வைத்தார்.

## ஆகஸ்ட் 2–இல் பேரவை நூற்றாண்டு விழா

- புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் உருவப் படத்தை ஆகஸ்ட் 2–ஆம் தேதி, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைக்கிறார். சட்டப்

பேரவையின் நூற்றாண்டு விழாவுக்கும் அவர் தலைமை தாங்குகிறார்.

- இதுகுறித்து செய்தியாளர்களுக்கு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அளித்த பேட்டி:
- சட்டப் பேரவை நூற்றாண்டு விழா, ஐந்து முறை முதல்வராக இருந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் உருவப்படத் திறப்பு நிகழ்ச்சி ஆகியன ஆகஸ்ட் 2–ஆம் தேதி மாலை 5 மணிக்கு புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் நடைபெறுகிறது. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உருவப்படத்தை திறந்து வைக்கிறார். விழாவுக்கு, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமை தாங்குகிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகிக்க உள்ளார்.

## நியூமோகாக்கல் தடுப்பூசி

- இந்தியாவில் ஐந்து வயதுக்கு உள்பட்ட 12 லட்சம் குழந்தைகள் நிமோனியா, மூளைக்காய்ச்சல் போன்ற பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர்.
- தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில், அதற்கான தடுப்பூசி போடப்படுகிறது.

## தமிழக அஞ்சல்துறை சார்பில் வாகனக் காப்பீடு திட்டம்

- தமிழக அஞ்சல்துறை சார்பில், வாகனக் காப்பீடு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி, இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு காப்பீடு வழங்கப்படுகிறது.
- பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில், புதிய சேவைகளை இந்திய அஞ்சல்துறை அவ்வப்போது அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, அரசு சான்றிதழ்களை வழங்குவதற்காக அஞ்சலகங்களில் பொது சேவை மையம் செயல்பட்டு வருகிறது.
- இதன் தொடர்ச்சியாக வாகனக் காப்பீடு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி உள்ளது. இதற்காக, பஜாஜ் அலையன்ஸ், டாடா ஏஐஜி ஜெனரல் இன்சூரன்ஸ் போன்ற நிறுவனங்களுடன் அஞ்சல்துறை ஒப்பந்தம் செய்துள்ளது.

## காற்றில் அதிக மாசு

- சென்னை மாநகராட்சியை சுற்றியுள்ள பகுதியில் எடுக்கப்பட்ட தரவுகளில் காற்றில் லெட், சிலிகா, நிக்கல் போன்ற தனிம மாசுக்களின் அளவு அதிகளவில் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா சுகாதார ஆற்றல் துவக்க அமைப்பின் பிப்ரவரி மற்றும் மார்ச் மாத நிலவரப்படி இந்த தகவல்களை ஆராயப்பட்டுள்ளது.
- 2.5 அளவுள்ள நுண்துகள்களின் பாதிப்புகள் அதிக அளவில் காற்றில் கலந்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

| Location | Lead | Silica | Nickel |
|---|---|---|---|
| Vysarpadi | 0.09 | 18 | 0.015 |
| Kattupalli | 0.12 | 2.6 | 0.002 |
| Kasimedu | 0.08 | 7.5 | 0.009 |
| Tirusulam | 0.06 | 25.8 | 0.016 |
| Velachery | 0.04 | 7.3 | 0.005 |
| Sholinganallur | 0.04 | 5.1 | 0.003 |
| T.Nagar | 0.04 | 8.8 | 0.006 |
| Parry's Corner | 0.05 | 13.8 | 0.009 |
| Ambattur | 0.04 | 7.6 | 0.017 |

## பாதுகாப்பு உபகரண தொழிற்சாலை முனையம்

- தமிழ்நாடு மற்றும் உத்திர பிரதேசத்தில் பாதுகாப்பு உபகரண உற்பத்தி தொழிற்சாலை முனையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தல் பணிகள் நடைபெற்று வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பாதுகாப்பு தொழிற்சாலை முனையங்கள் மூலம் தமிழ்நாட்டில் சேலம், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, ஓசூர் போன்ற பகுதிகளில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த இயலும் தமிழ்நாட்டின் தொழில்மேம்பாட்டு அமைப்பான TIDCO மற்றும் உத்திரபிரதேச தொழில் மேம்பாட்டு ஆணையங்கள் 50க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

## 33 லட்சம் வீடுகளுக்கு குழாய் வழி சமையல் எரிவாயு

- குழாய் வழியே 33 லட்சம் வீடுகளுக்கு சமையல் எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் திட்டத்தை டோரன்ட் கேஸ் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்த நிறுவனமானது சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் எரிவாயு விநியோகத் திட்டத்துக்காக ரூ.5,000 கோடி முதலீடு செய்துள்ளது. அதன் மூலமாக 5,000

பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக, எண்ணூர் அருகே வல்லூரில் சிட்டிகேட் நிலையம் என்ற பெயரில் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 1.4 ஏக்கரிலான இந்தத் திட்டத்தின் மூலம் 33 லட்சத்துக்கும் மேலான வீடுகளுக்கு குழாய் மூலமாக சமையல் எரிவாயு விநியோகம் செய்திட முடியும்.

## தகைசால் தமிழர் விருது: முதல்வர் உத்தரவு

- தமிழ்நாட்டின் வளர்ச்சியில் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், தகைசால் தமிழர் விருது உருவாக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
- இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு: இந்த விருதுக்கான விருதாளரை தேர்வு செய்ய முதல்வர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் தொழில்துறை, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோர் இருப்பர்.
- ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்யப்படும் தகைசால் தமிழர் விருது பெறும் விருதாளருக்கு ரூ.10 லட்சத்துக்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் சுதந்திர தின விழாவின் போது முதல்வரால் அளிக்கப்படும்.

## சட்டப்பேரவை நூற்றாண்டு விழா தலைமைச் செயலக கட்டடத்தில் 'தமிழ் வாழ்க' பலகை

- சட்டப்பேரவை நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவப்படம் திறப்பு விழாவை ஒட்டி, தலைமைச் செயலக பிரதான கட்டடத்தின் மேற்புறத்தில் "தமிழ் வாழ்க பலகை வைக்கப்பட்டுள்ளது.
- சென்னை, தலைமைச் செயலகத்தில் வரும் ஆகஸ்ட் 2-ஆம் தேதி சட்டப்பேரவை நூற்றாண்டு விழா கொண்டாடப்படவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.
- நிகழ்வில், குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமைச் செயலக வளாகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப் படத்தைத் திறந்து வைக்க உள்ளார். இந்நிலையில் தலைமைச் செயலகத்தின் 2 மற்றும் 3-ஆம் எண் நுழைவு வாயில் கட்டடத்தின் மேல்புறத்தில் 'தமிழ் வாழ்க என்னும் வாசகம் அடங்கிய 2 பெயர் பலகைகள் புதிதாக வைக்கப்பட்டுள்ளன.

## சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் மீள்விற்காக புதிய குழு

- தமிழ்நாடு சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் கோவிட்-19 காலகட்டத்திற்கு பிறகு மறு மீள்வு அடைவதற்கான நடவடிக்கைகளுக்காக IAS அதிகாரி N.சுந்தரேசன் தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது.

## கணினி மையக் கருவி உருவாக்கம் இளம் விஞ்ஞானிக்கு முதல்வர் நேரில் பாராட்டு

- கணினி மையக் கருவியை உருவாக்கிய திருவாரூர் மாவட்ட இளம் விஞ்ஞானி மாதவை, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அழைத்துப் பாராட்டினார்.
- திருவாரூர் மாவட்டம் பழவனக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் எஸ்.எஸ்.மாதவ், ஒன்பதாம் வகுப்பு படிக்கும் அவர், கணினியில் மிகுந்த ஆர்வம் கொண்டு கையடக்க கணினி மையச் செயலாக்கக் கருவியை (சிபியு) உருவாக்கியுள்ளார்.
- இந்தக் கருவியை இணையதள மூலமாக குறைந்த விலைக்கு விற்பனையும் செய்து வருகிறார்.
- இதையறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், இளம் விஞ்ஞானி மாதவை நேரில் அழைத்து பாராட்டுத் தெரிவித்தார்.
- தலைமைச் செயலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது, மாதவின் உயர்படிப்பு, ஆராய்ச்சிக்கு தமிழ்நாடு அரசு அனைத்து விதமான உதவிகளையும் செய்யும் என்று முதல்வர் உறுதியளித்ததாக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடான்' திட்டத்தில் ஒசூரில் விமான நிலையம்

- பிராந்திய அளவிலான விமான சேவைகளுக்குரிய உடான் திட்டத்தின் கீழ் முக்கிய தொழில் நகரமாக இருக்கும் ஒசூரில் விரைவாக விமான நிலையம் அமைக்கக் கோரி அதிமுக உறுப்பினர் தம்பிதுரை மாநிலங்களவையில் வேண்டுகோள் விடுத்தார்.

## பயிர்க் காப்பீட்டுத் திட்டம்: பழைய நிலையே தொடர வேண்டும்

- பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பழைய நிலையிலேயே மத்திய அரசின் பங்கு அளவு தொடர வேண்டுமென பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

- இது குறித்து முதல்வர் எழுதியுள்ள கடித விவரம்:
- தமிழ்நாட்டில் விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்திட மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விவசாயிகள் நலன்சார்ந்த பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் மூலமாக அவர்களுக்கான பொருளாதார உயர்வை சாத்தியப்படுத்தி வருகிறது. வேளாண்மைத் துறையின் பெயரை, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை என்று மாற்றியமைத்ததுடன், விவசாயத்துக்கென தனி நிதிநிலை அறிக்கையும் நிகழாண்டில் தாக்கல் செய்யப்பட உள்ளது.
- பிரதமரின் பயிர்க் காப்பீடு: தமிழ்நாட்டில் எதிர்பாராத சூழ்நிலைகளால் விவசாயிகள் பாதிக்கப்படும்போது அவர்களைக் கைதூக்கி விடும் வகையிலான திட்டங்களில் ஒன்றாக, பிரதமரின் பயிர்க்காப்பீட்டுத் திட்டம் விளங்குகிறது. மாநில அரசின் தீவிரமான முயற்சிகளின் காரணமாக, இந்தத் திட்டத்தின்கீழ் அதிகளவு விவசாயிகள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், காப்பீடு செய்யப்பட்ட பரப்பளவும் அதிகரித்துள்ளது.
- ஆனால், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் தமிழகத்துக்கான நிதி பொறுப்புடைமை அதிகரித்து வருகிறது. கரோனா நோய்த்தொற்று போன்ற சூழலில் இதுபோன்று அதிகரிக்கும் நிதிச் சுமையால் திட்டத்தைத் தொடர்வதில் சிரமம் ஏற்படுகிறது. கடந்த 2016–17–ஆம் நிதியாண்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு தலா 49 சதவீதமும், விவசாயிகளின் பங்கு 2 சதவீதமுமாக இருந்தன. ஆனால், இப்போது, மத்திய அரசின் பங்கானது பாசனப் பகுதிகளுக்கு 25 சதவீதமும், மானாவாரிப் பகுதிகளுக்கு 30 சதவீதமாக நிர்ணயித்து, மாநில அரசின் பங்கானது 61 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இதனை ரொக்கத் தொகை அளவில் குறிப்பிட வேண்டுமானால், கடந்த 2016–17–ஆம் நிதியாண்டில் ரூ.566 கோடியாக இருந்த தொகை இப்போது 239 சதவீதம் அதிகரித்து ரூ.1918 கோடியாக உயர்ந்துள்ளது. இந்தத் தொகையுடன் கூடுதல் கட்டணமாகச் சேர்த்து பிரிமியத்தொகையாக நிகழ் நிதியாண்டில் காப்பீட்டு நிறுவனங்கள் நிர்ணயித்துள்ள தொகை ரூ.2,500 கோடியாகும். இது மாநில அரசுக்குமிகப் பெரிய சுமையையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

## மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்

- தமிழகத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் ஆகஸ்ட் 5–ஆம் தேதி கிருஷ்ணகிரியில் தொடக்கி வைக்க உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.
- அப்போது மருத்துவக் களப்பணியாளர்களுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி செலுத்தும் முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைத்தார். அதேபோன்று கர்ப்பிணிகளுக்கு மஞ்சள் காமாலை பாதிப்பு உள்ளதா என்பதைக் கண்டறியும் மாநில அளவிலான பரிசோதனைத் திட்டத்தையும் அவர் தொடக்கி வைத்தார்.

## ராணுவ வீரர்கள் தியாகத்தின் திருவுருவங்கள்

- எல்லைகளைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ வீரர்கள், தியாகத்தின் திருவுருவங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.
- பாகிஸ்தானுடனான போரில் இந்தியா வெற்றிக்கொடியை நாட்டியதன் பொன்விழா கொண்டாட்டம் சென்னையில் நடைபெற்றது.
- தமிழகத்தில் கடந்த 10 நாள்களாக எடுத்துச் செல்லப்பட்ட வெற்றி தீபத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் வகையிலான நிகழ்வு முதல்வர் தலைமையில் நடந்தது. வெற்றி தீபத்தை பெற்றுக் கொண்ட முதல்வர் அதற்கு வீரவணக்கம் செலுத்தினார். அதன்பின்பு, 1971– ஆம் ஆண்டு நடந்த போரில் வீரமரணம் அடைந்தோருக்கு புகழஞ்சலி செலுத்தி, விழுப்புண் பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களை அவர் வழங்கினார்.

## சூரிய மின்னுற்பத்தியில் அமெரிக்க நிறுவனம் தமிழ்நாட்டில் முதலிடம்

- அமெரிக்காவை சேர்ந்த போட்டோ ஓல்டாயிக் (சூரிய மின் ஒளி தகடு) நிறுவனமான பர்ஸ்ட் சோலார் தமிழ் நாட்டில் 3.3 ஜிகா வாட் சூரிய மினனுற்பத்திக்காக 684 மில்லியன் டாலர் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

## போர்பனைகோட்டையில் அகழாய்வு

- தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் புதுக்கோட்டைமாவட்டம்போர்பனைகோட்டையில் அகழாய்வு பணிகளை ஆரம்பிக்க திட்டமிட்டு இப்பணிகளை சுற்றுச்சூழல் அமைச்சர் மெய்யநாதன் துவங்கி வைத்தார். 5 அடுக்குகளாக இந்த அகழாய்வு பணிகள் நடைபெற்ற உள்ளது.